# உதயன்




www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 261 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 29 திங்கட்கிழமை (13/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


### சிவந்தனின் உண்ணாநோன்பு நிறைவு

லண்டன், ஒக.13

கடந்த 21 நாள்களாக லண்டனில் உண்ணா நோன்பில் ஈடுபட்டு வந்த சிவந்தன் கோபி நேற்று மாலையுடன். தன்னுடைய சாத்வீகப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

ஒலிம்பிக் போட்டியின் போது உலகின் கவனம் முழுவதும் லண்டன் மாநகரம் பக்கம் திரும்பிய போது அதனை ஈழத் தமிழர்கள் பிரச்சினையை வெளிப்படுத்தும் களமாக்க ஈழத்தமிழரான சிவந்தன் உண்ணா நோன்பில் குதித்தார்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஈழப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்த உண்ணா நோன்பில் குதித்த சிவந்தனுக்கு ஈழ ஆதரவு அமைப்புகள் பலவும் ஆதரவு தெரிவித்

பார்க்க பக்கம் 4

# போர்க் குற்றவாளிகள் மீது உடன் நடவடிக்கை தேவை

## டெசோ மாநாட்டில் பரபரப்புத் தீர்மானம்

சென்னை, ஒகஸ்ட் 13

''இலங்கையில் நடந்தேறிய இறுதிப்போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களில் ஈடுபட்ட போர்க் குற்றவாளிகள் மீது ஐக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களின்பிரச்சினைகள்தொடர்பாக ஐ.நா. மூலம் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்'' இவ்வாறு சென்னையில் நேற்றுநடைபெற்ற டெசோ மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சென்னைராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:

– இலங்கை போர்க் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

– தமிழர் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்

– இலங்கையில் நடைபெறும் அநீதிகளை இந்திய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? ஈழத் தமிழர் தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே தீர்மா

பார்க்க பக்கம் 4


**8** இமாச்சலப் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட 52 பேர் உயிரிழந்தனர்.

**11** கட்டடங்கள் உயர்ந்தால் மட்டும் போதாது. மாணவர்களின் கல்வியிலும் அடைவுமட்டம் உயர்வதோடு அவர்களிடத்தில் அக்கறையும் செலுத்தப்பட வேண்டும்.

**15** முட்டக்களப்பு உன்னிச்சை பாலக்கொடிச்சேனை பள்ளிவாசல் இனந்தெரியாத விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

**17** நாடு முழுவதும் ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு 6 மாதங்களின் பின் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.


# டெசோவுக்கு எதிராகப் போர்க்கொடி இந்தியத் தூதர் இல்லம் முற்றுகை

### கருணாநிதி, சம்பந்தனின் கொடும்பாவிகள் எரிப்பு
### சிங்கள கடும்போக்கு அமைப்புகள் ஆவேசம்

கொழும்பு, ஒக.13

தி.மு.கவின் தலைமையில் தமிழகத்தில் நடைபெற்ற 'டெசோ' அமைப்பின் மாநாட்டுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து தேசிய அமைப்புகளின் ஒன்றியம் நேற்று கொழும்பில் பெரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

தேர்ஷ்டன் வீதியில் அமைந்துள்ள இந்தியத் தூதுவரின் வாசஸ்தலத்தின் முன்னால் நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தி.மு.கவின் தலைவரும், முன்னாள் தமிழக முதல்வரு

பார்க்க பக்கம் 4



# ஈழத் தமிழரின் நலன்காக்க ஐ.நா. களமிறங்க வேண்டும்

### கர்ச்சிக்கிறார் கருணாநிதி

கொழும்பு, ஒக.13

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும்கூட ஈழத்தமிழர் வாழும் பகுதிகளில் அரச அடக்குமுறை தொடர்ந்து தீவிரமடைகிறது. எனவே, இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் மறுவாழ்வுக்காகவும் மனித உரிமைகளைக் காக்கவும் ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும்.

- இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் டெசோ மாநாட்டை முன்னிட்டு ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு ஆய்வரங்கத்தை நேற்

பார்க்க பக்கம் 4

# திட்டமிட்டபடி சென்னையில் நடந்தது 'டெசோ' மாநாடு

### உயர்நீதிமன்ற அனுமதியுடன்

கொழும்பு, ஒக.13

டெசோ மாநாட்டுக்கு அனுமதி கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சாதகமான தீர்ப்புக் கிடைத்ததையடுத்து திட்டமிட்டபடி வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று டெசோ மாநாடு நடைபெற்றது.

சென்னையில் தி.மு.க. ஏற்பாட்டில் நேற்று வை.எம். சி.ஏ. மைதானத்தில் டெசோ மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்

பார்க்க பக்கம் 4

# மட்டக்களப்பில் திடீர் சூறாவளி

### 100 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, ஒக. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு. - போரத்தீவு பகுதியை ஊடறுத்துநேற்று மாலை திடீரென வீசிய சுழல் காற்றால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திடீர் சுழல் காற்றால் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், எனினும் சேதவிவரங்கள் முற்றாகக் கிடைக்கவில்லை எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த சூறாவளியின்போது பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்களின் எண்ணிக்கை 100இற்கும் அதிகம் என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் போது பொது மக்களுக்கு எவ்வித உயிர் சேதங்களும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (ங)

# நல்லூர் திருவிழாவுக்கு வந்த பெண் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

சாவகச்சேரி, ஒக. 13

நல்லூரில் நேற்று நடைபெற்ற கைலாசவாகனத் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக வரணியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பெண் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

நேற்றுமாலை 4 மணியளவில் மட்டுவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் தனது குடும்பத்தாருடன் வந்து கொண்டிருந்த வேளை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் அதன் சில்லுக்குள் அகப்பட்டு குறித்த பெண் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் திருகோணமலை கக்விசன் வீதியைச் சேர்ந்த திருகோணமலை பிரதேச செயலகத்தில் எழுதுநராகப் பணியாற்றும் திருமதி செந்தில்நாதன் ஸ்வதேகி (வயது-37) என்ற குடும்பப் பெண்ணே பலியா

பார்க்க பக்கம் 4

# டெல்றொக்ஷனின் சாவுக்கு மஹிந்த பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்

### சிறிதுங்க ஜயசூரிய கோரிக்கை

சாவகச்சேரி, ஒக. 13

டெல்றொக்ஷனின் சாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என சோஷலிச சமத்துவக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு :-

போர் முடிந்த பின்பு நாம் அனைவரும் நாட்டில் சமாதானத்துடன் வாழலாம் என்று எண்ணியிருந்தோம். ஆனால் இப்போது நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பார்த்தால் இன்னும் போர் முடிவடையவில்லை என்று தெளி

பார்க்க பக்கம் 4

# படையினரின் ஆதரவுடனேயே வேட்பாளர்கள் மீது தாக்குதல்

### அரியநேத்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையானின் ஆதரவாளர்களும் அவரது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்தோருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இவர்களின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு படையினரும், பொலிஸாரும் ஆதரவாக உள்ளனர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

அத்துடன், நடைபெற இருக்கின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வன்முறையற்ற சுதந்திரமான ஒரு தேர்தலாக நடைபெறுவதற்கு தேர்தல்

பார்க்க பக்கம் 4

# புலிகள் செய்யாத நாசத்தை மஹிந்த அரசு செய்கிறது

### ரணில் விக்கிரமசிங்க ஆவேசம்

கொழும்பு, ஒக. 13

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு இடமளித்து, எதிர்காலத்தைப் பொறுப்பேற்க ஆவலுடன் காத்திருக்கும் சிறுவர்களின் வாழ்க்கையை மஹிந்த சிந்தனையும், மஹிந்த அரசும் நாசமாக்கியுள்ளன. இவ்வாறானதொரு செயலை விடுதலைப் புலிகள் கூட செய்ததில்லை எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, இந்நிலை நீடித்தால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நாட்டில் எஞ்சியிருப்

பார்க்க பக்கம் 4

# பௌத்தர்களின் எதிரியாக என்னை ஊடகங்கள் வெளிக்காட்ட முயற்சி

## அமைச்சர் ஹக்கீம் கவலை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய தலைவரை - இந்த நாட்டிலே இருக்கின்ற நீதியமைச்சரை சிங்கள சமூகத்தின் ஒரு விரோதியாகவும் சிங்கள பௌத்தத்தின் எதிரியாகவும் காட்டுவதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளை அரசின் சிங்கள ஊடகங்கள் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்ற ஓர் அசிங்கம் நடந்துகொண்டிருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை மத்திய குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை மருதமுனைக் கடற்கரையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு ரவூப் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:-

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை சிங்கள மக்களின் விரோதியாகக் காட்டுவதனூடாக சரிந்துபோகின்ற சிங்கள வாக்கு வங்கியை நிமிர்த்திக்கொள்ளலாம் என்கின்ற உபாயமாகவும் இருக்கலாம்.

ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அவதானத்தின்படி இந்தத் தேர்தலில் நாங்கள் எங்களுடைய வாக்கு வங்கியைக் கூட்டிக்கொள்வதற்கான ஒரு முயற்சியாக இனவாதம் பேசுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

அண்மைக்காலமாக எந்தத் தேர்தலிலும் சரியான ஓர் இயல்புநிலை காணப்படவில்லை. தேர்தல்களுடைய நம்பகத்தன்மை மோசடிகளால் மாத்திரமல்ல, அந்தத் தேர்தல்களிலே கிழக்கிலே வாழுகின்ற மூன்று இன மக்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற தரப்புகள் பங்குபற்றவில்லை.

அமையப்போகின்ற மாகாணசபையிலே சகல இனங்களும் சுயாதீனமாக சுயவிருப்போடு தெரிவு செய்கின்ற நம்பகத்தன்மையுள்ள உறுப்பினர்கள் வந்து அமரப்போகின்றார்கள் என்ற விடயம் மிகக் கூர்மையாக நாங்கள் அவதானிக்க வேண்டிய விடயமாகும்.

இந்தத் தேர்தலை முஸ்லிம்கள் விவேகமாகவும், சாணக்கியத்தோடும், தூர நோக்கோடும் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது என்பதோடு முஸ்லிம் காங்கிரஸின் அதிகபட்ச வெற்றியை உறுதிப்படுத்தவேண்டும் - எனத் தெரிவித்தார். (ங)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு பொருள்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஓக.13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் மருந்து கட்டும் அறைக்கு பாவனைப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்களின் சேவைகளால் நன்மை பெற்ற நோயாளர்கள் இந்த அன்பளிப்புப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

மட்டுவிலைச் சேர்ந்த எஸ். லோகநாதன் என்பவர் குடிதண்ணீர் வடிகட்டியையும், சாவகச்சேரியைச் சேர்ந்த க.வைகுந்தராசா என்பவர் மருந்து கட்டும் அறையில் பயன்படுத்தக்கூடிய குப்பைத் தொட்டியையும் சங்கத்தானையைச் சேர்ந்த இ.மதனகுமார் என்பவர் சுவர்க் கடிகாரத்தையும் வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு குடிநீர் வடிகட்டி அண்மையில் நோயாளர் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை தெரிந்ததே. (3-9)



தீக்கிரையாக்கப்பட்ட பள்ளிவாசலை பார்வையிடும் அமைச்சர் ஹக்கீம்..

# கால்நடை வளர்ப்புத் திட்டம்

வடமராட்சி, ஓக. 13

இனவிருத்தி பண்ணைத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு குடத்தனை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஜமுனாபாரி ஆட்டுக் கடாக்களும் நான்கு ஜமுனாபாரி மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்தின் நிதி மூலம் பெறப்பட்ட நல்லின இனவிருத்தி ஆடுகளை பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி யூலியானா குறித்த பயனாளிக்கு வழங்கினார்.

எதிர்காலத்தில் பிரதேசமட்டத்தில் நல்லின ஆடுகளான ஜமுனாபாரி ஆட்டினத்தைப் பெருக்கி ஏனையவர்களையும் பயனாளிகளாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டை அதிகரிக்கவுமே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(3-8)

## மடுத்தேவாலயத்துக்கான ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஓக.13

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மன்னார் மடுத்தேவாலய வருடாந்த திருவிழா நாளைமறுதினம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் 4 முதல் 5 லட்சம் வரையான பக்தர்கள் இங்கு கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மடுத்தேவாலயத்தை நோக்கிவரும் மக்களுக்கான சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபை செயலாளர் சி.எம். யேசுநேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு. விக்டர் சூசை இதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றார்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்கதர்கள் வரவுள்ளதால் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. (3-41)

# நாட்டுக்கூத்தில் நடித்தார் ராதிகா சிற்சபேசன் எம்.பி.

## நிதியுதவி வழங்குவதற்காக

சணிபுரூக் வைத்தியசாலை மற்றும் வவுனியாவிலுள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் சிறுவர் இல்லத்துக்கு நிதி சேர்க்கும் நிகழ்வு நேற்று மாலை 5.30 மணிக்கு கனேடிய கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிதி சேர்க்கும் நிகழ்வில் ''விஜய மனோகரன்'' என்ற தலைப்பில் தென்மோடி நாட்டுக் கூத்தொன்று நடைபெற்றது. இதில் கனேடிய தமிழ் கலைஞர்களுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் முக்கிய கதாபாத்திரமேற்று நடித்துள்ளார். இதன் மூலம் கிடைக்கப் பெறும் நிதி கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்கி வரும் சணிபுரூக் வைத்தியசாலைக்கும், வவுனியாவில் இயங்கிவரும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் சிறுவர் காப்பகத்திற்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# கணவன் தாக்கி மனைவி காயம்

கணவனால் தாக்கப்பட்ட மனைவிக்கு மண்டை பிளந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பாலாவி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3-9)

# ஈழத்தமிழர் காவியம் படைக்காமல் ஓயேன்

## வைரமுத்து சபதம்

கவிஞர் வைரமுத்து எழுதிய ''மூன்றாம் உலகப் போர்'' என்னும் நூலைத் திறனாய்வு செய்த வைரமுத்துவின் மகன் கபிலன், இதுவரை எத்தனையோ இலக்கியங்கள், கவிதைகள், நூல்கள் படைத்த என் தந்தைக்கு இந்த விழா மூலம் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். அவர் ஈழத் தமிழர்களின் அவலம் குறித்து ஒரு காவியம் எழுத வேண்டும். அது அவர்களின் பிரச்சினைகளை உலகுக்கு உணர்த்துவதாக அமைய வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.



கடந்த 4 ஆம் திகதி தேனியில் நடைபெற்ற கவிஞர் வைரமுத்து எழுதிய மூன்றாம் உலகப் போர் என்னும் நூல் திறனாய்வு நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விழாவில் அடுத்துப் பேசிய கம்பம் செல்வேந்திரன், மூன்றாம் உலகப் போர். இது கவிஞரின் 36-ஆவது நூல். புத்தகமாக வெளிவந்த மூன்று மாத காலத்திற்குள் மூன்று பதிப்புகளைக் கண்டுவிட்டது. எனவே, கபிலன் வைத்த கோரிக்கையை நினைவில் வைத்து, ஈழத் தமிழர் காவியம் படையுங்கள் என்று தன் பங்குக்கும் வேண்டுகோள் வைத்தார்.

இவ்விழாவில் இறுதியாக உரையாற்றிய கவிஞர் வைரமுத்து எல்லோரும் மகனிடம்தான் வேண்டுகோள் வைப்பார்கள். ஆனால், என் மகன் என்னிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறான். நிச்சயமாக, ஈழத் தமிழர் அவலம் குறித்து காவியம் எழுதாமல் நான் போகமாட்டேன்- என்றார். (3)



உதயன் இணைய வானொலி
www.uthayanradio.com
தினமொரு பரிசுக் குலுக்கல்
தென்னிந்தியாவின் பெங்களூரில் நீதவானாகக் கடமையாற்றி குற்றவாளி ஒருவனுக்குத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பை வழங்குந்தறுவாயில் "இன்னொருவனுக்குத் தண்டனை கொடுப்பதற்கு நான் யார்?" என்ற தத்துவ விசாரணை எழுந்ததனால் ஆன்மீக நாட்டங்கொண்டு "முத்தியானந்தா" என்ற தீட்ஷா நாமம் பெற்று யாழ்ப்பாணத்திற்கு வந்து இறைபணி செய்த சித்தர் யார்?
1. குடைச்சுவாமிகள்
2. செல்லப்பா சுவாமிகள்
3. யோகர் சுவாமிகள்
4. கடையிற்சுவாமிகள்
பெயர் :......
முகவரி :......
வயது :...... தொ.பே. இல :......
சரியான விடைகளை எழுதி. பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி. நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு
1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா
நேற்றைய புதிருக்கான விடை : சதாவசிவம்
வெற்றிபெற்றோர் :
ஆ. ஜீவகுமார் (அக்கரப்பத்தனை)
பி. மாலினி (மு மாவாழ)
சி. சிவரதிகன் (கந்தர்மடம்)
அனுசரணை:
Study & Work in UK, Australia & Canada
2012 September Intake
" இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள் "
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான SponsorShip பிரச்சினையா ? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்
Colombo T.P : 072 9994777, 011 7208752, Jaffna T.P : 072 7685691, 077 2479683
V T L Mangement, 01, Deanston House, Denston Place, Colombo - 03

# பிறமாவட்டங்களுக்குச் செல்லும் அரச பஸ்களில் உள்ளூர் பயணிகள்

## இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். நகரிலிருந்து பிறமாவட்டங்களுக்குச் செல்லும் அரச பஸ்களிலும் சரி பிறமாவட்டங்களிலிருந்து யாழ். நகருக்குவரும் அரச பஸ்களிலும் சரி உள்ளூர் பயணிகள் பயணிக்கமுற்பட்டால் அவர்களை ஏற்றிச் செல்லல் வேண்டும்.

பயணிகளை ஏற்றாமல் சென்று அவர்களுக்கு போக்குவரத்து நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடாது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.ஏ.அஸ்ஹர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்துக்கும் இடையிலான அரச பஸ் போக்குவரத்துப் பணி திருப்திகரமாக இல்லை. அதனால் இடையூறுகளை எதிர்கொள்வதோடு அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் எனப் பலரும் நேர தாமதமாகவே உரிய இடங்களுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்படுகிறது.

காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் இரண்டு இடங்களுக்குமான போக்குவரத்தும் குழப்ப நிலையிலுள்ளது.

சிலவேளைகளில் பஸ்கள் பணியில் ஈடுபடுவதில் குறித்த நேர முகாமைத்துவம் பின்பற்றப்படுவதில்லை. அதனால் தாம் பாதிக்கப்படுவதாக பயணிகள் முறையிட்டுள்ளனர்.

பஸ்ஸுக்காக காத்திருக்கும் போதுகாலையில் பிறமாவட்டங்களிலிருந்து யாழ். நகருக்கு வரும் அரச பஸ்கள் அநேகமானவை உள்ளூர்ப் பயணிகளை ஏற்றாமல் பயணிக்கின்றன.'

பஸ்கள் பயணிகளை ஏற்றாமலேயே செல்கின்றன.

அதேபோன்று யாழ். நகரில் இருந்து கொடிகாமத்துக்கான இரவு நேர பஸ் சேவை உரிய முறையில் இடம்பெறவில்லை. அவ்வாறு பணிக்கு விடப்படும் பஸ்கள் உரிய நேரத்துக்குப் புறப்படுவதில்லை என்றும் முறைப்பாடு கிடைத்துள்ளது. இனிவரும் காலங்களில் பிறமாவட்டங்களில் இருந்து வரும் அல்லது பிறமாவட்டங்களுக்குச் செல்லும் அரச பஸ்கள் உள்ளூர் பயணிகளையும் ஏற்ற வேண்டும் - என்று மேலும் கூறினார். (ம-4)

# மண்டைதீவு பிரதான வீதியில் உடைந்த பாலத்தைத் திருத்துக

## வேலணை பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.13

மண்டைதீவு பிரதான வீதியில் சேதமடைந்து கிடக்கும் பாலத்தையும் பிரதான வீதியையும் அம்பிகைநகர் வீதியையும் உடன் புனரமைத்துத் தாருங்கள் என வேலணை பிரதேசசபை உறுப்பினர் எஸ்.சிவகுலசிங்கம் வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளை நேரில் சந்தித்து வேண்டு கோள் விடுத்துள்ளார்.

வீதி புனரமைப்புப் பணிகள் நீண்ட காலமாக இடம்பெறவில்லை. பிரதான வீதியில் உடைந்து காணப்படும் மதகால் போக்குவரத்துகள் தாமதமாகி வருகின்றன.

முன் வீதி புனரமைப்புக்கென யூரோவில் நிறுனவத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இதுவரை இந்தப் புனரமைப்புப் பணிகள்

> இதுவரை இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறாததால் பிரதான மற்றும் அம்பிகை நகர வீதியுடன் போக்குவரத்தில் மக்கள் கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

இடம்பெறாததால் பிரதான மற்றும் அம்பிகை நகர வீதியுடன் போக்குவரத்தில் மக்கள் கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

வீதிகளும் பாலமும் உடன் திருத்த வேண்டிய அவசியம் குறித்து அதிகாரிகளிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்று வேலணை பிரதேசசபை உறுப்பினர் கூறினார். (ம-7)

# நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

2013 வரவு -செலவுத் திட்டம், யுனிசெப் வேலைத் திட்டம், ஆளணி தொடர்பாக ஆராய்வதற்கான செயலாளர் கலந்துரையாடல் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் தலைமையில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும். யாழ். மாவட்டத்தில் 13 பிரதேச சபைகள், 3 நகரசபைகளின் செயலாளர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

**கடன்திட்ட அறிமுகம்**

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒருங்கிணைப்பின் மூலம் கைத் தொழிலாளர்களுக்கு வங்கிக் கடன் திட்ட அறிமுகம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-13)

**மென்டலின் இசைக்கச்சேரி**

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பிரிவு நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு மென்டலின் இசை நிகழ்வை நடத்துகின்றது. பாரம்பரிய கலை இலக்கிய அரங்கின் ஆதரவுடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் உலகப் புகழ் பெற்ற மென்டலின் இசை விற்பன்னர் ஸ்ரீ நிவாசின் மாணவன் அரவிந் பார்கப், சென்னையைச் சேர்ந்த ஹரிகர சுப்ரமணியன், சத்திய நாராயணன் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

# வல்லை நன்னீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## கரவெட்டிப் பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

வடமராட்சி, ஓக.13

வல்லை கடல் நீரேரியை நன்னீராக்கும் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்தி, கடல்நீரேரியை ஒட்டிய பகுதிகளில் விவசாயச் செய்கைக்கு ஊக்கமளிக்குமாறு கரவெட்டிப் பிரதேசசபை உறுப்பினர் பொ.குகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமராட்சி பிரதேச செயலர், பிரதேச சபைத் தலைவர், விவசாய பெரும்பாலான உத்தியோகத்தர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தின் தெற்குப் புறத்தில் உள்ள கல்லுவம்,மண்டான், சின்னவல்லை ஆகிய விவசாயப் பகுதிகளிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் தற்போதைய கடுமையான வரட்சியால் உலர்மண் புழுதி காற்றில் பறந்து விழுந்து விவசாயச் செய்கைக்கும் குடியிருப்பாளர்களின் உடல் நலத்துக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இதனையடுத்து இந்தப் பகுதிகளில் விவசாய வளத்தைப் பெருக்கவும், குடியிருப்பாளர்களின் உடல் நலத்தைப் பேணவும் தாமதமின்றி வல்லைக்கடல் நீரேரியை நன்னீத் திட்டமாக்க வேண்டும்.

இதற்கு வசதியாக தொண்டைமானாறு கடல் நீரேரித் தொடுவாயை மூடி மழை நீரை வெளியேற விடாது தேக்கிவைத்து நன்னீர் ஏரிப்பிரதேசமாக மாற்றுவதன் ஊடாக இந்தப் பகுதி நீர் நிலைகளில் மாற்றங்களையும், விவசாய வளமுள்ள பிரதேசமாகவும் மாற்ற முடியும்.

கடல்நீரேரியினதும் அதனை ஒட்டிய குளங்களிலும் பல்வேறு தேவைகளுக்கு தண்ணீர் பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வேறு தேவைகளுக்கு தண்ணீரை எடுத்தால் நன்னீர்த் திட்டத்தை மேம்படுத்த முடியாமல் போய்விடும்.

இதற்கேற்ற வகையில் உயர் அதிகாரிகள் சிந்தித்து நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய செயல் திட்டத்தினை உருவாக்க முன்வரவேண்டும் என அந்தக் கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மதுவிற்பனை இரு நிலையங்களுக்கு மூடுவிழா

யாழ்ப்பாணம், ஓக.13

சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்களில் இரண்டு கடந்த மாதம் மூடப்பட்டுள்ளன.

மதுவரித்திணைக்களத்தின் அனுமதிப் பத்திரமின்றி மதுபானத்தை விற்பனை செய்து வந்த இரண்டு மதுபான விற்பனை நிலையங்களே இனங்காணப்பட்டு மூடப்பட்டதாக யாழ். மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

குறிக்கப்பட்ட பிரதேசங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்,

மதுவரித்திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அமைவாக மதுபான விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு மதுவரித் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஆகிய பிரதேசங்களில் இரண்டு மதுபான விற்பனை நிலையங்கள் எந்தவித அனுமதிப் பத்திரமும் பெறாமல் அரச சாரயத்தை விற்பனை செய்து வந்துள்ளன.

மதுவரித்திணைக்களத்துக்கு பொது மக்களால் கொடுக்கப்பட்ட தகவல்களை அடுத்து கடந்த மாதம் முற்பகுதியில் இந்த இரண்டு மதுபான நிலையங்களும் மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங் காணப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு பாதிப்பை உண்டாக்கும் விதத்தில் தன்னிச்சையாகச் செயற்பட்டு வந்த இந்த இரண்டு மதுபான நிலையங்களின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றம் அபராதம் விதித்ததுடன் மதுபான நிலையங்களும் மூடப்பட்டன.

தற்போது குடாநாட்டில் மதுபாவனையாளர் அதிகரித்துள்ள நிலையில் லாபத்தை நோக்காகக் கொண்ட வர்த்தகர்கள் இது போன்ற விற்பனை நிலையங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

மதுவரித்திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி இந்த நிலையங்களை அமைக்க முடியாது என்பதால் இவ்வாறான தகவல்களை அறிந்தால் மதுவரித் திணைக்களத்திடமோ, அல்லது பொலிஸாரிடமோ பொது மக்கள் முறைப்பாடு செய்ய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடையோர் கைதாகி விசாரணை

வலி.வடக்கு, ஓக. 13

யாழ்: குடாநாட்டில் கடந்த வாரம் எட்டு குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அதில் ஐந்து குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்களுக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் இடையேயான வாராந்த சந்திப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரெரா தலைமையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடையவர்கள் என நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 27 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்ட 10 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற மூவரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 14 பேரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

டெங்கு பரவும் சூழலை பராமரித்தமை மற்றும் சுற்றுச் சூழலுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டமை சம்பந்தமாக 8 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.- என்று தெரிவித்தார்.(ம-86)

# சைக்கிள் திருட்டுக்கு 14 நாள்கள் மறியல்

வலி.தென்மேற்கு, ஓக.13

சைக்கிள் திருட்டு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட இருவர் 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்த போது கடந்த காலங்களில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்களும் அம்பலத்துக்கு வந்தன.

அவர்களின் வாக்கு மூலத்தைத் தொடர்ந்து பல இடங்களில் விற்பனை செய்யப்பட்ட நிலையிலிருந்த ஐந்து சைக்கிள்களைக் கைப்பற்றிய பொலிஸார், சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு உடந்தையாக இருந்தவர்களில் ஒருவரையும் கைது செய்தனர்.

இரு இளைஞர்கள் பொலிஸாரால் மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிவான் இருவரையும் 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (ம-115-86)

# நேரசூசியை கவனிக்காத இரு மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றத் தவறினர்

பரீட்சை நேரசூசியை உரிய முறையில் கவனிக்காத இரு மாணவர்கள் ஒரு பாடத்தின் முதல் பகுதி பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனது.

நாடு முழுவதும் நடைபெற்றுவரும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இருவருமே இவ்வறான பாதிப்புக்கு ஆளானவர்கள்.

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுக்கக்கூடியவர்கள் எனக் கருதப்பட்ட மாணவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்று குறித்து கல்விச் சமூகத்தினர் கவலை கொண்டுள்ளனர். பரீட்சைக்கான பாடம் நேரசூசியில் காலையில் நடைபெறுமென குறிப்பிட்டிருந்த போதிலும் அது பிற்பகலில் நடைபெறுமென இந்த மாணவர்கள் தவறுதலாக நினைத்ததால் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை.

பரீட்சை முடிந்ததும் சக மாணவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஏன் வரவில்லை எனக்கேட்ட போதுதான் பரீட்சை முடிந்தது அந்த மாணவர்களுக்குத் தெரியவந்தது.

பிள்ளைகள் முழுநேரக் கல்வியில் ஈடுபட்டிருப்பதால் பெற்றோர் நேரசூசியை அவதானித்திருந்தால் இந்தத் தவறு இடம் பெற்றிருக்காது எனவும் இந்தத் தவறு இனிவரும் காலங்களில் நடைபெறாமல் இருக்க பெற்றோர் அவதானமாக இருக்க இதை உதாரணமாகச் சொல்ல வேண்டுமெனவும் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் யாழ்.மாவட்டப் பாடசாலை ஒன்றின் மாணவர்களே பாதிக்கப்பட்டனர்.

(ம-9)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




டெசோ மாநாட்டின்போது...

னித்துக் கொள்ள வகை செய்யும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத்தில் இந்தியா கொண்டுவர வேண்டும்

- இலங்கையில் தமிழ் மொழி அடையாளங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்

- இன்றைய இலங்கையில் இராணுவத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. இராணுவ முகாமாக காட்சியளிக்கிறது இன்றைய தமிழீழம். எனவே தமிழர் பகுதிகளில் வலிந்து குடியமர்த்தப்பட்டுள்ள சிங்களவர்களை உடனே வெளியேற்ற வேண்டும்

- தமிழர் பகுதியில் இயல்பு நிலை திரும்ப இலங்கை அரசை ஐ.நா. வலியுறுத்த வேண்டும்

- அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்று சிறைகளில் வாடும் தமிழர்களை விடுதலை செய்வதில் ஐ.நா. அகதிகள் சபை தலையிட வேண்டும்

- இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கை அகதிகளுக்கும் இந்திய குடியுரிமை அல்லது அவர்கள் இந்தியாவில் நிரந்தரமாக வாழ வழிவகை செய்ய வேண்டும்

- அகதிகள் தொடர்பான ஐ.நா. வின் ஒப்பந்தத்தை இந்தியாவும் பின்பற்ற வேண்டும்

- ஐ.நா. மூலம் தமிழ் மக்களிடத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் .ஈழத் தமிழர் பிரச்சனை தெற்காசிய பிரச்சனையாக அறிவிக்கப்பட வேண்டும்

- தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இலங்கை சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும்

- தமிழக மீனவர் படுகொலைக்கு முடிவுகட்ட கச்சதீவை மீட்க வேண்டும்

- தமிழகத்தின் மண்டபம் அல்லது தனுஷ்கோடியில் இந்திய கடற்படை முகாம் அமைக்க வேண்டும்

- தமிழர் பகுதிகளில் மறுவாழ்வு பணிகளை கண்காணிக்க பன்னாட்டுக் குழு அமைக்க வெண்டும்.

- இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இலங்கை படையினருக்கு பயிற்சி கொடுக்கக் கூடாது

- டெசோ மாநாட்டில் பங்கேற்போரை கண்காணிப்போம் என்ற இலங்கை அரசின் மிரட்டலுக்கு கண்டனம்

- டெசோ மாநாட்டுக்கு தடை விதித்து இடையூறு செய்த அ.தி.மு.க. அரசுக்கு கண்டனம் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ங)

## சிவந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தன. இந்த நிலையில் ஒலிம்பிக் நிறைவுநாளான நேற்றுத் தன்னுடைய உண்ணாநோன்பையும் சிவந்தன் முடிவுக்குக் கொண்டுவந்தார். உண்ணாநோன்பின் நிறைவு செய்யப்பட்ட பின்னர் லண்டன் நேரப்படி மாலை 6 மணி தொடக்கம் எட்டு மணி வரை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. (ங)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரும் பொலிஸாரும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இல்லத்தில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஆட்கள் இருக்கின்றனர்.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தோல்வியை சந்திக்கவுள்ள இவர்கள், எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றனர். கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முதல்நாள் எமது தலைமை வேட்பாளர் துரைராஜசிங்கத்தின் வீட்டுக்கு பூட்டு போடப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் 9 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஆட்கள் இருக்கின்றனர். இவர்களின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக படையினரும் உள்ளனர்.

இவர்களின் இவ்வாறான அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு நாங்கள் எழுத்து மூலம் அறிவித்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை சகிக்கமுடியாத இவர்கள் இதனைச் செய்கின்றனர் - என்றார் அவர். இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா சீ.யோகேஸ்வரன் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திட்டமிட்டபடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினும் இதற்கு சென்னை பொலிஸார் தடை விதித்தனர். இந்நிலையில், தி.மு.கவினால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு மீதான விசாரணை நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நிலையில், தி.மு.க. மாநாட்டுக்கு பொலிஸார் பிறப்பித்த தடைக்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுவதாக தி.மு.கவால் அறிவிக்கப்பட்ட மாநாடு, ஏற்கனவே திட்டமிட்டபடி வை.எம்.சி.ஏ. மைதானத்திலேயே நடைபெறும் என தி.மு.க. தலைமைக்கழகம் அறிவித்தது. அதன்படி மாலை 4 மணிக்கு வை.எம்.சி.ஏ. மைதானத்தில் டெசோ மாநாடு ஆரம்பமாகியது.

## டெசோவுக்கு எதிராகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான கலைஞர் கருணாநிதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. அத்துடன், 'டெசோ' மாநாட்டைக் கடுமையாக விமர்சிக்கும் வகையிலான பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சம்பந்தன், கருணாநிதி ஆகியோரைக் கடுமையாகத் தாக்கிப்பேசி கோஷம் எழுப்பியதுடன், டெசோ மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி அளித்த இந்திய மத்திய அரசையும் காரசாரமாக விமர்சித்து கருத்து வெளியிட்டனர்.

தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட அதில் அங்கம் வகிக்கும் பல அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டன. காலை 10 மணிமுதல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நீடித்ததால் குறித்த பிரதேசத்தில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

அதேவேளை, நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக இந்தியத் தூதரகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், ஆர்ப்பாட்டம் நடைபெற்ற வளாகத்தில பெருந்திரளான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

## டெல்றொக்ஷனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகத் தெரிகின்றது டெல்றொக்ஷன் இறந்தது நோயினாலோ அல்லது வீதி விபத்தாலோ அல்ல. அரச பாதுகாப்புகளுடன் கூடிய ஒரு சிறைச்சாலையில் இருக்கும் போதே அவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றான்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கு கூடியிருக்கின்ற எங்களுக்கு ஒரு கடமை இருக்கின்றது. இவரைக் கொலை செய்தது யார் என்று அரசு வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும். மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு ஜனாதிபதி மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தார். இப்படியானால் ஏன் இந்தக் கொலைக்கு மக்கள் முன்னிலையில் வந்து மன்னிப்புக் கோரமுடியாது?

இந்தக் கொலையை தெற்கின் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு இருக்கும் சுதந்திரம் ஏன் நிமலரூபன், டில்ருக்ஷன் போன்ற கைதிகளுக்கு ஏன் கிடைக்கவில்லை.

இனியும் நாம் பொறுத்திருக்க முடியாது. சடலத்தின் முன்நின்று கூறுகின்றோம், இந்தக் கொலைக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். இந்தக் கைதி இன்று இறந்துவிடவில்லை, வீரமரணம் அடைந்துள்ளார். எனவே, நாம் அனைவரும் இவருக்கு வீரவணக்கத்தைத் தெரிவிக்க வேண்டும் - என்றார் அவர்.

## நல்லூர் திருவிழாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணவர் ஆவார். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் வந்த டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட வேளை வாகனத்திச் சில்லுக்குள் அகப்பட்டே இவர் உயிரிழந்ததாகவும் இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இவரது கணவன் மற்றும் வாகனச் சாரதியிடம் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-9-86)

## ஈழத் தமிழரின் நலன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்காலை தொடக்கிவைத்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் போருக்கு முன்பும், போருக்குப் பின்பும் நடைபெற்று வரும் நிகழ்வுகளைக் கண்டு உலக நாடுகள் மிகவும் கவலை அடைந்துள்ளன. ஈழத்தமிழர்களின் பிரச்சினையானது மனிதாபிமானம், மனித உரிமைகள், சுயமரியாதை தொடர்புடையது, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அதிகப்படியாக தாமதம் செய்வது, மேலும் பல பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். தம், மொழி, கலாசாரம் இவற்றின் பெயரால் அடக்கு முறைகள் நடைபெற அனுமதிக்கக் கூடாது.

**அன்றைய டெசோ**

1986 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி மதுரையில் 'டெசோ' சார்பில் நடைபெற்ற மாநாட்டில் வாஜ்பாய், என்.டி. ராமராவ், பகுகுணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அனைத்து ஈழத் தமிழ் மற்றும் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஈழத்தமிழர் பிரச்சினையில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக உறுதியான மற்றும் உணர்வுபூர்வமான ஆதரவை தி.மு.க. அளித்து வருகிறது. தொடர்ந்து அவர்களுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்போம்.

1983 இல் ஈழத் தமிழர்கள் உயிரிழப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நானும், பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் இராஜினாமா செய்தோம். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு அளித்ததற்காக 2 தடவைகள் தி.மு.க. ஆட்சி 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டது.

**ஏமாற்றிய இலங்கை**

ஈழத்தில் இறுதிப் போரின்போது இரத்தம் சிந்துவதை எதிர்த்தும், இந்தியா தலையிடக் கோரியும், அண்ணா நினைவிடத்தில் 27.04.2009 அன்று சாகும்வரை தொடங்கினேன். இலங்கை அரசு மற்றும் இந்திய வெளியுறவு துறை உத்தரவாதம் அளித்து, அதன் நகல் எனக்கு அனுப்பப்பட்டது. போர் முடிவுக்கு வந்ததாக நினைத்து உண்ணாவிரதத்தை நான் முடித்துக் கொண்டேன். ஆனால் இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றி விட்டது.

**அற்புதமான தியாகங்கள்**

இலங்கையில் போருக்கு முன்பும், போருக்கு பின்பும் தமிழர்கள் இரண்டாந்தார குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஈழத்தமிழர்கள் புரிந்த தியாகங்கள், அற்புதமானவை. அவர்கள் அனுபவித்த சித்திரவதைகளும், அடக்கு முறைகளும் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதவை.

தமிழர்களின் அன்றாட வாழ்வில் திட்டமிடப்பட 'சிங்களமயமாக்கல்' எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பதையும் தமிழர்கள் மீது ஏவப்படும் சட்டமீறல்களையும் கொடுமையான இடையூறுகளையும் இவை தெளிவுபடுத்துகின்றன. தமிழர்கள், தங்களின் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பாதையில் முட்புதர்களும், புதைகுழிகளும் நிறைந்துள்ளதை இவை காட்டுகின்றன.

**அவசர நிலையும் அடக்குமுறையும்**

தமிழர்களின் வசிப்பிடங்களில் அவசர நிலை அமுலில் உள்ளது போன்ற நிலைமையை இலங்கை இராணுவம் உருவாக்கி வருவது வேதனை அளிக்கத்தக்கது. ஜெனிவாவில் இயற்றப்பட்ட தீர்மானத்துக்கு பிறகும் இவை மேலும் அதிகரித்துள்ளது.

**குறுகிய - நீண்டகால தீர்வு**

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மீள்குடியமர்வு, நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றுக்காக அவசர தீர்வு காணப்பட வேண்டும். இடைக்கால தீர்வாக உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி தமிழர்கள் நிம்மதியாக வாழவகை செய்ய வேண்டும்.

சொத்துரிமை, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் இதில் அடங்கும். நிரந்தர தீர்வாக நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வரும் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் - என்றார் அவர்.

## புலிகள் செய்யாத நாசத்தை மஹிந்த அரசு செய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். ஒரு நாட்டில் பாதுகாக்கப்படவேண்டிய மிகப் பெறுமதியான வளம் மனிதவளம் தான். அரசை ஸ்திரப்படுத்துவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று வேலைசெய்து, நாட்டிற்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு நாட்டில் பாதுகாப்பு இருக்கின்றதா? இந்தக் குற்றச் செயல்கள் அனைத்தையும் இல்லாது செய்து சிறுவர் மற்றும் பெண்கள் சமூகத்தினருக்குத் தகுந்த பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு சுயாதீன பொலிஸ் திணைக்களத்தை அரசு உடனடியாக நிறுவவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இடம்பெறுகின்ற செயல்களைத் தகவல்களாக மக்களுக்கு எடுத்துச்செல்லத்தான் ஊடகங்கள் இருக்கின்றன. இந்த ஊடகங்கள் பல்வேறுபட்ட கருத்துகளையும் மக்களிடம் கொண்டுசெல்லாமல் ஓர் ஒழுங்குப் பத்திரத்திற்கு அமைய செயற்படுமானால், ஊடக சுதந்திரம் இல்லாது போய்விடும். அரச ஊடகங்கள் அரசின் ஒழுங்குப் பத்திரத்திற்கமைய செயற்படுகின்ற வேளையில் பல்வேறு அழுத்தங்களின் காரணமாகத் தனியார் ஊடகங்களும் இப்போது சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலைமை நாட்டில் உருவாகியுள்ளது.

ஊடக அடக்குமுறையை இந்த அரசு வித்தியாசமான கோணத்தில் செயற்படுத்துகின்றது.

தமது அதிகாரத்தினூடாக அரசியல் கட்சித் தலைவர்களை நியமிக்கவும் அவர்களைப் பதவியிலிருந்து விரட்டியடிக்கவும் முடியும் என சில இலத்திரனியல் ஊடகங்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றன. அது ஒன்றுமே நடக்காது. ஏனெனில், ஊடகங்களுக்கு இருக்கின்ற வரையறைகள் மற்றும் அழுத்தங்கள் தொடர்பாக எனக்கு நன்றாகத் தெரியும்.

மஹிந்த சிந்தனையின் கீழ் சிறுவர்களும் பெண்களும் நாசமாக்கப்பட்டுள்ளனர். சிறுவர் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசின் பிரதான கடமை என அரசமைப்பின் 13 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு மஹிந்த அரசு இடமளித்துள்ளது. விடுதலைப் புலிகளிடமிருந்து பாடசாலைகளைப் பாதுகாப்பதுபோல சிறுவர் துஷ்பிரயோகம் புரிபவர்களிடமிருந்து தமது பிள்ளைகளையும் பாடசாலையையும் பாதுகாக்க வேண்டிய நிலையில் பெற்றோர்கள் உள்ளனர்.

குழந்தைகள் மற்றும் பெண்கள் ஏன் இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்? பொலிஸ் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளே இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவதால் பொலிஸாருக்குத் தமது கடமைகளைச் செய்யமுடியாதுள்ளது. நான் பிரதமராக இருந்த காலத்தில் பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாக செயற்பட்டதாலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கூட இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை. அந்த அடிப்படையில் பார்க்கும்போது சிறுவர் துஷ்பிரயோகங்களில் அரசு அதிகம் ஈடுபடுகின்றதென்பது தெளிவாகத் தெரிகிறது.

- எனத் தெரிவித்துள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்முறைக் கலாச்சாராம் மேலோங்க இடமளிப்பதா?

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களிடையே, வீட்டு வன்முறைகள் உட்பட வன்முறைக் கலாசாரம் பெரிய அளவில் அதிகரித்துச் செல்கிறது. மிகக் குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட வன்னி நிலப்பரப்பில் வன்முறைக் கலாசாரம் பரவுவதைத் தடுப்பதற்கு, இழப்புகளைச் சந்தித்த மக்கள் மத்தியில் உளசமூகப் பணிகள் தவறாது, கட்டாயமாக, வேகமாக, முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையேல் வன்முறைக் கலாசாரம் தலைவிரித்தாடும்; எதிர்காலத்திலும் தொடரியாக நீளும்.

இவ்வாறு, எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் இந்துமா சபையின் தலைவர் வைத்திய கலாநிதி இ.சங்கர்.

நீண்ட காலமாக பல்வேறு வகைகளிலும் வழிகளிலும், போரின் பன்முகப்பட்ட தாக்கங்கள், இழப்புகள், இல்லாமைகள் எனப் பலவகைப்பட்ட பாதிப்புகளால் தாக்கமுறுவோர் வன்முறைக் கலாசாரம் சார்ந்த செயல்களில் ஈடுபடுவது வழமையே.

அதனைத் தடுப்பதற்கு, திட்டமிட்ட முறையில் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் சமூக நலன் நாடிச் செயற்படுவோரின் உழைப்புத் தேவை. அந்தப் பெரும் கைங்கரியத்துக்கு அரசின் ஆதரவும் ஒத்தாசையும் மிக அவசியம்.

ஆனால் அத்தகைய பணிகளுக்கு, ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதி வழங்கப்படுவதில்லை; ஆதரவளிப்பதில்லை என்பதனையே இந்துமா சபையின் தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்திய இராணுவம் வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த காலத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம் ஓங்கி இருந்த காலத்திலும், இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையிலும், உளநல சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசினால் அனுமதி வழங்கப்பட்டது. அதனையும் மருத்துவர் தொட்டுக் காட்டியுள்ளார்.

போர் முடிந்து, வழமை நிலை, இயல்பு நிலை மீண்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. போரின் தாக்கத்தால், அதன் சொல்லொணாப் பாதிப்புகளால், ஆற்றுவதற்கு மிகவும் கடினம் எனக் கருதப்படும் பல வகையான, எழுத்தில் அடக்க முடியாத, இழப்புகளால், உளநலம் மற்றும் உடல்நலம் ஆகிய இருமுனைகளிலும் வாழ்க்கையைப் பறிகொடுத்துத் தவித்தமை ஆகியன வன்னி வாழ் மக்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சூனியமாக்கி உள்ளது.

போர் அரக்கனின் கோரத் தாண்டவம் தலைவிரித்தாடிய பல நாடுகளில், இத்தகைய பாதிப்புகளை அரசாங்கங்களும் சமூகப் பணியாளர்களும், தனித்தும், தம்மிடையே இணைந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாலேயே, வன்முறைக் கலாசாரம் உட்பட்ட பின்விளைவுகளை, பாதிப்புகளை களைந்து அந்த நாடுகளின் மக்களுக்கு மீள்வாழ்வு அளித்து அவர்களை வாழ வைக்க முடிந்தது.

ஜப்பான், வியட்னாம், ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, எகிப்து, சூடான், கானா, லெபனான், பலஸ்தீனம், சிரியா, இந்தோனிசியாவின் கிழக்குத் திமோர், அல்பேனியா, முந்திய செக்குடியரசு -ஆகியனவற்றை இங்கே குறிப்பிட்டுக் காட்டலாம்.

பூமிப் பந்தின் பல நாடுகளிலும் அந்தந்த அரசுகளுக்குப் பக்கத் துணையாக சமூக உணர்வுள்ள தொண்டு நிறுவனங்களே மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்டுள்ள வழக்கம்.

ஆனால் இலங்கை அரசாங்கம், அத்தகைய மனிதநேய, மக்கள் நேயத் தொண்டுகளில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்வாழ்வளிக்க முன்வரும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்பது மிகவும் பாதகமான, கண்டிக்கத்தக்க நிலையாகும்.

மனித நேயம், சமூக மேம்பாடு சார்ந்த இது விடயத்தில், அதாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளநல சமூகப் பணிகளுக்கான வேலைத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதில், அரசிடம் உள்ளார்ந்த நோக்கம் உண்டு என்று கொள்வதைத் தவிர வேறு முடிவுக்கு வர இயலாது.

வன்னிப் போரினால் சொல்லொணா இழப்புகளையும் பாதிப்புகளையும் அனுபவித்த தமிழ் மக்களுக்கு, மறுவாழ்வளிக்கும் வேலைத்திட்டங்களை அரசாங்கம் மட்டும் தனித்து நிறைவேற்றுவதெனில் வருடங்கள் பல கழிந்துவிடும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அந்தப் பணியில் ஈடுபட்டால் மட்டுமே, அதற்கு வகை செய்தால், அனுமதித்தால் மட்டுமே, விரைந்து வன்னி மக்களை அவர்கள் இப்போது மூழ்கியுள்ள கஷ்டங்களில் இருந்து தூக்கிவிட முடியும்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான ஒழுங்கு விதிகளையும், இயங்கு முறைகளையும் வகுத்துக் காண்காணிப்பதன் ஊடாக அவற்றின் சேவை மக்களைச் சென்றடைய வழி வகுக்க இயலும்; முடியாதது அல்லது சாத்தியம் அற்றது என்று நிலைநிறுத்த இயலாது.

பொருளாதார வளர்ச்சி, கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சியை நாடி வெளிநாட்டு நிறுவனங்களுடன் கைகோர்த்துச் செயற்பட முடியுமெனில் -

கொடிய போரினால் பாதிப்புற்று நொந்து நூலாகிப் போயுள்ள வன்னித் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு முன்வரும்-உள சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்கு- முன்வரும் சமூக அமைப்புகளுக்கு, தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க ஜனாதிபதி விசேட செயலணி மறுப்பது அல்லது தயங்குவது எந்த வகையிலும் எந்தக் காரணம் கருதியும் ஏற்புடைத்தல்ல.

அரசின் இந்தப் போக்கு, நிலைப்பாடு, வன்னி வாழ் மக்களின் உள சமூகப் பணிகளை முன்னெடுக்காமல் தடுத்து, அவர்கள் மத்தியில் வீட்டு வன்முறைகள் உட்பட்ட வன்முறைக் கலாசாரத்தை மேலோங்க இடமளித்து, அவர்களினதும், வருங்காலச் சந்ததியினரதும் எதிர்காலத்தை சூனியமாக்கும் உள்நோக்கம் கொண்டதே என்று கொள்வதில் தப்பில்லை.

# ரொக்க வியாபாரத்தில் ஈடுபடும் சங்கங்கள் தெரிவாகிப் பரிசில்கள்

### மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ். குடாநாட்டில் அதிக ரொக்க வியாபாரத்தில் ஈடுபடும் சங்கங்களை வலய நிதியாக தெரிவு செய்து அந்தச் சங்கங்களுக்கு பரிசில்கள் வழங்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தநாதன் கூறியதாவது:-

குடாநாட்டில் தற்போது அதிக ரொக்க நுகர்ச்சி வியாபாரத்தில் அக்கறை செலுத்தி ஈடுபட்டுவரும் பலநோக்குக் கூட்டுறுவுச் சங்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தற்போது முதன்மை அடிப்படையில் இந்தச் சங்கங்கள் வலய ரீதியாகத் தெரிவுசெய்யப்படும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ரொக்க மாற்றுப் நுகர்ச்சி வியாபாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

முன்னர் சங்கங்கள் நிவாரண பொருள் விநியோகத்திலேயே அதிக கவனம் செலுத்தின.

இந்த விநியோகத்தால் சங்கங்கள் இலாபத்திலும் செயற்பட்டன. தற்போது அந்த நிலை மாறியுள்ளது.

ஆகவே சங்கங்கள் நுகர்ச்சி வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த நுகர்ச்சி வியாபாரத்தை அதிகரிப்பதற்கும் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டும் அவற்றுக்குச் சிறந்த பரிசு வழங் கப்படவுள்ளது.

அதனைவிட அதிக வியாபாரத்தில் ஈடுபடும் கிளை முகாமையாளர்களுக்கு வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பாராட்டி கௌரவிப்பதோடு அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்வுள்ளன.- என்று கூறினார். (ம-17)

## ஆசிய பசுபிக் பாதுகாப்பு கற்கைக்கு 4 இலங்கையர்

யாழ்ப்பாணம், ஓக.13

ஆசிய பசுபிக் பாதுகாப்பு கற்கைகள் நிலையத்தில் நடைபெறவுள்ள ஒரு மாத கால பயிற்சி நெறிக்கு இலங்கையிலிருந்து 4 பேர் தெரிவாகியுள்ளனர். இதில் மூன்று பேர் தமிழர்கள்.

அமெரிக்காவின் சரவாய் தீவில் உள்ள ஆசிய பசுபிக் பாதுகாப்பு கற்கைகள் நிலையத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 19 ஆம் திகதிவரையில் ஒரு மாத காலத்துக்கு கற்கை நடைபெறவுள்ளது. 'நெருக்குதல் முகாமைத்துவம்' என்ற தொனிப் பொருளில் இந்த ஒரு மாத கால விரிவான கற்கை நெறி நடத்தப்படவுள்ளது.

இதற்காக இலங்கையிலிருந்து 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி, யாழ். சுகாதார திணைக்கள தாய், சேய்நல வைத்தியர் திருமகள் சிவசங்கர், இடர் முகாமைத்துவ நிவாரண நிலையப் பணிப்பாளர் லக்கதாஸ் மற்றும் இடர் முகா மைத்துவ அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நந்தன கூரே ஆகியோரே இலங்கை சார்பில் பங்கு பற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (ம-5)

## பொதுமக்கள் குறைகேள் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் குறைகேள் முறைமை தொடர்பான பயிற்சி நெறி இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

பொதுசன தொடர்பு அலுவலர்களுக்கும், பதில் பொதுசன தொடர்பு அலுவலர்களுக்கும் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. யாழ். உள்ளூராட்சி உதவி ஆணை யா ளர் பா. ஜெயகரன் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார். இதில் பங்குபற்றுவோர் 2012 ஜனவரி முதல் ஜூலை வரையான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ள து. (ம-41)

## நந்தி நினைவுப்பேருரை

யாழ்.பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)நினைவுப்பேருரை நிகழ்வு நாளை பிற்பகல் 2மணிக்கு யாழ். பல் கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சமுதாய மருத்துவக்கல்வியும் அது எதிர்கொள்ளும் சவாலும் என்னும் பொருளில் லண்டன் குயின்மேரி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் ஆர்.எலிசபெத் ஓபிரைய்ன் உரையாற்றவுள்ளார்.

(ம-9)

## விவசாயிகள் ஓய்வூதியத்துக்கு ரூ.66 மில்லியனை அரசு செலவிட்டது

யாழ்ப்பாணம் ஓக.13

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 66மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள் ளார்.

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக விரைவில் புதிய செயற்றிட்ட நடைமுறை முன்வைக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டுகளில் அரசு விவசாயிகளுக்கு பெருமளவு நிவாரணங்களையும் உபகரண உதவிகளையும் வழங்கி வருகிறது.

உரமானியத்துக்கு மாத்திரம் வருடாந்தம் அரசு 50ஆயிரம் மில்லியன் ரூபாவைச் செலவழித்து வருகிறது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ம-50)

## சிறு கைத்தொழிலாளருக்கு இயந்திர உதவி வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.13

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கண்காட்சி மூலம் பங்கேற்கும் சிறு கைத்தொழிலாளர்களுக்கு கைத்தொழில் அமைச்சினால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்று கைத்தொழில் அபிவிருத் தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒருங் கிணைப்பின்மூலம் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவி ருத்தி அமைச்சு, ஆய்வு மற்றும் தொழில் நுட்ப அமைச்சு, தேசிய வளங்கள் மற்றும் தொழில் விருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் இணைந்து வாழ்வெழுச்சி கண்காட்சி நடத் தப்பட்டு வருகின்றது. இந்த வருடம் வாழ்வெழுச்சிக் கண்காட்சியில் பங்கு கொள்ளும் கைத்தொழிலாளர்க ளின் தேவையறிந்து 10 ஆயிரம் பெறுமதியானஉபகரணங்கள்கையளிக்கப்படும்.

இந்த 5 அமைச்சுகளின் கீழ் உள்ள கைத்தொழிலாளர்கள் 2 ஆயிரம் பேர் தெரிவாகியுள்ளனர். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் அமைச்சின் கீழ் 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-13)

## மாகாண ரீதியாக அபிவிருத்தி மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.13

மாகாணங்கள் தோறும் அபிவிருத்தி மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

2012இல் இடம்பெறும் அபிவிருத்திகளைத் துரிதமாக முன்னெடுப்பதுடன் 2013, 2014 அபிவிருத்திக்கான முன்மொழிவுகளை வழங்குதல், தயாரித்தல் தொடர்பில் ஆராய்வதற்காகவே அபிவிருத்தி மாநாடு ஒவ்வொரு மாகாண மட்டத்திலும் இடம்பெறவுள்ளது.

இதில் முதற்கட்டமாக 2011இல் முடிவுறுத்தப்பட்ட திட்டங்களையும், 2012இல் நடைபெற்றுக் கொண் டிருக்கும் திட்டங்களின் அறிக்கைகளையும் துரிதமாகப் பெறவுள்ளனர்.

இதேவேளை, 2013, 2014இல் வேலைவாய்ப்பை உருவாக்குவதை மையமாகக் கொண்ட திட்டங்களை வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்த வகையில் முன்னெடுப்பதை மையமாகக் கொண்டே நடைமுறைப்படுத்தக் கூடியதாக அபிவிருத்தி மாநாடு மாகாண மட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாகவே நாடு தழுவிய ரீதியில் மாவட்ட செயலாளர்களின் அபிவிருத்தி மாநாடு இடம்பெற்றது.

மாகாண மாநாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் முன்மொழிவுகளை ஏற்று, நிதிகளை வழங்கி மாகாண மட்டத்தில் வேலை வாய்ப்புக்களை உள்வாங்க உத்தேசித்துள்ளதாகவும் இதற்கான திட்டங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு துரிதமாக செயற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-50)

# வன்னி விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குங்கள்

### செல்வம் எம்.பி அமைச்சருக்குக் கடிதம்

மன்னார்,ஓக.13

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக நட்டஈட்டை வழங்க வேண்டுமெனவும், எஞ்சியுள்ள நெற்பயிர்ச் செய்கையைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பாக விவசாய அமைச்சருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியினால் நீரின்றிப் பல ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற் பயிர்கள் அழிவடைந்தும், அழிவடையும் நிலையிலும் உள்ளன.

**விவசாயிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு மேன்மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**

அரசினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதிக்கான பயிர்ச் செய்கைத் திட்டத்தில் வன்னி மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனால் ஏராளமான நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் கடும் வறட்சி காரணமாக நீரின்றி நெற்பயிர்ச் செய்கை அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இதனால் விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு மேன்மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக நட்டஈட்டை வழங்க வேண்டும். அத்துடன் அழிந்தது போக எஞ்சியுள்ள பயிர்களையாவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-12)

# 1,114 மாணவர்கள்

அக்கராயன்,ஓக.13

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஆயிரத்து 114 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தற்போது தோற்றிவருகின்றனரெனக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார். பழைய பாடத்திட்டத்தின் கீழ் 266 மாணவர்களும், புதிய பாடத்திட்டத்தின் கீழ் 848 மாணவர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்றும் 13 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயம், இந்துக்கல்லூரி, அக்கராயன் ம.வி, ஜெயபுரம் ம.வி, பூநகரி ம.வி, பளை மத்திய கல்லூரி, முருகானந்தக் கல்லூரி, வட்டக்கச்சி ம.வி, என்பன இணைப்பு நிலையங்களாகச் செயற்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

# அடிப்படை வசதி கோரி பூநகரியில் ஆர்ப்பாட்டம்

### 22ஆம் திகதியன்று நடந்த முடிவு

பூநகரி,ஓக.13

அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெற்றுத்தரக் கோரி முழங்காவில் அன்புபுரம் கிராமமக்கள் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக எதிர்வரும் 22 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

முழங்காவில் அன்புபுரம் ஜே/73 கிராம சேவகர் பிரிவில் கடந்த 2 வருடங்களாக மீளக்குடியமர்வு செய்யப்பட்ட போதும் எந்தவித அடிப்படை வசதிகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்குளுக்கு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இதனை முன்னிட்டு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவுள்ளதாக அன்புபுரம் மக்கள் முடிவு செய்துள்ளனர் என்று கூறப்பட்டது.

போருக்குப் பின்னர் கடந்த 2 வருடங்களுக்கு முன்னதாக இந்தப் பகுதியில் மீளக்குடியமர்வு இடம்பெற்றது. முற்றாக வீடுகள் அழிக்கப்பட்டு இருந்த காரணத்தால் தற்காலிக குடிசைகள் அமைத்து மக்கள் குடியமர்ந்தனர்.

எனினும் இந்தக் கிராம மக்களுக்கென 40 நிரந்த வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகத் தெரிவித்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பெயர் விவரங்கள் கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 13 குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர வீட்டுத் திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. அவையும் அரைகுறையாகவுள்ளன.

அத்துடன் குடிதண்ணீர் வசதிகள் மலசலகூட வசதிகள் போக்குவரத்து வசதிகள் எதுவுமே சீர்செய்யப்படவில்லை, இந்தக் கிராமத்தில் 75 குடும்பங்கள் உள்ள நிலையில் இனிவரும் மழை காலத்தில் சிறுபிள்ளைகளுடன் தற்காலிகக் குடிமனைகளில் எப்படிக் குடியிருக்க முடியும். ஏதாவது ஒன்றைச் சரியாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இது தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்து பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்னதாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளோம் என்று அவர்கள் மேலும் கூறினர்.

(க-ம-14)



வவுனியா சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் தினத்தன்று மலைப்படியூடாகப் பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்கின்றனர். (க-402)

# தரமுயர்வு

அக்கராயன்,ஓக.13

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு உதவி அரச அதிபர் பணிமனைகளும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்பரல் மாதம் ஆறாம் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இந்தத் தரமுயர்வு அமைந்துள்ளதாகவும் அரச அதிபரின் சார்பில் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(க-18)

# பழுதானது குழாய்க் கிணறு குடிதண்ணீருக்கு அவலம்

பூநகரி,ஓக.13

முழங்காவில் அன்புபுரம் கிராமத்திலுள்ள குடிதண்ணீரை வழங்கிக் கொண்டிருந்த குழாய்க்கிணறு பழுதான நிலையில் காணப்படுவதால் கிராமமக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் என்றுமில்லாத அளவு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் 16இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இவர்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு சோ.ஆ நிறுவனம் இந்தக் குழாய்க் கிணற்றை அமைத்து வழங்கியது.

இந்தக் குழாய்க் கிணறு கடந்த மூன்று மாதகாலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனைப் பழுது பார்த்து மக்களின் குறையை நிறைவு செய்வதற்கு இதுவரை ஒருவரும் முன்வரவில்லை. இதனால் இங்கு வசிக்கும் குடும்பங்கள் குடிதண்ணீர் தேடி வேறு இடங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதிக் கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பிரதேச செயலகம் எனப் பலரிடம் முறையிட்ட போதிலும் பயன் எதுவும் கிட்டவில்லையெனக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது கடும் வறட்சி நிலவுவதால் தமது தண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கடுமையாகப் பாடுபட வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதிக்கான கிராம அலுவலருடன் தொடர்புகொண்டபோது தமக்கு எழுத்து மூலமான முறைப்பாடு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் தமக்கு இப்படியொரு பிரச்சினை இருப்பது தெரியாது என்றும் தெரிவித்தார்.

மேலும் கெயர் நிறுவனத்தின் உதவியுடன் அன்புபுரம் கிராமத்துக்குக் குடிதண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

# புதுக்குடியிருப்பு கிழக்கில் மேலும் 207 குடும்பங்கள் மீள்குடியமர்வு

புதுக்குடியிருப்பு,ஓக.13

புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 207 குடும்பங்கள் நேற்று முன்தினம் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

போர் காரணமாக இவர்கள் இடம்பெயர்ந்து செட்டிகுளத்தில் அமைக்கபப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்திருந்தனர். இவர்களது இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து தற்போது தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்துள்ளனர்.

**19 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடங்கிய புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இதுவரை 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள நான்கு கிராம அலுவலர் பிரிவுகளுள் தற்போது புதுக்குடியிருப்புக் கிழக்குக் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர்.**

19 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடங்கிய புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இதுவரை 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள நான்கு கிராம அலுவலர் பிரிவுகளுள் தற்போது புதுக்குடியிருப்புக் கிழக்குக் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை வாகனங்களில் அழைத்து வரப்பட்டுக் கைவேலி கணேச வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்கள் நேற்று முன்தினம் காலை மீண்டும் வாகனங்களில் ஏற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு இவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். யூ.என்.எச்.சீ.ஆர்.நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா இவர்களுக்கு உடனடியாகவே வழங்கப்பட்டது.

புதுக்குடியிருப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர். சமைத்த உணவு, மற்றும் அரிசி, மா, சீனி ஆகிய உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.

இவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகள் சோ.ஆ மற்றும் ஒக்ஸ்பாம் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன.

மீள்குடியமர்ந்த இந்த 207 குடும்பங்களில் 589 உறுப்பினர்கள் அடங்கியுள்ளனர்.

இவர்கள் நீண்ட நாள்களுக்குத் தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறு வேண்டுகோள் விடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க-115)

# வேகமாக வற்றி வருகின்றது மன்னார் கட்டுக்கரைக்குளம்

மன்னார்,ஓக.13

கடும் வரட்சி காரணமாக மன்னார் கட்டுக்கரைக்குளத்திலுள்ள நீர் வேகமாக வற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரின் முக்கிய நீர் ஆதாரமாகக் கட்டுக்கரைக் குளம் விளங்கி வருகின்றது. இந்தக் குளத்திலிருந்தே குடிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்குமாக நீர் விநியோகம் இடம்பெற்று வந்தது.

மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் மன்னாரின் பல பாகங்களுக்கும் இந்தக் குளத்திலிருந்து குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றது.

தற்போது குளத்து நீர் வற்றியதால் கட்டுக்கரைக் குளத்தை அண்டிய பகுதியில் குளத்து நீரை நம்பி மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த பலரும் தொழிலின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தொடர்ந்தும் மழை பெய்யாது வரட்சி நிலை நீடிக்குமாயின் மிகப்பெரிய அவலம் நிலவுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# காரைநகர் மக்களுக்கு மேலதிக குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஓக. 12

காரைநகர் பிரதேச மக்களுக்கு மேலதிகமாக குடிதண்ணீர் வழங்கும் பணிகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக காரைநகர் பிரதேச சபையின் உபதலைவர் ச.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகரில் குடிதண்ணீருக்குப் பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து குடிதண்ணீர் விநியோகத்துக் கான வறட்சி நிவாரணக் கொடுப்பனவைப் பெற்றுத் தருமாறு பிரதேசசபை யாழ்.அரச அதிபரிடம் கோரி யிருந்தது. இதனையடுத்து இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப் பதற்கான நடவடிக்கைகளை அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இதனை அடுத்து இந்தப் பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பிரதேசசபையின் பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் தினமும் விநியோகிகப்பட்டு வருகின்றது. இதனைவிட மேலதிகமாக ஒன்றுவிட்ட ஒருநாள் ஒருவருக்கு நான்கு லீற்றர் என்ற அடிப்படையில் மேலதிக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மேலதிக குடிதண்ணீர் விநியோகம் கடந்த வியாழக்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதால் குடிதண்ணீருக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது.

(த-7-17-250)



வட இலங்கை சங்கீத சபைக்கு கே.கே.எஸ் வீதியில் மருதனார் மடம் சந்திக்கு அப்பால் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. (ம-17)

# காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

வலி.வடக்கு, ஓக.13

நல்லூர் ஆலய வாசலில் வைத்து இளைஞர் ஒருவர் முகத்தில் போத்தலால் குத்தப்பட்ட நிலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கார்த்திகைதிருவிழாதினத்தன்று நல்லூர் ஆலய முன்வீதியில் சுவாமி மாலை வீதி உலா வந்து உள்ளே செல்லும் வேளையில் சன நெரிசலின் மத்தியில் வைத்து 19 வயது நிரம்பிய பிரசன்னா என்ற இளைஞரின் முகத்தின் மீதே போத்தலால் குத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நபரை போத் தலினால் குத்தியவர் யார்'என இனம் காணப்படவில்லை. இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க முதலுதவிப் படையினர் காயப்பட்டவரை உடனடியாக அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலையில் அனுமதித்துள்ளார்கள்.

நூற்றுக் கணக்கான பொலிஸார் கடமையில் ஆலய சுற்றாடலில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்த துணிகர சம்பவம் இடம்பெற் றுள்ளது.

(ம-86)

# சிறுவர், பெண்கள் பிரிவுகள் பொலிஸ் நிலையங்களில் சீராகும்

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்கள் பிரிவுகள் சரியான முறையில் இயங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வாராந்த செய்தியாளர் சந்திப்பு இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**சில பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவில் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களே கடமையில் உள்ளனர்.**

யாழ்.மாவட்டத்திலுள்ள அநேகமான பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் பிரிவு உள்ளது. ஆனால் அவை சரியான முறையில் இயங்குவதில்லை. சில பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவில் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களே கடமையில் உள்ளனர். முறைப் பாடு செய்யச்செல்லும் அதிக மான பெண்கள் முறைப்பாடு தொடர்பில் சில விடயங்களை எடுத்துக் கூறு வதில் சங்கடப்பட வேண்டியுள்ளது. அதிகமான பொலிஸ் நிலையங்களில் இந்தப் பிரிவுகளில் தமிழ் பொலிஸார் கடமையில் இல்லை. முறைப்பாடுகளை எடுத்துச் சொல்வதில், பதிவு செய்வதில் தமிழ் பொலிஸார் கடமையில் இல்லாதிருக்கின்றமையும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்றார்.

(ம-4)

# ரூ.50 ஆயிரம் பெறுமதியான ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.13

நாயை மயக்கி விட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நல்லின ஆடுகள் திருடப்பட்ட சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீட்டில் கட்டப்பட்டிருந்த ஒரு கடாவும் இரண்டு மறி ஆடுகளுமே இவ்வாறு திருட்டுப் போயுள்ளன.

நேற்று முன்தினம் இரவு ஓட்டோவில் வந்தவர்கள் நாய்க்கு மயக்க மருந்து பூசப்பட்ட உணவினை வீசி நாய் மயங்கிய பின்னர் வளவினுள் புகுந்து அங்கு கட்டப்பட்டிருந்த ஆடுகளை அபகரித்துச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலையில் ஆடுகளையும், நாளையும் காணாது தேடிய போது காலை 9 மணியளவில் சோர்வடைந்த நிலையில் நாய் வீடு வந்து சேர்ந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் பயப்பீதியில் உள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-9)

# மின்சாரம் பெறுவதில் இரண்டும் கெட்டான் நிலை

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களில் பலர் தமது குடியிருப்புகளுக்கு மின்சாரம் பெறுவதில் இரண்டும்கெட்டான் நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியமர்ந்த மக்களுக்கு 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டதால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைத் தவர்களும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வீடமைப்புத் திட்டங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களும் மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தனர்.

விண்ணப்பம் செய்தவர்களின் படிவங்கள் அநுராதபுரத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மீளக்கிடைத்ததும் இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படுமெனதெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்இணைப்புவழங்கப்படுமென அறிவித்து ஒரு வருடத் திற்கு மேலாகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப் படவில்லை.

இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்காது நடை முறையின்படி மின் இணைப்புக்கு விண்ணப் பித்து பணம்செலுத்திய சிலருக்கு மின் இணைப்பு வழங்கப்பட் டுள்ளது.

இதேவேளை, வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து இதுவரை இணைப்பு கிடைக்காததால் விரக்தியடைந்த சிலர் பணம் செலுத்தி மின் இணைப்புப் பெற முயற்சித்த போது அவர்களின் விண்ணப்பங்களைப்பெறமின்சார சபையினர் தயக்கம் காட்டுகின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்துக்கு விண்ணப் பித்த படிவங்களின் முடிவு கிடைக்கும் வரை அதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு பணம்பெற்று மின் இணைப்பு வழங்க முடியாத நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களில் பலர் தமது குடியிருப்புக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சார இணைப்பு கிடைக்காத நிலையிலும் பணம் செலுத்தியும் மின் இணைப்பு பெற முடியாதநிலையும் இரண்டும் கெட்டான்நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# கடந்த மாதம் யாழ்.ஆஸ்பத்திரியில் வலுவிழந்த 23 சிறுவர்களுக்கு சிகிச்சை

## பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் தகவல்

வலுவிழந்த 23 சிறுவர்கள் கடந்த ஜூலை மாதத் தில் மட்டும் யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் ஆர்.கணேசலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்துக்கென பிரதான தொழில் வழிச்சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுமே உள்ளது. இந்த நிலையில் அதிகமாக சிறுவர்களே இங்கு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து ஜூலை மாதம்வரை 217 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில்சிறுவர்களே அதிகமானவர்கள். எனினும் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 23 சிறுவர்கள் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மன்னார், வவுனியா, திருகோணமலை, உட்பட வன்னி மாவட்டம், யாழ். மாவட்டம் என வடமாகாணத்தில் பல பாகங்களிலும் இருந்து நோயாளர்கள் வந்த வண்ணமே உள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சையே முன்னிலைப்படுத்தி வழங்கப்படுகிறது. ஊனையடக்கவாதநோய், தற் கொலை முயற்சி, விபத்து போன்ற காரணங்களால் அங்கங்கள் செயலிழந்து அல்லது அங்கங்கள் இழக்கும் நோயாளர்களுக்கும் விடுதிகளில் வைத்து சிகிச்சை வழங்கப் படுகிறது.

கடந்த 7 மாத காலப் பகுதிக்குள்மட்டும்50வயதுக்கு மேற் பட்டவர்களில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 42 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்கொலை முயற்சி, விபத்து, நாள்பட்ட காயங்கள், சத்திரசிகிச்சையால் உண்டான காயங்கள் காரணமாக எட்டு வயது முதல் 32 வயதுக்கு உட்பட்டவர்கள் 62 பேரும், 12 வயதுக்குட்பட்ட அங்கங்கள் செயலிழந்து பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட 119 சிறுவர்களும் சிகிச்சைபெற்றுள்ளனர்.

சிறுவர்களுக்கான நோய்களைக் குணப்படுத்த தொழில் வழியூடாகச் சிகிச்சை வாரந்தோறும் வழங்கப்படுகிறது. இயந்திர சாதனங்கள், சிகிச்சைக்கான உபகரணங்கள், இட வசதிகள் இல்லாத போதும் பெரும் சிரமத்தின் மத்தியில் இங்கு சிகிச்சை வழங்கிவருகின்றோம்.-என்றார். (ம-14)



தேசிய நிரந்தரத் திட்டத்தில் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளுக்கான புனரமைப்பின் ஆரம்ப நிகழ்வு நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மரக்கன்று ஒன்றை நட்டு வைத்து நீரூற்றுகிறார். (ம-7)

# பயணிகளுடன் பாதாளத்தில் பாய்ந்து உருண்டது பஸ்

## 52 பேர் சாவு; 46 பேர் காயம்



சிம்லா, ஓக. 13

இமாச்சலப் பிரதேசத்தில் பயணிகள் பஸ், 250 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்ததில் 18 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 52 பேர் உயிரிழந்தனர்.

இமாச்சலப் பிரதேசத்தில் சம்பா என்ற இடத்திலிருந்து துலேரா என்ற இடத்துக்கு தனியார் பஸ் நேற்றுமுன்தினம் காலை புறப் பட்டது. 42 பேர் செல்ல வேண்டிய பஸ்ஸில் 100 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். பலர் பஸ் கூரையில் அமர்ந்தும் பயணம் செய்தனர். சம்பாவிலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ராஜேரா என்ற இடத்தில் மலைப்பாதையில் பஸ் சென்று கொண்டிருந்த போது, அதன் டயர் வெடித்தது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் அருகில் உள்ள 250 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்து நொருங்கியது. இதில் சாரதி உட்பட 39 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 13 பேர் ஆஸ்பத்திரியில் இறந்தனர். காயம் அடைந்த 46 பயணிகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 12 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப் பட்டன.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இமாச்சலப் பிரதேச முதல்வர் துமல் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். (வ)

அஸாம் வன்முறைகளைக் கண்டித்து

# மும்பையில் முஸ்லிம்கள் நடத்திய போராட்டம் கலவரத்தில் முடிந்தது

## 2 பேர் சாவு; 55 பேர் படுகாயம்



அஸாம் மாநிலத்தில் நடைபெறும் வன்முறையைக் கண்டித்து நேற்று முன்தினம் மும்பையில் முஸ்லிம்கள் நடத்திய போராட்டமும் கலவரமாக மாறியதில் 2 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 55 பேர் படுகாயமடைந்தனர்.

அஸாமில் கோக்ரஜாரில் கடந்த வாரம் போடா பழங்குடியின பிரிவினருக்கும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் நடந்த வன்முறைகளில் 73 பேர் உயிரிழந்தனர்.

இதில் முஸ்லிம்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து மும்பை ஆசாத் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகலில் ரசா அகடமி என்ற அமைப்பினர் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டத்தில் திடீரென வன்முறை வெடித்தபோது போராட்டக்காரர்களில் சிலர் பாதுகாப்புக்கு வந்திருந்த பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்கியதோடு, அங்கிருந்த வாகனங்களைத் தீயிட்டும் கொளுத்தினர்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர தடியடி நடத்திய பொலிஸார், பின்னர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தனர். கலவரக்காரர்கள் அப்போதும் கலைந்து செல்லாததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2 இளைஞர்கள் உயிரிழந்தனர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து மகாராஷ்டிர முதல்வர் ப்ரித்விராஜ் சவான் ஆறுதல் கூறினார்.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏன் வன்முறையில் இறங்கினர் என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும், மும்பை குற்றப்பிரிவு பொலிஸாரிடம் இது குறித்த விசாரணை ஒப்படைக்கப்பட்டு அவர்கள் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

### கேள்வி கேட்ட விவசாயியை மம்தா 'உள்ளே' தள்ளினார்



மிட்னாபூர், ஓக.13

மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தாவிடம் கேள்வி கேட்ட விவசாயி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் மிட்னாப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த முதலமைச்சர் மம்தா பானர்ஜி, தன்னிடம் பொதுமக்கள் ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேட்கலாம் என்று கூறினார்.

இதையடுத்து துணிச்சலோடு எழுந்து நின்ற ஒரு விவசாயி, நீங்கள் ஆட்சிக்கு வந்து விவசாயிகளுக்காக எதுவுமே செய்யவில்லை, நாம் கையில் பணம் இல்லாமல் திண்டாடுகிறோம். வெறும் வாக்கு றுதிகளை மட்டும் கொடுத்தால் போதாது என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இதனால் கோபமடைந்த மம்தா, அவரை மாவோயிஸ்ட் என்றும், தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் ஏசினார். இந்தநிலையில், முதலமைச்சரின் பொதுக் கூட்டத்தில் இடையூறு செய்த குற்றத்துக்காக அந்த விவசாயி நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். (வ)



குஜராத் மாநிலம் பவன்நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாநில முதல்வர் நரேந்திரமோடி தானியங்கி முறையில் இயங்கும் கப்பல் செயன்முறையைக் கேட்டறிந்தார்.

# 500 ரூபாவுக்காக குண்டு வீசும் காஷ்மீர் ஏழைச் சிறுவர்கள்

உலகின் அதிமுக்கிய தீவிரவாத அமைப்பான லஷ்கர்-இ- தொய்பா, ரூ.500 கொடுத்து காஷ்மீரிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு வெடிகுண்டு வீச பயிற்சி அளிக்கும் விடயம் அம்பலமாகியுள்ளது. காஷ்மீரின் சோபோர் பொலிஸ் பிரதான நிலையம் மீது கடந்த 2 ஆம் திகதி 2 சிறுவர்கள் கையெறி குண்டுகளை வீசிவிட்டு தலை மறைவாகினர்.

தங்களது முகத்தை மறைத்துக் கொண்டு காய்கறி வாகனத்தை தள்ளிக் கொண்டே வந்த இந்தச் சிறுவர்கள் குண்டுகளை வீசி விட்டு தப்பித்துச் செல்வது அங்கிருந்த கமராவில் பதிவானது.

இதுபோல 2 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர் என்றும் அவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கமராவின் பதிவுகளை வைத்து அந்தச்சிறுவர்களைப் பிடித்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தியதில் ரூபா 500 ரூபா வாங்கிக் கொண்டு குண்டு வீசியதாக அவர்கள் ஒப்புக் கொண் டனர்.

ஏழ்மை நிலையில் உள்ள சிறுவர்களை இதுபோன்ற தீவிரவாதச் செயல்களுக்கு பயன்படுத்துவது தீவிரவாதிகளுக்கு எளிதாக உள்ளது என்று இந்த வழக்கை விசாரித்து வரும் சோபோர் மாவட்ட பொலிஸ் அதிகாரி இம்தியாஸ் அகமது கூறினார்.

மேலும், சோபோர் பகுதியில் மட்டும் இதுபோல 2 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர் என்றும் அவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# அத்திபாரம் தோண்டிய வேளை நிலத்தடியில் கண்ணாடி மாளிகை

## காளகஸ்தியில் பெரும் பரபரப்பு



ஸ்ரீகாளஹஸ்தி, ஓக.13

வீடு கட்ட அத்திபாரம் தோண்டியபோது, நிலத்துக்கு அடியில் கண்ணாடி மாளிகையும் சுரங்கப் பாதையும் இருப்பது தெரிய வந்தது.

இதனை அறிந்ததும் ஏரா ளமான மக்கள் அந்த இடத்தில் திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீகாள ஹஸ்தி மண்டலம் அம்பா ளையம் கிராமத்தைச் சேர்ந்த வர் குருவய்யா விவசாயி. நகரி வீதியில் உள்ள இவருக் குச் சொந்தமான இடத்தில் வீடு கட்ட திட்டமிட்டுள் ளார். அத்திபாரத்துக்காக பள்ளம் தோண்டும் பணியில் தொழிலாளிகள் ஈடுபட்டுள்ள னர். கடந்த 7 ஆம் திகதி பள்ளம் தோண்டும் போது, பூமிக்கு அடியில் கட்டடம் தென்பட்டதைப் பார்த்து தொழிலாளிகள் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். மேலும் ஆழ மாகத் தோண்டிய போது கட்டடத்துக்கு செல்லும் படிக்கட்டுகள் தெரிந்தன. பள்ளம் தோண்ட தோண்ட படிக்கட்டுகள் கீழிறங்கிச் சென்றன. பின்னர் பூமிக்கடியில் இருக்கும் கட்டடத் துக்குச் செல்லும் அளவுக்கு வழி தெரிந்தது. அப்போது அந்த வழி ஒரு சுரங்கப் பாதைக்கு சென்றது. இந்தத் தகவல் சுற்று வட்டார பகுதி களில் பரவியதும் ஏராளமான பொதுமக்கள் அங்கு திரண்டனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அந்தப்பகுதியில் பொதுமக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள் ளது. (வ)

# இந்திய கடற்படைக்கு 900 ஹெலிகள்

## 10 ஆண்டுகளில் வாங்கத் திட்டம்

இந்தியக் கடற்படையை நவீனமயமாக்கும் நோக்கத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் 900 ஹெலிகொப்டர்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக ரீதியில் ஹெலிகொப்டர் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் போயிங், பெல், சிகோர்ஸ்கை, காமோவ், ஈரோகாப்டர், அகஸ்டர்வெஸ்ட் லேண்ட் ஆகிய நிறுவனங்களுக்கு இதற்கான கேள்வி கோரலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கேள்விகோரலின் மதிப்பு ரூ.5 ஆயிரம் கோடியாகும்.

முதற்கட்டமாக ரோந் துப் பணி, தீவிரவாத எதிர்ப்பு, நிவாரணப் பணி, நீர்மூழ்கிக் கப்பல் அழிப்புப் பணி மற்றும் உளவுப்பணிக்காக 56 ஹெலிகொப்டர்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று இந்திய கடற்படைத் தலைவர் நிர்மல் வர்மா தெரிவித்துள்ளார். (வ)

# ராகுல் காந்தி அமைச்சரானால் வரவேற்பேன் என்கிறார் மன்மோகன்

டில்லி, ஓக.13

ராகுல் காந்தி மத்திய அமைச்சரானால் வரவேற்பேன் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலுக்கு, கட்சியிலும், ஆட்சியிலும், முக்கிய பொறுப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்கள், அண் மைக்காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா, சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோர், இந்த விடயம் குறித்து பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்தனர். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இதுபற்றி கட்சித் தலைவர் சோனியாவுக்குக் கடிதம் எழுதினர். இதற்குப் பதில் அளித்த ராகுல், 'எனக்கு என்ன பதவி கொடுக்க வேண்டும் என்பதை, பிரதமரும், கட்சித் தலைவரும் தான் முடிவு செய்ய வேண்டும்' என்று கூறியிருந்தார். (வ)

# நிலநடுக்கம்; 250 பேர் சாவு

## ஈரானில் 4 கிராமங்கள் தரைமட்டமாயின




தெஹ்ரான், ஓக.13

ஈரானில் 11 நிமிட இடைவெளியில் 2 முறை ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 250 பேர் உயிரிழந்தனர்.

ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தில் உள்ள ஆஹார், ஹாரிஸ், வர்சாகான் ஆகிய நகரங்களை நேற்றுமுன்தினம் மாலை 4.53 மணிக்கு நிலநடுக்கம் உலுக்கியது.

இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளுக்கும் மேல் பதிவானதாக, தெஹ்ரான் பல்கலைக் கழகத்தின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் 250 பேர் வரை இறந்ததாகவும், 400 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த் நிலநடுக்கங்களால் 60 கிராமங்கள் பலத்த சேதமடைந்தன. 4 கிராமங்கள் ஒட்டுமொத்தமாகத் தரைமட்டமானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, மேற்கண்ட நகரங்களில் 5 முறை சிறிய அளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டன.

இதனால் பீதியில் உறைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியில் ஓடிவந்தனர். நில அதிர்வுகள் அதிகம் உணரப்பட்ட டப்ரிஸ் நகரத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது. ஈரானின் அவசரகால மீட்புப் பணிகள் துறைத் தலைவர் மஹ்மூத் முஸாபர் இது குறித்துக் கூறுகையில், அருகிலுள்ள கிராமங்களை ரேடியோ டிரான்ஸ் ரிசீவர் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ள முடிகிறது. ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப்பணி முடுக்கி விடப்பட்டுள்ளது என்றார்.

ஈரானின் பாம் நகரத்தில் 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 31 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வான் எல்லையும் கட்டுப்பாட்டில்...



சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டு தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன. அலெப்போவை அண்மித்த கிராமங்களில் போராளிகளுக்கும் அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையில் தாக்குதல்கள் சூடுபிடித்திருக்கின்றன. போராளிகளுக்கு பெரும் சவாலாய் இருக்கும் சிறிய விமானங்களை, கட்டுப்படுத்தும் நோக்கில் வான் எதிர்ப்பு ஏவுகணைகளை இப்போது பயன்படுத்தத் தொடங்கி இருக்கின்றனர்.

## விண்வெளியிலும் ஒலிம்பிக் பார்க்கும் வீரர்கள்

ஹூஸ்டன், ஓக. 13

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய வம்சாவளி அமெரிக்க வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், அங்கிருந்தபடியே லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளைக் கண்டுகளித்து வருகிறார்.

இரண்டாது முறையாக விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ள சுனிதா வில்லியம்ஸ், கடந்த இரண்டு வாரங்களாக லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளைத் தொலைக் காட்சியில் பார்த்து வருகிறார்.

இது குறித்து அவர் கூறும்போது;

விண்வெளியில் மிதந்தபடி ஒலிம்பிக் போட்டியைப் பார்ப்பது எங்களுக்கு மிகுந்த உத்வேகத்தை அளிக்கிறது. எங்களை சிறந்த விளையாட்டு வீரர்களாக உணர வைக்கிறது என்றார். விண்வெளி வீராங்கனையாவதற்கு முன்பு அமெரிக்க கடற்படையில் பணியாற்றிய சுனிதா வில்லியம்ஸ், அப்போது பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுனிதாவுடன் இணைந்து ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் நாஸாவின் விண்வெளி வீரர் ஜோ அகாபா கூறுகையில்;

எங்களது பல்வேறு பணிகளுக்கு இடையே, சிறிது நேரத்தை ஒலிம்பிக் போட்டிகளைப் பார்ப்பதற்கு செலவிட்டு வருகிறோம். எமக்கு பிரிட்டனில் இருந்து நேரடியாக ஒலிம்பிக் போட்டிகளை பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. யாருக்கும் கிடைக்காத இந்தச் சந்தர்ப்பம் மிக்க மகிழ்வளிக்கிறது- என்றார்.

## காருக்குள்ளிருந்து சடலங்கள் மீட்பு

மெக்ஸிக்கோ, ஓக.13

வட மெக்ஸிக்கோவின் வோட்டர்பார்க் அருகே கைவிடப்பட்டிருந்த கார் ஒன்றுக்குள் அழுகிய நிலையில் இருந்த 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதற்கு ஒரு சில நாள்களுக்கு முன்புதான் விளையாட்டுப் பயன்பாட்டு வாகனத்தில் அடைத்து வைக்கப்பட்ட 14 உடல்களைப் பொலிஸார் மீட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நடந்த பகுதிக்கு அருகில், ஒரு போதைப் பொருள் கிடங்கைப் பறிமுதல் செய்த பொலிஸார் அதன் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கும், இந்த மரணங்களுக்கும் ஏதேனும் தொடர்பிருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## கையெழுத்திட்டார் ஒபாமா

வொஷிங்டன், ஓக. 13

பாகிஸ்தானிலிருந்து செயற்படும் ஹக்கானி இயக்கத்தை வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாக அறிவிப்பது குறித்து வெளியுறவுத் துறை தீர்மானிப்பதற்கு வகை செய்யும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டார்.

ஹக்கானிக்குத் தடை விதிப்பது தொடர்பான சட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சமீபத்தில் ஒப்புதல் வழங்கின.

அமெரிக்க ராணுவத்தினர் கொல்லப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, இந்தச் சட்டத்துக்கு ஒபாமா உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் புலனாய்வுக்கான நிரந்தர நிலைக் குழுத் தலைவருமான மைக் ரோஜர்ஸ் கூறியிருந்தார்.

**இந்த சட்டத்தில் ஒபாமா வெள்ளிக் கிழமை கையெழுத்திட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.**

இதையடுத்து, இந்தச் சட்டத்தில் ஒபாமா வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஹக்கானிக்கு உதவி செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து வரும் பாகிஸ்தான், அந்த அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையைப் புறக்கணித்து வருவது குறிப்பிடத்தக்கது

## ஈரானின் நிலைப்பாடு அழிவுக்கே வழிவகுக்கும்

சிரிய பிரச்சினையில் ஈரான் தலையிடுவது என்பது ஆக்கபூர்வமானதாக இருக்காது; மாறாக அழிவுக்கே வழி வகுக்கும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிரிய பிரச்சினையில் மத்தியஸ்தராகச் செயல்படத் தயார் என ஈரான் அறிவித்திருந்தது. ஆனால், ஈரானின் செயல்பாடு சொந்த நாட்டு மக்களையே கொன்று குவிக்கும் சிரியா ஜனாதிபதி அசாத்தின் செயல்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகவே அமையும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கலிபோர்னியா மாகாணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஏயார் போர்ஸ் ஒன் விமானப் பயணத்தின் போது, உடன் பயணம் செய்த செய்தியாளர்களிடம் வெள்ளை மாளிகை செய்தித்துறைச் செயலர் ஜே கார்னி இது குறித்துக் கூறியதாவது:-

சிரிய பிரச்சினையில் ஈரான் ஆக்கபூர்வமாகச் செயல்படும் என்பதற்கு ஆதாரங்கள் எதுவுமில்லை. சொந்த நாட்டு மக்களையே கொடூரமாகக் கொலை செய்யும் சிரிய ஜனாதிபதி அசாத்தின் செயல்களுக்கு ஊக்கமளிப்பதாகவே அமையும் என்றார்.

அரசின் செய்தித் தொடர்பாளர் பாட்ரிக் வென்ட்ரெல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஈரானின் சிரியா தொடர்பான நடவடிக்கைகள் அழிவை ஏற்படுத்துவதாக இருக்கும் எனக் கருதுகிறோம்.

அசாத்தைத் தொடர்ந்தும் ஆட்சியில் தக்கவைக்கும் முயற்சியாகவே அது இருக்கும். மக்கள் அடக்கி ஒடுக்கப்படும் இந்த நிலை நீடிக்கும். அரசியல் ரீதியான தீர்வை மட்டுப்படுத்தும் முயற்சியாகவும் இருக்கும்.

சிரிய வன்முறைகளில் கடந்த வெள்ளிக்கிழமை 78 பேர் உயிரிழந்துள்ளனர். வியாழக்கிழமை 162 பேர் உயிரிழந்துள்ளனர்.

அரசு மனசாட்சியற்ற முறையில் மக்கள் மீது, வான்வெளி மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தி வருகிறது. மனிதாபிமான உதவிகளை முடக்கியதுடன், மருத்துவமனைகளையும் அரசு மூடியுள்ளது.

அரச எதிர்ப்புப் படையினர் வலுப்பெற்று வருகின்றனர். நாட்டின் வடக்குப்பகுதியில் பெரும்பான்மைப் பிரதேசங்களை அவர்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் ன்றார் பாட்ரிக் வென்ட்ரெல்.

இதற்கிடையில், சிரியாவுக்கான ஐ.நா.வின் சர்வதேசத் தூதரான கோபி அனான் பதவி விலகல்அறிவிப்பை வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்து, அடுத்த தூதராக நியமிக்கப்படுபவர் யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இது குறித்துப் பெயர் குறிப்பிட விரும்பாத ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

அல்ஜீரியாவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் லக்தார் பிராஹிமி அடுத்த தூதராக நியமிக்கப்படுவதற்கு வாய்ப்பு அதிகமுள்ளது.

ஸ்பெயினின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் மிக்கேல் ஏஞ்சல் மொராட்டினோஸ், நேட்டோ முன்னாள் தலைவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைகள் தலைவருமான ஜேவியர் சொலானா ஆகியோரும் பரிசீலனையில் உள்ளனர் - என்றார்.

## துணை ஜனாதிபதி வேட்பாளர் குடியரசுக் கட்சி அறிவிப்பு



**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் விறுவிறுப் படைந்து வருகிறது. இதில் தற்போது ஜனாதிபதியாக உள்ள ஒபாமா, ஜனநாயகக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார்.இவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் மிட்ரோம்னியும் போட்டியிடுகிறார்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மிட் ரோம்னி, துணை ஜனாதிபதிக்கான வேட்பாளரை நேற்று முன்தினம் அறிவித்தார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் விறுவிறுப்படைந்து வருகிறது. இதில் தற்போது ஜனாதிபதியாக உள்ள ஒபாமா, ஜனநாயகக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார்.இவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் மிட்ரோம்னியும் போட்டியிடுகிறார். இந்த நிலையில் நோர்புளோக்கில் பரப்புரை செய்து வரும் மிட்ரோம்னி, குடியரசுக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராகப் பவுல்ரையான் என்பவரை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அமெரிக்க நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட அறிக்கைக் குறித்த பிரதிநிதிகள் சபையின் தலைவரான பவுல்ரையான், விஸ்கோன்ஸ்சின் மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.


# சிரியாவின் நிலவரம் ஹிலாரி ஆலோசனை

## துருக்கியில் பல தரப்புகளுடன் விவாதம்

ஸ்தான்புல், ஓக. 13

சிரிய நிலவரம் குறித்துத் துருக்கி அரசுடன் ஆலோசனை நடத்த, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் துருக்கி சென்றுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கான சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின், ஹிலாரி நேற்றுமுன்தினம் துருக்கி சென்றடைந்தார். துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல், பிரதமர் ரிசெப் டொயிப் எர்டோகன், வெளியுறவுத் துறை அமைச்சர் அஹ்மத் தாவுடோக்லு ஆகியோருடன் ஹிலாரி ஆலோசனை நடத்துகிறார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், சிரிய எதிர்க்கட்சியினர் மற்றும் அகதிகளும் பங்கேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



சிரியாவுக்கு எதிராக ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட 3 தீர்மானங்களை ரஷ்யாவும், சீனாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்து விட்டதால், அடுத்த கட்ட ஆலோசனையில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

மூன்று வியூகங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக, அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சிரிய ஜனாதிபதியின் எதிர்த்தரப்பை ஆதரிப்பதால் ஏற்படும் பயன்கள் குறித்து மதிப்பீடு செய்வது, சிரிய அரசைத் தனிமைப்படுத்தி அழுத்தம் கொடுப்பது ஆகிய விடயங்கள் விவாதத்தில் இடம்பெறுகின்றன.

சிரியாவில் இருந்து வெளியேறும் அகதிகள் துருக்கியில் தஞ்சமடைவதால், துருக்கிக்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிரியா அகதிகள் துருக்கியில் தஞ்சமடைந்துள்ளனர். துருக்கிக்குக் கூடுதலாக 55 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை ஹிலாரி அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பிலிப்பைன்ஸ் வெள்ளம் நீடிப்பு 66 உயிர்கள் பரிதாப இறப்பு




ஒவ்வொரு மழைக் காலங்களிலும் பிலிப்பன்ஸில் புயல், வெள்ளம் ஏற்படும். 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்துக்குப் பின்னர் இப்போதுதான் இந்தளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மணிலா, ஓக. 13

பிலிப்பைன்ஸில் வெள்ளப் பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது. 20 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் கடந்த 2 வாரங்களாகப் பெய்த மழையைத் தொடர்ந்து பெருவெள்ளம் ஏற்பட்டது.

ஒவ்வொரு மழைக் காலங்களிலும் பிலிப்பைன்ஸில் புயல், வெள்ளம் ஏற்படும். 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்துக்குப் பின்னர் இப்போதுதான் இந்தளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2 வாரங்களாகப் பெய்த தொடர் மழையினால் தலைநகர் மணிலாவின் 80 சதவீதம் பகுதி வெள்ள நீரால் சூழ்ந்து காணப்பட்டிருந்தது. வெள்ள நீர் வடிந்ததைத் தொடர்ந்து முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

இடைக்கால நலன்புரி நிலையங்களில் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எப்படியும் அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப இன்னும் 7 நாள்களாவது ஆகும்.

அதுவரை அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் வேண்டும் என்று பாதுகாப்புத் துறை அதிகாரி பெனிடோ ரமோஸ் தெரிவித்தார்.

# லிபியாவுக்கு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர் சபாநாயகரானார்

லிபயாவின் புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக, எதிர்க் கட்சிகளின் முக்கியஸ்தரான முஹமட் மெக்கரிப் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் தலைவர் கடாபியின் அரசுக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியவராக மெக்கரிப் கருதப்படுகின்றார்.

லிபியாவின் தேசிய மாற்றத்துக்கான பேரவையினால், 200 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்திடம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களால் கடாபி கொல்லப்பட்டதன் பின்னர், ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. அந்த நாட்டின் ஆட்சி மாற்றத்துக்காக போராடிய போராளிகளை அதிகளவு கொண்டுள்ள கட்சி தற்போது ஆட்சி அமைத்துள்ளது. இதுவரை காலமும் லிபிய நாடாளுமன்றத்துக்கு சபாநாயகர் ஒருவர் தெரிவு செய்யப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் கடாபியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 08 . 1945



மறைவு 06 . 08 . 2010

அமரர் **இரத்தினம் பொன்னம்பலம்**

திதி: ஏகாதசி

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ இரண்டாகின - அப்பா!
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்....

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(21701) (45.6.7)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## கூகுள் தளத்துக்கு அபராதம்

தனிநபர் சுதந்திர விதிமுறையை மீறி, விளம்பரங்களை இடம் பெறச் செய்த கூகுள் நிறுவனம், அபராதத் தொகையாக, 22.5 மில்லியன் டொலர் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளதாக, அமெரிக்கத் தலைமை வர்த்தகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு முதல், இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை, அப்பிள் வெப்ப்ரவ்சர் கணினிகளில் கூகுள் நிறுவனத்தின் டபுள் கிளிக்என்ற விளம்பரம் தாமாக இடம் பெற்றிருந்தது.

கணினி பயன்படுத்துவோரின் விருப்பத்துக்கு மாறாக, இந்த வசதியை இடம் பெறச் செய்ததன் மூலம், தனிநபர் சுதந்திர விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக, கூகுள் நிறுவனத்தின் மீது, குற்றம் சுமத்தப்பட்டது. இந்த விதிமீறலுக்கான அபராதத் தொகையாக, 22.5 மில்லியன் டொலர் செலுத்த வேண்டும் என, அமெரிக்க தலைமை வர்த்தகத் திணைக்களம் உத்தரவிட்டது.

கூகுள் நிறுவனம் தனது தவறை ஒப்புக்கொண்டு, அபராதத் தொகையை செலுத்த முன்வந்துள்ளதாக, அமெரிக்க தலைமை வர்த்தகத் திணைக்களம் நேற்று முன்தினம் தெரிவித்தது. ஏனைய நிறுவனங்களுக்கும் இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகவே, இவ்வளவு பெரிய தொகையை அபராதமாக விதித்தோம் என, அமெரிக்க வர்த்தகத் திணைக்களத் தலைவர் ஜோன் லீபோவிட்ஸ் கூறினார்.

## நீங்காத நினைவுகளோடு

**8 ஆம் ஆண்டு**

மலர்வு 29 ★ 11 ★ 1952



உதிர்வு 11 ★ 08 ★ 2004

**இளையதம்பி அமிர்தலிங்கம்**

(அமுதர் கல்லுடைக்கும் ஆலை ஸ்தாபகர்)

**22 ஆம் ஆண்டு**

மலர்வு 17 ★ 07 ★ 1986



உதிர்வு 17 ★ 03 ★ 1990

**அமிர்தலிங்கம் அபிதா**

திதி : 13.08.2012 (ஏகாதசி)

கரிசனையுடன் எம்மை வளர்த்து நெறிப்படுத்திய தந்தையே!
காத்திருந்து கண்விழித்து எம் கல்வியின் நல்வழிகாட்டியாய்
காத்திருந்து கணிவிழித்து எம் கல்வியின் நல்வழிகாட்டியாய்
கீதமாய் ஒலிக்கிறது இன்றும் உன் மழலை வார்த்தைகள் எம் தங்கையே
என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்
"உமையவள் உறை"
கோப்பாய் தெற்கு, கோப்பாய் (21614)(6.7.8)

பாசமிகு குடும்பத்தினர்.


## பெற்றுக்கொள்ளவும் இலவசம் - FREE

தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை இறுதி மாதிரி வினாத்தாள்கள்

1. "வித்தியா கீர்த்தி சிறி சம்மான" ஜனாதிப்தி விருது பெற்ற ந. சந்திரகுமார் - மட்டக்களப்பு அவர்களின் வினாத்தாள் - 01
2. கலாபூசணம் புண்ணியமீன் அவர்களின் வினா விடை - 01
3. 'புகழ்' - வெளியீட்டுப்பிரிவின் ஆசிரியர் விஜேந்திரன் அவர்களின் - பரீட்சைக்கால ஆலோசனை - அச்சுப்பிரதி - 01

இவை அனைத்தையும் எமது வாடிக்கையாளர் இன்று முதல் இலவசமாக பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

**அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

தொ.பே. 222 9881

(சி/2199) (45.6.7)


**University of Jaffna**
**Prof. Chellathurai Sivagnanasundram Memorial Lecture**

**Community Based Medical Education- Opportunity or challenge?**

**Speaker:** Dr. Ann Elizabeth O'Brien
Clinical Senior Lecturer
Community Based Medical Education Unit
Barts and The London, School of Medicine and Dentistry, Queen Mary University of London.

**Venue** : Kailasapathy Auditorium
University of Jaffna.

**Date** : 14.08.2012

**Time** : 2. P.m.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Registrar.

(C2912) (45.6.7)

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(14)

நெப்போலியன் தன் நிலை உணர்ந்து ஒரு மனிதனாய் நடந்து கொண்டான் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக் காட்டு.

நெப்போலியனுடைய வாழ்க்கையை முழுமையாகப் பார்த்தால் கடைசிவரையில் வெற்றி பெற்ற மனிதனாகவே அவன் வாழ்ந்திருக்கிறான் என்பது தெளிவாகும்.

வீழ்ச்சியடைந்த காலத்திலும் நெப்போலியன் அதை ஒரு தோல்வியாக எண்ணவில்லை. அவன் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றி பெற்று நிறைவு கண்ட மனிதன்-முடி இழந்த காலத்திலும் பண்புள்ள மனிதனாக வாழ வேண்டும் என்கிற இலட்சியத்தோடு அவன் வாழ்ந்தான். ஆக நெப்போலியன் போரில் தோற்றதை போர்த் தோல்வியாகக் கருதலாமே தவிர வாழ்க்கைத் தோல்வியாகக் கருத முடியாது. ஏனெனில் மாவீரன் என்கிற சிறப்போடு இன்றைக்கும் வரலாற்றில் நெப்போலியன் வாழ்ந்து கொண்டு இருக்கிறான்.

எந்த மனிதனுடைய இலட்சியமும் முழுமையாக வெற்றி பெற வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. ஒரு வெற்றியை அடைந்தவுடன் இன்னொரு வெற்றியைப் பெறுவதற்கு மனிதன் ஆசைப்படுவது இயல்பு. இது வரவேற்க வேண்டியதும் கூட. சில இலட்சியங்கள் அவனுக்குக் கைகொடாமல் போகலாம். அதனால் அது தோல்வியாகி விடாது.

எந்த ஒரு மனிதனின் வாழ்க்கையினையும் முழுமையாக வைத்துத் தான் அவன் பெற்ற வெற்றிகளை நிர்ணயிக்க வேண்டும். மனிதனுடைய வாழ்நாள் குறுகியது. அனைத்தையும் சாதிக்கின்ற ஆற்றல் ஒருவனுக்கு இருந்தாலும் அதைச் சாதித்து முடிப்பதற்குப் போதுமான வாழ்நாள் அவனுக்கு இருப்பது இல் லை.

வெற்றி பெற்ற மனிதர்கள் தொடர்ந்து சாதனைப் பயணம் செய்தார்கள் என்பது தான் அவர்களுடைய வாழ்க்கைச் சிறப்பாக அமைகிறது. வெற்றி வாய்ப்புகளை இழக்கும் போது அவர்கள் சோர்ந்து போவதில்லை. தவறுகளைத் திருத்திக் கொண்டு, குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு அவர்கள் வெற்றிப் பயணத்தில் ஈடுபடுகிறார்கள்.

எதையும் தோல்விகளாக அவர்கள் ஏற்பதில்லை. விபத்துக்களிலிருந்து பாடம் பெறுகிறார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் பின்னோக்கி அவர்கள் நடப்பதில்லை. தோல்விகள் வெறும் கற்பனைகள் என்பது அவர்களுக்குத் தெரியும். கற்பனைகளில் நேரத்தை வீணாக்க விரும்பாத செயல் வீரர்கள் அவர்கள். செயற்படுகிறவனுக்கு வெற்றி கிட்டுகிறது. சோம்பேறிகள் மட்டும் தான் தோல்வியின் சாம்ராஜ்யத்தில் சுகமாக உலா வந்து கொண்டிருக்கிறார்கள்.

**சாதனைக்கு எதிரி அச்சம்**

மனிதனுடைய மிகப் பெரிய எதிரி அச்சம். பாரதியார் தன்னுடைய புதிய ஆத்திசூடியில் ''அச்சம் தவிர்'' என்று சொல்லியிருக்கிறார். 'தவிர்' என்கிற சொல்லை மிகுந்த அர்த்தத்தோடு பயன்படுத்தியிருக்கிறார். தவிர்த்தல் என்று சொன்னால், அணுகவிடாமல் விலக்குதல் என்று பொருள். அச்சத்தை நெருங்கவிடாதே என்று எச்சரிக்கிறார் பாரதியார்.

அச்சம் எப்போதும் மனிதனைச் சுற்றி வந்து கொண்டே இருக்கின்றது. அவன் கொஞ்சம் ஏமாந்தால் அவன் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடுகிறது. ஆகவே இந்த அச்சத்தினால் மனிதன் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒரு காரியத்தைத் தொடங்கும் போது நம் முன்னே முதலில் வந்து நிற்பது அச்சம். இந்தக் காரியத்தை வெற்றிகரமாக எப்படிச் செய்து முடிக்கப் போகிறோம் என்கிற அச்சம் ஆரம்பத்திலேயே தலைதூக்க ஆரம்பித்து விடுகிறது. இது தோன்றியவுடனேயே முயற்சியின் வேகம் குறைந்து போகிறது. இதனால் செய்கின்ற காரியத்தில் தேக்கமும் குறைபாடுகளும் ஏற்பட ஆரம்பிக்கின்றன.

எந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமென்றாலும் முதலில் அச்சம் நம்மை நெருங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு காரியத்தைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டுமானால் அந்தக் காரியத்தில் முழுமையான கவனம் இருப்பது அவசியமாகிறது.

மனிதன் எத்தனையோ விஷயங்களில் தன்னை எஜமானன் ஆக்கிக் கொண்டு விட்டான். ஆனால் அச்சம் மட்டும் இன்னமும் எஜமானனாக இருந்து பலரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கிறது. ஆல்பர்ட் கேமஸ் என்கிற பெரியார் இருபதாம் நூற்றாண்டை 'அச்சத்தின் நூற்றாண்டு' என்று பெயரிட்டு அழைத்திருக்கிறார். இருபதாம் நூற்றாண்டில் மனித இனமே அச்சத்துக்கு ஆளாகி இருப்பதாக அவர் கருதுகிறார்.

போர் பற்றிய அச்சம், சனத்தொகைப் பெருக்கம் பற்றிய அச்சம், பொருளாதார நெருக்கடி பற்றிய அச்சம், வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய அச்சம் இப்படி எத்தனையோ வகையான அச்சங்கள் இந்த நூற்றாண்டில் மனித இனத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கின்றன என்பது உண்மையே.

இவையெல்லாம் மனித இனத்தை எதிர்நோக்கியுள்ள அச்சங்கள். நாம் இங்கே கவனிக்க வேண்டியது தனி மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களைச் செயற்பட விடாமல் தடுக்கும் அச்சத்தைப் பற்றியதாகும்.

அச்சம் பலவகைப்படும்.ஒரு காரியத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள அக்கறைகூட அச்சமாக மாறி விடலாம். எந்த ஒரு காரியமும் வெற்றிகரமாக முடியுமா என்கிற அக்கறை ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்யும்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# கட்டடம் உயர்வடைந்தால் போதாது; மாணவரின் கல்வியும் உயர வேண்டும்

## வலி. கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக.13

பாடசாலைகளின் கட்டடத் தொகுதிகள் உயர்வடைந்தால் மட்டும் போதாது, மாணவர்களின் கல்வி அடைவு மட்டமும் உயர வேண்டும். அண்மைக் காலத்தில் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தைக் கருத்தில் கொள்ளாமல் கட்டடத் தொகுதியை மட்டும் கருத்தில் கொண்டு பாடசாலை நிர்வாகங்கள் செயற்பாடுகளை முன்னெடுப்பது கவலை தருகிறது. இந்த நிலைமாற வேண்டும். இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

**சமகால கல்வி அடைவு மட்டத்தின் வீழ்ச்சிக்குப் பொறுப்புக் கூறுவதில் தட்டிக் கழிப்பதற்கோ சாக்குப்போக்கு கூறி காலங்கடத்துவதற்கோ இடமிருக்கக் கூடாது**

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள ஊட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்றிட்ட ஆரம்ப விழா அண்மையில் அச்சுவேலி தெற்கு தோப்பு அருள்நந்தி வித்தியா சாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மகிந்த சிந்தனைக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை உரிய முறையில் பயன்படுத்தி மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்நிலை அடையச் செய்ய வேண்டும். ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றும் கிராமிய மட்டத்தில் ஊட்டப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இந்த வகையில் கிராமிய மட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் கல்வி அபிவிருத்தியில் கிராமம், நகரம் என்ற வேறுபாடு இன்றி இரண்டும் இணைந்த நிலையில் கல்வி அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகள் கருத்தில் கொள்ளப் படவில்லை. அந்த நிலை இன்று மாறிவிட்டது.

யாழ்.மாவட்டத்தில் கல்வித் தரம் கல்விப் பாரம்பரியம் வீழ்ச்சி அடைந்து செல்கின்றது. ஒரு காலத்தில் தேசிய மட்டத்தில் முன்னணியில் இருந்த மாவட்டம் இன்று பின்தங்கிய நிலைக்கு இறங்கியுள்ளது. இது கவலை அளிக்கிறது. இதற்கு கடந்த காலப் போரைக் காரணம் கூறி காலம் கடத்தக்கூடாது. மீண்டும் உயர் நிலை பெறுவதற்கான ஒன்றிணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

சமகால சூழ்நிலையில் மாணவர்களின் கல்வி அடைவு மட்ட முன்னெடுப்புக்கான வேலைத் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளின் கட்டடத் தொகுதி பெருக வேண்டும். உயர வேண்டும் என்ற எண்ணப்பாடு பாடசாலை நிர்வாகிகள் மத்தியில் மேலோங்கிக் காணப்படுகின்றது. மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் உயராத நிலையில், வெறும் கட்டடத் தொகுதியால் பயன் ஏதும் இல்லை. எனவே காலத்தின் தேவை அறிந்து கல்விச் சமூகம் செயற்பட முன் வர வேண்டும். எதிர்காலச் சமூகத்துக்கு பொறுப்புக் கூறத்தயாராக வேண்டும்.

இல்லாவிடில் வரலாற்றுப் பழிக்கு உள்ளாக வேண்டி ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

சமகால கல்வி அடைவு மட்டத்தின் வீழ்ச்சிக்குப் பொறுப்புக் கூறுவதில் தட்டிக் கழிப்பதற்கோ சாக்குப் போக்கு கூறி காலங்கடத்துவதற்கோ இடமிருக்கக் கூடாது. சம்பந்தப்பட்டவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட முன் வர வேண்டும்- என்றார். (எ-11)



ஓய்வுபெற்ற அதிபர் சைவர் வி.சிவசுப்பிரமணியத்தின் நினைவுப் பேருரை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.
நினைவுப் பேருரையை பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும், வாழ்த்துரையை ஸ்கந்தாவின் முன்னாள் அதிபர் கே.சிவாஜியும் ஏற்புரையை யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் சி.சிவானந்தராஜாவும் நிகழ்த்தினார். (எ-86)

# சைவப் புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், ஒக.13

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

இளஞ்சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் பின்வருமாறு:-

தி.டிக்சனப்பிரியா (களவாஞ்சிக்குடா), க.கைலநாதன் (வட்டுக்கோட்டை), ஐ.மனோறா (கொழும்பு), க.காசினி (மானிப்பாய்), ரமேஷ் நல்லதம்பி (மூதூர்), பா.திலகானந்தம் (ஒட்டுசுட்டான்), வே.சந்திரகுமார் (களுவாஞ்சிக்குடி), சி.ரசித்தா (மானிப்பாய்), ம.ரமணி (வாழைச்சேனை), தி.யுனித்தா (மட்டக்களப்பு), பா.சுதாகரன் (பொலநறுவை), எஸ்.அஸ்வினி (மட்டக்களப்பு), பு.கிருஷாந் (கல்குடா), க.ஜீவரதி (காரைதீவு), எஸ்.மலர்விழி (மட்டக்களப்பு), சி.ஜெயசங்கர் (கிழக்குப் பல்கலைக்கழகம்), செ.நிதர்சினி (கல்குடா).

சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் பின்வருமாறு:-

இ.கோபாலப்பிள்ளை (தோற்றாத்தீவு), சி.சறோஜினிதேவி (திருகோணமலை), ஞா.சிவானந்தஜோதி (திருகோணமலை), பு.கலாரஞ்சன் (தம்பிலுவில்), சு.கலைவாணி (சுன்னாகம்), ஞா.ஞானலோகேஸ்வரி (வவுனியா) (எ-14)

# புதிய அதிபர்

வடமராட்சி, ஒக.13

கற்கோவளம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய அதிபராக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றிய பொ.அரவிந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய எஸ்.புஸ்பராஜா பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-8)

# நியமனம்

தென்மராட்சி, ஒக.13

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முழு நேர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக இந்தப் பணிமனையில் பதில் சுகாதார வைத்திய அதிகாரிகள் கடமையாற்றி வந்தனர்.

பணிமனைக்கு முழுநேர சுகாதார வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டதையடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் நடத்தப்படும் கிளினிக்குகளில் சிகிச்சையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-9)

# ஓய்வு பெற்றார்

தென்மராட்சி, ஒக.13

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் கட்டளைச் சேவகரும், வெலியாத்து நிறைவேற்றுநருமாக கடமையாற்றிய செல்லையா சிதம்பரநாதன் தனது 34 வருட அரச பணியிலிருந்து கடந்த 31 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

இவரின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நீதிமன்ற ஊழியர் நலன்புரி சங்கத்தினால் நடத்தப்பட்டது. (எ-9)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## முடிந்த ஒலிம்பிக்கும் முடிவுறாத அகிம்சையும்

ஒலிம்பிக் போட்டிகள் நிறைவுக்கு வந்துவிட்டன. மிகுந்த கோலாகலத்துடன் இந்தச் சுற்றுக்கான ஒலிம்பிக்குக்கு உலகம் விடைகொடுக்கின்றது. ஒலிம்பிக்கை நேரடியாகப் பார்க்கத் தகுதி பெற்றிருந்த புலம்பெயர் தமிழர்கள் அதனையும் தமது அரசியலை வெளிப்படுத்தும் களமாகப் பயன்படுத்தினர். ஒலிம்பிக் நடத்தும் பிரிட்டன் அரசிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை ரீதியான போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் ஜனநாயகத்தையும், சக மனித விடுதலையையும் போதிக்கும் அந்த நாடும் தமிழர் பிரச்சினையைக் கைகழுவி, ஒலிம்பிக்கை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது.

ஒலிம்பிக் போட்டி லண்டனில் தொடங்கிய நாளிலிருந்து புலம்பெயர் தமிழரான சிவந்தன் இலங்கை அரசுக்கு எதிரான ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி வந்தார். ஒலிம்பிக்கின் வெற்றிகரமான முடிவோடு, அவரின் இனவிடிவுக்கான அகிம்சாப் போராட்டமும் நிறைவுக்கு வந்துள்ளது.

ஒலிம்பிக்கில் இலங்கை வீரர்கள் விளையாடுவதைத் தடைசெய்தல், இலங்கையை நோக்கி சர்வதேச அழுத்தங்களை அதிகரித்தல்,இலங்கை அரசும், அதன் படைகளும் இறுதிப் போரில் மேற்கொண்ட மனிதாபிமானமற்ற செயல்களைப் போர்க்குற்றமாகப் பிரகடனப்படுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக அந்த ஐந்து அம்சக் கோரிக்கைகள் அமைந்திருந்தன. ஆனால் அது பெரியளவில் எடுபட்டதாகத் தெரியவில்லை. பிரிட்டன் அரசு சிவந்தனின் உண்ணாநிலைப் போராட்டம் குறித்து வாய் கூடத் திறக்கவில்லை.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலம்பெயர் தமிழ் சூழலில் உருவாகியிருக்கும் பிளவுகள், கட்சி மோதல்கள் போன்றன பெருமளவிலான தமிழர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதைத் தடுத்து விட்டன. அதே போல விடுதலைக்காகப் போட்டியிடும் புலம்பெயர் ஊடகங்களும் இதனைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. தாயகத்திலும் சிவந்தனின் உண்ணாநிலைப் போராட்டம் குறித்த செய்திகள் பரவலடைந்தது எனக் குறிப்பிட முடியாது. அகவே ஒரு தனித் தமிழனின் மூன்று கிழமைகளுக்கு மேலான உண்ணாநிலை போராட்டம் உரிய வீரியத்தையும் கவனத்தையும் பெறத் தவறியிருக்கின்றது.

சமகாலத்தில், சிவந்தனின் போராட்டம் மட்டும் இந்த நிலைக்கு வரவில்லை. இலங்கை, தமிழகம் எனத் தமிழ் இளைஞர்கள் முன்னெடுக்கும் அகிம்சை ரீதியான போராட்டங்கள் தகுந்த கவனிப்பையோ அல்லது அவர்கள் முன்வைக்கும் இலக்கையோ பெறத் தவறி வருகின்றன. குறிப்பாக செங்கல்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் தமது விடுதலைக்கான உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடர்ந்திருந்தனர். இப்போதும் பூந்தமல்லி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் செந்தூரன் என்ற ஈழ அகதி விடுதலை கோரிய உண்ணாநிலைப் போராட்டத்தை மூன்றாவது நாளாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இந்தப் போராட்டங்கள் அனைத்துமே முடிவுகள் எட்டப்படாத நிலையில் இழுத்தடிப்புப் போராட்டமாக மாறியிருக்கின்றன.

தமிழ் இளையோரின் ஆயுத ரீதியிலான போராட்டங்கள் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலெழுந்திருக்கின்ற இந்த அகிம்சைப் போராட்டங்கள் சரியான கவனத்தைப் பெறத் தவறிவருகின்றன. அந்தக் கவனிப்புத் தவறலுக்கான சரியான காரணத்தைக் கண்டறிவது அவசியம். அந்தக் கண்டறிதலின் ஊடாகவே அடுத்த கட்டப் போராட்டத்தை வெற்றியை நோக்கி விரிவுபடுத்த முடியும். இல்லையேல், அடுத்த சுற்றிலும் ஒலிம்பிக் வரும். அப்போதும் தமிழர்களின் உண்ணாநிலைப் போராட்டம் கவனிப்பாரற்றுத் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலை வரக்கூடும்.

# இலங்கையை குடியரசாக்குவது எப்படி?

இலங்கை, குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவுற்றுள்ள நிலையில், இரண்டு குடியரசு அரசியல் யாப்புகள் தொடர்பாக மட்டும் நாம் மீளப்பார்க்காது, உண்மையான குடியரசு நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புதல் என்பது தொடர்பாகவும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

**1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு யாருடையது?**

1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு கொல்வினின் பங்களிப்பைக் கொண்டிருந்ததால், இது எமது அரசியல் யாப்பு என இடதுசாரிகளில் பலர் கருதிக்கொண்டனர். இது மிக மோசமான தவறாகும்.

அரசியல் யாப்பு ஒன்று வரையப்படும் போது, அரசியல் சீர்திருத்த விவகார அமைச்சரால் மட்டும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இருக்கக் கூடாது என கொல்வின் பின்னர் குறிப்பிட்டிருந்தார். இதன் இறுதி வரைபானது பல்வேறு அரசியற் தரப்புக்களாலும் உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில், அரசியல் யாப்பானது ஒற்றைக் கருத்தை சார்ந்ததாக இருந்தாலும் கூட, அது அவ்வாறு தான் இருக்க வேண்டும் என முத்திரை குத்தப்படக் கூடாது என கொல்வின் தெரிவித்திருந்தார்.

ஏனெனில், அரசியல் யாப்பு ஒற்றைக் கருத்தை மட்டுமே முதன்மைப்படுத்தியதாக இருந்தால், எதிர்காலத்தில் அதில் நெகிழ்வுத்தன்மையைக் காட்ட முடியாது என்பது கொல்வினின் கருத்தாகும். இதனால் இந்த அரசியல் யாப்பை இலங்கை சுதந்திரக் கட்சி நிராகரித்தது.

பெரும்பான்மை மக்கள் பின்பற்றுகின்ற பௌத்தமதத்திற்கு, அரசியல் யாப்பில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என அடிப்படைப் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய இலங்கை சுதந்திரக் கட்சியின் வலதுசாரிகள், பௌத்தமதத்தை இலங்கை அரச மதமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதன் காரணமாக, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு நெகிழ்வுத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பௌத்தமதத்திற்கு முக்கிய இடம் வழங்க வேண்டும் என்பதை கொல்வின் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்த நிலையில், 1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பானது யாருடைய அரசியல் யாப்பு என்பது தெளிவாகத் தெரிகிறது.

**1972,1978ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளும், தேசிய பிரச்சினையும்**

பிரிட்டன் ஆட்சியிலிருந்து இலங்கை முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டமை, நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டமை மற்றும் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டமை போன்றன 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் கிடைக்கப் பெற்ற நன்மைகளாகும். 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் தேசியப் பிரச்சினை முதன்மைப்படுத்தப்படவில்லை. இது மிகப் பெரிய பின்னடைவாகக் காணப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்கு அப்பால் ஐக்கிய முன்னணியானது வேறெந்த ஆணையையும் கொண்டிருக்காவிட்டால், அது தேர்தல் விளக்கவுரையில் குறிப்பட்ட சில வாக்குறுதிகளையாவது நிறைவேற்ற வேண்டும் என பெடரல் தமிழரசுக் கட்சியின் தர்மலிங்கம் குறிப்பட்டிருந்தார். அதாவது கச்சேரி முறைமையை நீக்குவது, மாவட்ட மட்டத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களை நியமிப்பது போன்றன ஐக்கிய முன்னணியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளாகும்.

ஆனால் தென் இலங்கையைச் சேர்ந்த எந்தக் கட்சிகளும் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளவில்லை. பதிலாக, பெடரல் கட்சியின் பரிந்துரைகளுக்கு இடையூறு விளைவிக்கின்ற நடவடிக்கைகளை இந்தக் கட்சிகள் முன்னெடுத்தன.

இவ்வாறான விட்டுக்கொடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, இதன் உடன்பாடுகள் சில நிறைவேற்றப்பட்டிருந்தால், இந்த நாட்டின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கலாம்.

1977இல் மேற்கொள்ளப்பட்ட தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விளக்கவுரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, ஜே.ஆர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் கருத்திலெடுக்கப்படாததால் பிரிவினை வாதம் உருவாக வழிகோலப்பட்டது.

இது போன்று, ஜே.ஆர் தான் ஆட்சிக்கு வரமுன்னர் வழங்கிய வட்ட மேசை மாநாடு தொடர்பான வாக்குறுதி ஆட்சிக்கு வந்த பின்னர் கைவிடப்பட்டது. பதிலாக, ஐக்கிய இலங்கை என்ற கருத்து 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் மேலும் வலுப் பெற்றது.

இந்திய அழுத்தம் காரணமாகவே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சில சரத்துக்கள் நிறைவேற்றப்படுவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இன்று, மத்திய அரசின் கீழ் மாகாண சபைகள் ஆளப்படுவதுடன், வடமாகாண சபைக்கான தேர்தலை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு தயக்கம் காண்பித்து வருகின்றது.

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை.**

பூகோள ரீதியாக எழுந்த நவீன-தாராளவாதத்துக்கு ஆதரவு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு, தூரநோக்குடன் ஜே.ஆர் நிறைவேற்று அதிகார முறைமையை நடைமுறைப்படுத்தினார்.

1994இல் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் வாக்களித்தது போன்று சந்திரிக்காவால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முடிவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. அல்லது மனிதாபிமான முகத்துடன் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க முடியவில்லை.

தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வொன்று அவசியமானது என்பதில் இலங்கை சுதந்திரக் கட்சியினரை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் சந்திரிக்காவினால் வெற்றி கொள்ள முடிந்தாலும் கூட, இது தொடர்பில் நியாயமானத் தீர்வை இவரால் எடுக்க முடியவில்லை. ரணிலின் சந்தர்ப்பவாதமும் இதில் உள்ளடங்கியிருந்தது.

ஒருவர் இரு தடவைகள் இலங்கையில் ஜனாதிபதியாக பதவியேற்க முடியும் என்ற நடைமுறை காணப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் சில கட்டுப்பாடுகளை வழங்குகின்றது. நீதி, மற்றும் சில முக்கிய உயர் மட்டப் பதவிகள், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமனம் வழங்கும் போது, 17ஆவது திருத்தச் சட்ட நடைமுறைகள் சில இவ்வாறான நியமனங்களில் தேசிய ஒத்துழைப்பை வழங்குவதற்கான வழியை வகுத்திருந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தொடர்ந்தும் நிலைப்பதை ஆதரிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து இடதுசாரிக் கட்சிகள் ஒருபோதும் போட்டியிடவில்லை. 2009இல் ஜனாதிபதித் தேர்தலின் முன்னர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை எதிர்காலத்தில் எவ்வாறிருக்கும் என திஸ்ஸ விதரான மற்றும் ஈ.உ.ஙி குணசேகர ஆகியோர் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் வினவியபோது, இந்த நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கான உடன்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுவிட்டதாக பதிலளித்திருந்தார். எனினும், 18ஆவது திருத்தச் சட்டமானது இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மேலும் பலப்படுத்துகின்றது.

**இடதுசாரிகளின் பணி என்ன?**

தற்போது தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை உருவாக்குவது தொடர்பாகப் பேசப்படுகிறது. இந்திய அழுத்தம் காரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனினும், தேசிய பிரச்சினை தொடர்பாக சுதந்திரக் கட்சியின் தலைமை தெளிவான நிலைப்பாடொன்றை எட்டும் வரை, இது தொடர்பில் எந்த வித பயனுள்ள நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது.

தேசிய பிரச்சினை தொடர்பாகத் தீர்வு எட்டுமாறு பொது அமைப்புக்கள் மற்றும் ஜனநாயக அமைப்புக்கள் இலங்கையில் காணப்படும் அனைத்து அரசியற் கட்சிகள் மீதும் அழுத்தம் வழங்க வேண்டும். இலங்கை அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள போதிலும், இவ்வாறான தீர்வு எட்டப்படுவதற்குத் தீவிர சிங்களவாதிகள் ஆதரவு வழங்கமாட்டார்கள். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் கட்சிகள் இந்தத் தீர்வை ஆதரித்தால், இது பெரிய பிரச்சினையாக இருக்கமாட்டாது. இலங்கை சுதந்திரக் கட்சியானது அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் ஆர்வமுடன் உள்ளதா? என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

அடுத்த பொதுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் மிக மோசமான பிரச்சினை ஒன்றுக்கு முகங்கொடுப்பர். இலங்கையானது உண்மையான குடியரசு நாடாக திகழவேண்டுமாயின், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் மற்றும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பன முக்கியமானவையாகும். அடுத்து வரும் பொதுத் தேர்தல்களில் இவை மத்திய அரசுக்கு பெரும் தலைவலியைக் கொடுக்கும்.

இந்த இரு பிரச்சினைகள் தொடர்பிலும் இலங்கை சுதந்திரக் கட்சி கவனமெடுக்காவிட்டால், இந்தக் கட்சியுடனான இடதுசாரிகளின் உறவில் விரிசல் ஏற்படும். நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் மற்றும் தேசியப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணுதல் என்பவற்றில் இடதுசாரிகள் முழுமூச்சில் ஈடுபடுவதே அவர்களின் இன்றைய கடமையாகும்.

*(நன்றி - புதினப்பலகை)*

# ஆக்கத்தின் அறிகுறியா அழிவின் வெளிப்பாடா

சுகந்தன்

பசுமைச் செழிப்பு நிறைந்த இடமாக வடபகுதியில் விளங்குவது வன்னிப்பகுதி என்பது யாவரும் அறிந்த உண்மை.

என்றும் வற்றாத குளங்களும் கால்வாய்களும் இந்தப் பகுதி மக்களின் விவசாயிகளின் உழைப்பிற்கு உரமூட்டி வந்தன.

எத்தனை இடர்கள் வந்தாலும் துன்பங்கள், பேரழிவுகள் வந்தாலும் இந்த மக்கள் சிறிதும் தளராது உறுதியாக நின்றார்கள். எப்போதும் அடுத்தவரின் உதவியை நாடி நின்றதாக வரலாறு இல்லை.

இத்தனைக்கும் காரணம் யாது?. பொன்விழையும் பூமியாம் வன்னி நிலப்பரப்பின் பசுமையும் செழுமையுமே.

எத்தனை பாதை அடைப்புக்கள், உணவு விநியோக முடக்கங்களை எல்லாம் வெற்றிகரமாக எதிர்கொள்ள மூலகாரணம் இதுவென்றால் மிகையாகாது.

வடக்கின் பெரும்பகுதி மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும். உணவு உற்பத்தியின் மையமாக வன்னி நிலப்பரப்பு விளங்கியது.

இவ்வாறான செல்வச் செழிப்பு மிக்க பூமி யுத்தப் பேரழிவைச் சந்திக்க நேர்ந்தது. யுத்தத் தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்பட்டன. மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத நச்சுப் பொருள்களை வெடிபொருள்கள் வளிமண்டலத்துக்குப் பரிசளித்து விட்டுச் சென்றன.

கொடிய போர் இடம்பெற்ற பகுதிகள் உடனடியாக நேரடி அழிவுகளைச் சந்திக்கின்ற போதும் நாளடைவிலான பக்கவிளைவுகளும் மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும்.

1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை 8.10 மணிக்கு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் அமெரிக்கா உலகப்போரின் போது ஏவிய சின்னப்பையன் இன்றுவரை ஏன் இந்த விநாடியில் பிறக்கும் சிசுக்களிலும் தனது செல்வாக்கை செலுத்துகின்றது.

சின்னப்பையன் என்பது ஜப்பான் மீது தான் வீசிய முதல் அணுகுண்டுக்கு அமெரிக்கா விளையாட்டாக வைத்த பெயர். அதே போல எமது நாட்டில் நடந்து முடிந்த யுத்தத்தின் எதிர் விளைவுகளை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்க வேண்டும்.

எமது நாட்டில் நடந்துமுடிந்த யுத்தம் தனது கோரத் தாண்டவத்தை மே 18 உடன் நிறுத்திவிட்டதாக நாம் நிம்மதியடைந்தோம். ஆனால் நாளாக நாளாக இதன் பின் விளைவுகளை நாடு சந்தித்தே தீர வேண்டிய கட்டாயம் எற்பட்டுள்ளது. போரின்பின்னரான மாற்றங்களில் கலாசார மாற்றங்கள், பொது மக்களின் வாழ்க்கை முறையிலான மாற்றங்கள் என்பன நாம் எதிர்கொண்ட மாற்றங்கள் ஆகும். அது மட்டுமல்லாமல் இதுவரை காலமாக கட்டிக்காத்து வந்த எமது பெண்களின் பெருமைகள் நடுவீதிக்கு வரும் நிலையில் உள்ளது.

வடக்கில் விதவைப் பெண்கள் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார். இது போலவே வடக்கில் நாள்தோறும் பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்காரச் சம்பவங்கள் இன்று சர்வ சாதாரணமாக அரங்கேறுவதை தினசரி பத்திரிகைகள் வாயிலா அறிகின்றோம்.

கடந்தகால யுத்தத்தின் போது பெருமளவு காடுகள் மரங்களை யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினா் தமது எதிரிகளை அழிக்கும் நோக்கில் கண்மண் தெரியாது அழித்தனர். இன்றும் பல காடுகளில் பல பெறுமதி வாய்ந்த மரங்கள் செல்களால் துளைக்கப்பட்டு தலையில்லாத முண்டங்களாகக் காட்சியளிப்பதாக நேரில் பார்த்த ஒருவர் கவலை தெரிவித்தார். இதுபோன்ற காடழிப்புக்களைப் பொறுத்துக் கொண்டிருந்த பூமித்தாய் இன்று தனது கோரத் தண்டவத்தை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார். இதன் அம்சமாக வடபகுதியில் தற்போது பல குளங்கள் வறண்டு நீரின்றி விவசாயிகளும் கால்நடைகளும் தவித்து வருகின்றன. அந்தவகையில் இன்று பரவலாகப் பேசப்பட்டு வரும் விடயமாக மாறியுள்ளது, வடபகுதியில் ஏற்பட்டுள்ள தீவிர வறட்சி நிலையே.

வடபகுதியில் விவசாயிகள் பண்ணையாளர்கள் இன்று பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குடாநாட்டில் கூட இப்போது தொடர் வறட்சி நிலவி வருவதால் கால்நடைகளின் இறப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. குளங்கள் யாவும் ஒரு சொட்டுத் தண்ணீர் இன்றி வறண்டு போயுள்ள நிலையில் கால்நடைகள் தண்ணீரைப் பெறுவதற்கு அலைந்து திரிகின்றன.

உரிய காலங்களில் குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தால் இன்றைய வறட்சிநிலையைத் தவிர்த்திருந்திருக்க முடியும்.

என்றும் இல்லாத வகையில் இன்று இரணைமடுக் குளத்திலேயே நீரில்லாத நிலை தோன்றியுள்ளது. வடக்கில் நிலத்தடி நீரை நம்பி வாழும் யாழ். மாவட்ட மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இரணைமடுக்குளத்தின் உதவியை அதிகாரிகள் நாடியிருந்தனர். குளத்தில் மேலதிக நீரைத் தேக்கி வைத்து அதன் மூலம் பிற மாவட்ட மக்களுக்கு நீர் வழங்குவதே இவர்களது திட்டமாக இருந்தது. ஆயினும் தற்போது ஏற்பட்ட வறட்சி கிளிநொச்சிப் பகுதி விவசாயிகளுக்கான நீர்த்தேவையையே கேள்விக்க உள்ளாக்கியிருப்பது வேடிக்கையாக உள்ளது. இது தொடர்பாக அந்தப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவிக்கையில் தான் கடந்த 40 வருடங்களாக இந்தப் பகுதியில் விவசாயம் செய்து வருவதாகவும் இதுவரை காலத்தில் இதுபோன்ற வறட்சியை தாம் சந்தித்ததாக தனக்கு நினைவில்லை என்றார். வழமையாக இரணைமடுக் குளத்து நீர்மட்டம் 30 அடி வரை சேமித்து வைப்பது தான் வழக்கம் எனினும் இந்த முறை குளக்கட்டின் பாதுகாப்புக் கருதி 28 அடிக்கம் குறைவாகவே நீர் சேமித்து வைக்கப்பட்டது. இந்தச் சேமிப்பு நடவடிக்கை பருவமழையை எதிர்பார்த்தே எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது மழை கைவிட்டு விட்டதால் பெரும் வறட்சியைத் தாம் எதிர்நோக்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். எனினும் அங்கு நிலங்களின் விளைச்சல் ஓரளவுக்கு சுமாராக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதைவிட குடாநாட்டில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் பகுதியான தீவுப் பகுதிகளில் இந்த வறட்சியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன் கால்நடைகள் தினம்தினம் செத்து மடிவதாகவும் இவற்றின் உடல்களை அப்புறப்படுத்தும் பணிகளில் தாம் ஈடுபட்டு வருவதாக தீவுப் பகுதி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

அதுமட்டுமல்லாமல் இயற்கை நீரூற்றுக்களைக் கொண்ட குளங்கள் கூட வறண்டுபோயுள்ள நிலையே காணப்படுகின்றது.

இதேவேளை தற்போது நிலவும் கடும் வறட்சியால் வல்லைக் கடல்நீரேரி எந்தக் காலங்களிலும் இல்லாதவாறு வற்றிக் காய்ந்து பெரும் உப்பும் விளைந்து காணப்படுகின்றது.

இங்கிருந்து பறக்கும் உப்புப் புழுதியால் விவசாயம் மற்றும் மக்களின் சுகாதாரம் என்பன பெரிதும் பாதிக்கப்படுவதாக மக்கள் முறையிட்டுள்ளனர். காய்ந்து போயுள்ள கடல்நீரேரிப் படுக்கையில் இருந்து உவர்ப்புழுதி கடந்த சில தினங்கள் வானைத்தொடும் அளவுக்கு பறந்து அயலிலுள்ள விவசாய நிலங்கள், வீடுகளில் படிகின்றது.

இது மக்களின் சுவாத்தியத்திற்கு சாதகமானதாக இல்லை.

வறட்சியின் பாதிப்புக்கள் தொடர்பாக முறைப்பாடுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எட்டியவுடன் இது தொடர்பான உரிய விளக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரவீரவிற்கு அவர் உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து வடமாகாணத்துக்குப் பறந்துவந்த அமைச்சர் இங்குள்ள நிலமைகள் தொடர்பாக ஆராய்ந்து சென்றுள்ளார். இது தொடர்பாக அமைச்சர் தெரிவிக்கையில்: தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை நான் நேரடியாகச் சென்று பார்த்து உணர்கின்றேன்.

எனினும் நாட்டில் போர் நிறைவடைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வேளையில் இவ்வாறான இயற்கைப் பாதிப்புக்கள் இடையூறாக அமைவதாகவும் இருப்பினும் நாம் அபிவிருத்தியைக் கைவிட மாட்டோம் - என்றார்.

இன்று வடபகுதியை எடுத்து நோக்குவோமாயின் யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஏற்பட்ட அபிவிருத்திகளாக பெரியபெரிய கட்டங்களே எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைத்தவிர தார் வீதிகள் காப்பற் வீதிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அபிவிருத்திகளா வறட்சிக்கு வித்திட்டன.

மற்றொரு விடயமாக இலங்கையிலேயே பெருமளவு துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள் வட பகுதி மக்களே ஆனால் இன்று புலம் பெயர் உறவுகளின் உதவிகள் இவர்களுக்குக் குவிந்த வண்ணம் உள்ளன. இதன் விளைவாக எமது இளைஞர்கள், யுவதிகள் துவிச்சக்கர வண்டிக் கலாசாரத்தில் இருந்து மோட்டார் வாகனக் கலாசாரத்துக்கு மாறியுள்ளனர். இதனால் இவர்கள் இன்று எரிபொருள்களின் விலை உயர்வையும் சர்வ சாதாரணமாக எதிர்கொள்கின்றார்கள்.

எப்போதும் இல்லாத அளவு மோட்டார் வாகனப் பயன்பாடு சூழலை மாசுபடுத்தி அதன்மூலம் சூழல் சமனிலை குழப்பி வறட்சி நிலை ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனினும் இதன் தாக்கம் இந்தளவுக்குப் பெரிதாக இருக்காது என்றே கருதப்படுகின்றது. எது எவ்வாறாயினும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் கருத்துப்படி வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி - ஆக்கப் பணிகள் இந்த வறட்சியை ஏற்படுத்தியதா அல்லது காடுகள், மரங்கள் அழிக்கப்பட்டு சூழல் சமனிலை குழம்பியதன் வெளிப்பாடாகவே பருவமழை பெய்யத் தவறி வறட்சி ஏற்பட்டுள்ளதா என்பதைச் சிந்தித்து அதற்கு ஏற்ப சூழல் சமனிலையை பேணுவதற்கான முயற்சிகளில் உடனடியாக உரிய தரப்பினர் இறங்குவதன் மூலமே பெரும் அழிவுகள் ஏற்படாது தடுக்க முடியும். இனிவரும் காலங்களிலாவது எதிர்காலத்தை உரிய முறையில் திட்டமிட்டு குளங்களை தேவைக்கு ஏற்ற அளவுகளில் ஆழப்படுத்தியும் வறட்சிக் காலங்களில் பயன்படுத்தத் தேவையான அளவு நீரை சேமித்துவைப்பதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எது எவ்வாறு இருப்பினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண வறட்சி நிலையை தவிர்க்க பருவமழை உடனடியாக பெய்ய வேண்டும். இதன் மூலமே இப்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை உடனடியாக கட்டுக்குள் கொண்டுவர முடியும்.



**காடுகள் மரங்களை யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினர் தமது எதிரிகளை அழிக்கும் நோக்கில் கண்மண் தெரியாது அழித்தனர். இன்றும் பல காடுகளில் பல பெறுமதி வாய்ந்த மரங்கள் செல்களால் துளைக்கப்பட்டு தலையில்லாத முண்டங்களாகக் காட்சியளிப்பதாக நேரில் பார்த்த ஒருவர் கவலை தெரிவித்தார்.**

நல்லூர் கந்தனின் 21 ஆம் நாள் வீதியுலாக் காட்சி



நல்லூர் பாம் சென்ரர்
# 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்.
(அ/1988)(6-7-8) தொ.பே : 021 2226944

# தேசிய ரீதியாக பிரசித்தி பெற்ற மன்னார், வங்காலை கிராமம்



எஸ்.ஆர்.லெம்பேட்

வங்காலை பிரதேச ரீதியாக மட்டுமல்ல தேசிய ரீதியிலும் உன்னத நிலையில் இருந்து கத்தோலிக்க, தமிழ்க் கிராமம் ஆகும்.

இந்தக்கிராமத்தின் வளர்ச்சியில் புனித ஆலயத்தின் பங்கும், பணியும் அளப்பரியது.

ஆன்மீக வழியில் ஒரு கட்டுக்கோப்பான சமூ கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு துறைகளிலும் சாதனை படைத்து வீறு போடுவதற்கும் உறுதுணையாக இருந்துவரு ஆலயமே.

வரலாற்று ரீதியாக மாதீர்த்த என அழை மாந்தை துறைமுகம் முக்கியத்துவம் பெற்றிருந் இந்தக்கிராமம் முக்கியத்துவம் பெற்றிருந்ததாக கூறுகின்றன. சேர்.கந்தையா வைத்தியநாதன் அ கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தை துறைமுகம் இருந்தது. இதற்கு உதவியாகக் களஞ்சிய கூடங்களும், பாலத்துறையும் பாலாவியின் தென் கரையோரத்தில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் வங்காலை (வங்கம்: கப்பல், காலை: கப்பல் தங்கும் இடம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். மாந்தை துறைமுகத்தின் வடக்கில் திருக்கேதீஸ்வரம் ஆலயம் அமைந்திருந்தது. ஆகவே இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு என்பது புலனாகின்றது.

கடலும், கடல் சார்ந்த பகுதியிலும் வாழும் நெய்தல் நில மக்களாக பரதவர் குறிக்கப்படுகின்றனர். தலைமன்னார் முதல் முள்ளிக்குளம் வரையில் பரந்து வாழும் இவ் இன மக்களே இந்த மாவட்டத்தில் பெரும்பான்மையினர் ஆவர். பரதவர்களுக்கு நீண்ட வரலாற்றுப் பின்னணி உண்டு. கப்பல் ஓட்டுவதிலும் கடல்வள வாணிபத்திலும் சிறப்புற்று விளங்கிய இவ்வினம் பற்றி பல வரலாற்று ஆசிரியர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் பரதவரின் முக்கிய தொழில்களில் ஒன்றாக முத்து, சங்கு குளித்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்கள் பாண்டி நாட்டிற்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியத்தில் நடந்ததற்கு போதிய சான்றுகள் உண்டு. இந்தியாவைக் காட்டிலும் இலங்கையில் தரமான முத்து கிடைத்ததாக கி.மு.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெகத்தனில் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த இலங்கை மன்னர்கள் சிலர் இந்திய மன்னர்களுக்கு முத்தைப் பரிசாகக் கொடுத்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன. பண்டு தொட்டு வடமேற்கு இலங்கையில் உள்ள சிலாபம் என்ற இடம் முத்துச் சிலாபம் என்ற பெயரை பெற்றிருந்ததற்கு இங்கு நடைபெற்று வரும் முத்துக் குளித்தலே முக்கிய காரணமாகும்.

பரத என்ற பெயருக்குரிய பிராமிக் கல்வெட்டுக்களில் கணிசமானவை இப்பிராந்தியத்திலிருந்து கிடைத்திருப்பது இந்தத்தொழில்களோடு இவர்களுக்கிருந்த தொடர்பைக் காட்டுகிறது எனலாம்.

பண்டைய இலங்கையில் மீன்பிடித் தொழிலோடு பரத என்ற பெயருக்குள்ள தொடர்பைக் காட்ட கல்வெட்டுக்களிலோ அல்லது பாளி இலக்கியங்களிலோ இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் அண்மையில் தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்றில் இதற்குரிய சான்று கிடைத்துள்ளது.

இங்கு இதே காலத்திற்குரிய உதிரன், தஸபிடன், மஹசாத்தன், கபதிகடலன் போன்ற தமிழ் நாணயங்களுடன் பரததிஸ என்ற பெயர் பொறித்த நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது. புஷ்பரட்ணம் இதில் காணக்கூடிய சிறப்பு என்னவெனில் பின்புறத்தில் பரததிஸ என்ற பெயரும் முன்புறத்தில் இரு மீன்கோட்டுருவமும் இடம்பெற்றிருப்பதாகும்.

இதில் வரும் மீன் சின்னங்கள் மீன்பிடித் தொழிலோடு பரததிஸ என்பவனுக்குள்ள தொடர்பைக் காட்டுகின்றது. இதில் முன்னொட்டுச் சொல்லாக வரும் பரத என்பது பரதவ சமூகத்தைக் குறிக்கலாம். பின்னொட்டுச் சொல்லாக வரும் திஸ என்ற பெயருக்கு பூச நட்சத்திரம் என்ற பொருள் உள்ளது. (இராசகோபால்)இப்பெயர் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் பல இடங்களில் வருகிறது. இப்பெயரில் குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும் இருந்துள்ளனர்.

இது பிராகிருத மொழிக்குரிய பெயராக இருப்பினும் இப்பெயரில் தமிழர்களும் இருத்ததற்குப் போதிய சான்றுகள் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் குடுவில் என்ற இடத்திலுள்ள கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்று தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்த திஸ என்ற தமிழ் வணிகன் பற்றிக் கூறுகிறது. அநுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்று திஸ தமிழன் தமிழ் வணிகர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாக வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறுகின்றது.

அண்மையில் தமிழ் நாட்டில் அழகன் குளம் என்ற இடத்தில் கிடைத்த மட்பாண்ட ஓட்டில் தீசன் என்ற பெயர் பெறப்பட்டுள்ளது (இராசகோபால்). பேராசிரியர் சிற்றம்பலம் சங்க இலக்கியத்தில் வரும் திரையர் என்ற ஒரு இனக் குழுவைக் குறித்ததெனக் கொண்டால் அந்தச் சொல்லிக்கும் இலங்கையில் பயன்பாட்டிலிருந்த திஸ, திஸ்ஸ என்ற பெயர்களுக்கும் இடையிலான தொடர்பு ஆராயப்படக் கூடியதென்பதற்கு சில சான்றாதாரங்களைக் காட்டியுள்ளார். திரை என்ற சொல்லுக்கு கடல், கடலலை, குளம் என்ற பல கருத்துக்கள் உண்டு.

இலங்கையில் கிடைத்த பரத பற்றிய 21 கல்வெட்டுக்களில் 12 கல்வெட்டுக்கள் திஸ என்பவனை பரதவ (பரத) சமூகத்துடன் தொடர்பு படுத்திக் கூறுகின்றன. இந்தக் கல்வெட்டுக்களில் வரும் வணிகன், அரச தூதுவன், கப்பல்த் தலைவன் போன்ற பதவிகள் அனைத்தும் பரததிஸ என்பவனோடு தொடர்புடையதாக உள்ளன. தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்று மீன் அமைப்பில் வடிவமைக்கப்பட்டு அதன் மத்தியில் திஸஹ என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது.

> “பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தை துறைமுகம் இருந்தது. இதற்கு உதவியாகக் களஞ்சிய கூடங்களும், பாலத்துறையும் பாலாவியின் தென் கரையோரத்தில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் வங்காலை (வங்கம்: கப்பல், காலை: கப்பல் தங்கும் இடம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். மாந்தை துறைமுகத்தின் வடக்கில் திருக்கேதீஸ்வரம் ஆலயம் அமைந்திருந்தது. ஆகவே இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு என்பது புலனாகின்றது.

சங்ககாலத்தில் கடலும் கடல் சார்ந்த பகுதியிலும் வாழ்ந்த நெய்தல் நில மக்களாகப் பரதவர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் சில இடங்களில் பரவர் எனவும், பல இடங்களில் பரதவர் எனவும் குறிக்கப்படுகின்றனர். இவற்றில் இருந்து தென்தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் அமைந்த காவிரி நதிப்படுக்கைக்கும் தாமிரபரணி ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தச்சமூகம் வாழ்ந்ததை அடையாளம் காண முடிகிறது.

இவை தற்கால திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி எனக் கூறலாம். தொலமி, சோழ நாட்டிற்கும், பாண்டி நாட்டிற்கும் இடைப்பட்ட கடல் சார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்களை பதை எனக் கூறுகிறார்.

இது பரதவரைக் குறிக்கலாம். பரதவரின் முக்கிய தொழிலாக சங்க இலக்கியத்தில் சங்கு, முத்துக்குளித்தல், மீன்பிடித்தல், வர்த்தகம் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. பாண்டி நாட்டு செல்வமாக இருந்த முத்து பற்றி சங்க இலக்கியத்திலும், வடமொழி இலக்கியத்திலும் பல குறிப்புக்கள் உள்ளன.

புறநானூறு முத்துக்குளித்தலில் ஈடுபட்ட பரதவரை பாண்டிய மன்னன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும் சோழ மன்னருக்கு அவர்கள் சவாலாக விளங்கியதாகக் கூறுகிறது. இதில் பரத என்ற பெயருக்கு முன்னால் கப்பலின் உருவம் வரையப்பட்டுள்ளது. (ஏறத்தாழ இதையொத்த கப்பல் உருவம் தமிழ் நாட்டில் அழகன் குளம் அகழ்வாய்வின் போது கி.மு.2.1 ஆம் நூற்றாண்டுக்குரிய ரௌலட்டட் மண்டபத்தில் பெறப்பட்டுள்ளது.) இது பரத என்பவனை கப்பல் தலைவனாக அல்லது, வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட வணிகனாகக் கருத இடமுண்டு.

தொலமி பாண்டி நாட்டுக் கடற்கரைப் பகுதியில் தரித்து நின்ற கப்பல் பற்றி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்தில் அம்பி, நாவாய், வங்கம், படகு, தொணி, பங்றி, திமில் என்பன கடற்போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட கலன்களாகக் குறிப்பிடப்பட்டு உள்ளன.

இதில் திமில், அம்பி என்பன மீன் பிடித்தலுக்கும் பெரிய கப்பலிலிருந்து பொருள்களை துறைமுகங்களுக்கு கொண்டு வரவும் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகிறது. வங்கம், நாவாய் நீண்ட கடற்பயணத்துக்கும் வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ் வணிகனாகிய நாவாய்த் தலைவன் தென்னிந்தியாவில் இருந்து குதிரையைக் கொண்டு வந்து விற்பனை செய்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன.

(தொடரும்)

## உன்னருளை!



எதுவுமே தெரியாத பேயனாய்
நாயிலும் கடையனாய்க் கிடந்த
எளியேனுக்கு உன்னருளை
அறிவித்தது ஏனோ நல்லூரா?
வாழும் வழி தெரியாது அல்லல்படும்
எனக்கும் நல்லருளைக் காட்டு!

இ.ஜெ.பாலன்

## நல்லூர் நாயகனே!



யானைமுகன் தம்பி அவதரித்திட்ட
தெய்வமே – முருகா!
யாழ்நகர் நல்லூரின்
நாயகனானவனே!
நம்பிவந்தோர் துயர்களைந்து
யாமிருக்கப் பயமேன்
என்றுரைத்திட்ட
கருணைக்கடலே – கந்தா!
யாமுனைத் தொழுதிடவே
ஓடோடி வந்தோம்
காட்சி தந்து அருள்புரிந்திடையா...!

த.சத்திவேல் – பருத்தித்துறை

## மனமுருகி வேண்டுகிறோம்



முருகா மால் மருகா
பூங்காற்றின் புது விருட்சத்தி
வேல் கொண்டு
வினை தீர்க்க ஓடிவா

ஓடிவரும் உந்தன் முகம்
உறுதுணையாய் என்றும்
உள்ளமதில் பதிய
மனமுருகி வேண்டுகிறேன்

வே.வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி



வேல் விமானம்
21 ஆம் திருவிழா
ஆறுமுகம் சிற்பாலயம்
ARUMUGAM SITPPALAYAM
Kalikovilady, Thirnelvely West, Jaffna. T.P : 021 222 2892
(அ/1990)(6.7.8)

# நோன்பு காலத்தில் தேர்தலைத் தவிர்க்காத அரசா முஸ்லிம் முதலமைச்சரை நியமிக்கப் போகின்றது

## இருப்பை தக்கவைக்க வாக்களியுங்கள் என்கிறார் மு.கா.வேட்பாளர்

மட்டக்களப்பு,ஓக.13

நோன்பு காலத்தில் தேர்தலைத் தவிர்க்க விரும்பாத இந்த அரசா, கிழக்குக்கு முஸ்லிம் முதலமைச்சரை நியமிக்கப் போகின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டு. மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் ஜவாஹர் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டு. மாவட்டத்தில் மு.காவின் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோன்பு காலத்தில் தேர்தலை நடத்தவேண்டாமென ஐ.ம.சு.மு. அரசிடம் பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்தனர்; மன்றாடிக் கெஞ்சினர். ஆனால், இந்த அரசு அது தொடர்பில் அலட்டிக்கொள்ளாது முஸ்லிம் சமூகத்தை அலட்சியம் செய்துவிட்டது.

நோன்பு காலத்தில் தேர்தலை வைப்பதனால் முஸ்லிம் வாக்காளர்களும், முஸ்லிம் வேட்பாளர்களும் தேர்தல் பிரசாரத்தில் சுறுசுறுப்பைக் காட்டமுடியாமல் போய்விடும். இதனைவைத்து முஸ்லிம் சமூகம் சார்ந்த பிரதிநிதித்துவத்தைக் கிழக்கு மாகாணசபையில் குறைத்து சமூகத்தின் குரல்வளையை நசுக்கிவிடலாம் என்று அரசு நினைத்துக்கொண்டுள்ளது.

இப்படிப்பட்டவர்களா முஸ்லிம் முதலமைச்சர் பதவியை எமது மண்ணுக்கு வழங்கப் போகின்றார்கள்.

1877ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆளுநரால் கொழும்பு நூதனசாலை திறந்துவைக்கப்பட்ட போது, அதனை நிர்மாணித்த வாப்புச்சி மரைக்காரிடம் ஆளுநர், "உங்களுக்கு என்ன உதவி நான் செய்ய வேண்டும்'' என்று வினவினார்.

வெள்ளிக்கிழமைகளில் நூதனசாலையை மூடி விடுங்கள். அன்றைய தினம் மட்டும் திறக்காதீர்கள். அது முஸ்லிம்களுக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார் வாப்புச்சி மரைக்கார்.

ஆனால், இன்றைய அரசு அதனை மாற்றியமைத்துள்ளது. இப்போது வெள்ளிக்கிழமைகளிலும் நூதனசாலை திறக்கப்படுகின்றது.

இதுதான் இன்று முஸ்லிம்களின் நிலை. இதனை மாற்றியமைத்து முஸ்லிம்களின் சிறிய உரிமைகளையாவது பெற்றுக்கொடுக்கும் பலத்தைப் பெறவேண்டிய சூழலில்தான் இந்தத் தேர்தலை நாம் எதிர்கொண்டுள்ளோம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டியிடுவதை இந்தக் கண்ணோட்டத்தை வைத்துத்தான் நாம் நோக்கவேண்டும். தனித்துக் கேட்டு அதிக ஆசனங்களை நாம் பெற்றுக்கொள்ளும்போது, அரசை எம் காலடியில் மண்டியிடச் செய்து எமது உரிமைகளை வென்றெடுக்க கிடைத்துள்ள ஓர் அரிய வாய்ப்பாகவே இத் தேர்தலை ஒட்டு மொத்த தமிழ் பேசும் சமூகமும் பார்க்கின்றது.

கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களும் இந்த அரசுக்கு தக்கபாடம் புகட்ட வேண்டுமாயின், மு.காவுக்கு அணிதிரண்டு வாக்களியுங்கள் என்று உரத்துக் குரல் எழுப்பும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள நாம் மு.காவுக்கே வாக்களிக்கவேண்டும் - என்றார். (ச)

## வெடி பொருளைக் கொண்டு சென்றோர் கைது



கண்டி,ஓக.13

உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிட்ட தொகையைவிட இரண்டு மடங்கு அதிகமான வெடிபொருள்களை ஹற்றன், ருவன்புர களஞ்சியத்தில் இருந்து கொண்டு சென்ற இருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

50கிலோகிராம் அமோனியா, 2கிலோ கிராம் வெடிப்புத் தூள், 50 வெடிக்க வைக்கும் வயர்கள், 5கிலோகிராம் மோட்டார் ஜெல் என்பனகைப்பற்றப்பட்ட பொருள்களில் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடி பொருள்கள் கற்பாறைகளை வெடி வைத்து தகர்ப்பதற்காகவே களஞ்சியசாலையில் இருந்து விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், மஸ்கெலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# முஹைதீன் பள்ளிவாசல் தீக்கிரை

## உன்னிச்சையில் இனந்தெரியாத குழு அடாவடி

**உழ்வு இயந்திரமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினராலேயே குறித்த பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.**

மட்டக்களப்பு,ஓக.13

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பிரதேசமான உன்னிச்சை, பாலக்கொடிச்சேனை கிராமத்திலுள்ள முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.45 மணிக்கு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினராலேயே குறித்த பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.


குறித்த மீள்குடியேற்ற கிராமத்திலுள்ள நான்கு தற்காலிக குடிசைகள் மற்றும் ஒரு கடை ஆகியனவும் இதன்போது இனந்தெரியாத குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை, குறித்த கிராமத்தில் வசித்து வந்த 52 வயதான சபினோன என்ற பெண் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு கோடரியினால் வெட்டப்பட்டு படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தப் பெண் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்துக்கு பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளுக்காகச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தம்புள்ள பள்ளிவாசலில் ஆரம்பித்த தாக்குதல் இன்று பல இடங்களிலும் உள்ள பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



சோஷலிச மக்கள் முன்னணியின் கிழக்குமாகாண மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமான செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார உரையாற்றுவதையும் அருகில் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண உட்பட பலர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.(31)

# தமிழ்த் தேசியத்தின் சக்தியை மீண்டும் நிரூபிப்போம்

## அழைக்கிறார் கூட்டமைப்பின் மட்டு.வேட்பாளர்

எருவில்,ஓக.13

கிழக்கு மாகாண சபைக்கு தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்படும் சகல பிரதிநிதிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தெரிவுசெய்வதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் சக்தியை மீண்டுமொரு தடவை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்ட அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரான சோமசுந்தரம் யோகானந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, குமரபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் இந்தத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இத் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னரான 60 ஆண்டுகால வரலாற்றை நோக்கினால் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக அஹிம்சை வழியிலும், ஆயுத ரீதியாகவும் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த இரண்டு வழிகளிலும் இலக்கை அடைய முடியவில்லை. இந்தநிலையில் சர்வதேச சமூகத்தின் உதவியை நாம் நாடிநிற்கிறோம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாததன் காரணமாகவே தேசிய பேரினவாத கட்சிகளிலிருந்தும் அதன் உதிரிக் கட்சிகளிலிருந்தும் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவானார்கள். அவர்கள் இது வரை சாதித்தது என்ன? ஒன்றுமே இல்லை! ஆனால் தாங்கள் ஏதோ சாதனை படைத்ததாகக் கூறிக்கொள்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தே தெரிவானார்கள்.

இதேபோன்ற தெரிவை மாகாணசபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் தெளிவான முடிவெடுப்பதன் மூலம் அந்தத் தேர்தல் முடிவுகள் இந்த நாட்டின் பேரினவாத சக்திகளுக்கு தகுந்த பாடம் புகட்டுவதாக அமைவது மட்டுமன்றி சர்வதேச தலையீட்டுக்கும் வழியை ஏற்படுத்துவதாக அமையும் - என்றார். (ச-31)

# நாட்டில் எந்த மதத் தலத்தையும் உடைக்க அனுமதிக்க முடியாது

## கல்முனை விகாராதிபதி தெரிவிப்பு

கல்முனை,ஓக.13

இலங்கையில் எந்த மதத் தலங்களையும் உடைப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது. கடந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் எனக்கு மிகவும் வேதனையளிக்கின்றன என்று கல்முனை நகர பௌத்த விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரோ தெரிவித்தார்.

இந்த நாட்டில் வாழ்கின்ற சகல மக்களுக்கும் சகல உரிமைகளும் இருக்கின்றன. பெரும்பான்மை, சிறுபான்மை என்றில்லாது இந்த நாட்டில் எல்லோரும் வாழவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

கல்முனை பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்தன் நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உட்படப் பொலிஸ் உயர் அதிகாரிகள், நீதித்துறை சார் உயர் அதிகாரிகள், இரா ணுவ அதிகாரிகள், அரச திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** லட்சியங்களை நிறைவேற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். சில வேலை களை அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தி லிருந்தே முடிப்பீர்கள். குழந்தைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கும். நண்பர் ஒருவரின் இரகசியத்தை அறிந்து கொள்வீர்கள். புதிய அனு பவம் பெறலாம்.

**இடபம்:** பெருமை, கௌரவத்துக்காகச் செலவு செய்வீர்கள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று வீண் பயம் கொள்ளலாம்.

**மிதுனம்:** உங்களின் உதவியுடன் நண்பர்கள் சிலர் வேலைகளை முடித்துக் கொள்வர். உறவினர்கள் தொடர்பான காரியங் களுக்காக அலைய நேரிடலாம். பொறுப்பான வேலை ஒன்றை ஏற்றுக் கொள்வதால் அலைச்சலுக்கு ஆளாகலாம்.

**கடகம்:** வியாபாரிகள் வர வேண்டிய கடன்மிகுதிகள் வருவதால் மகிழ்ச்சி அடைவர். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் ஊக்கம், உற்சாகம் குடி கொள் ளும்.

**சிங்கம்:** அயலவருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு ஏற்படும். சிலரை விமர்சனம் செய்து பேசி, அதில் இன்பம் காண்பீர்கள். சொத்து பற்றிய சிந்தனைகள் அதிகமாகும்.

**கன்னி:** முக்கிய விடயங்களில் உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். உடற்பயிற்சி, தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**நாளை**

ஆடி 30 செவ்வாய்க்கிழமை 14.08.2012
திதி: துவாதசி மு.இ. 09.09 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மரண, மா. 05. 45 வரை
சுபநேரம்: 10.35 -12.05 வரை
ராகு காலம்: 03.05-04.35 வரை

**துலாம்:** சிலர் உங்களிடம் கடன் வாங்கலாம், அல்லது நீங்கள் சிலருக்கு கடன் கொடுக்கலாம். பல நாள்களாக பிற்போட்ட வேலை ஒன்றை, அவசரமாக முடிக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகலாம். குடும்பத்தில் பொறுமை, நிதானம் அவசியம். நண்பரின் காரியங்களுக்காக அலைச்சல் இருக்கும்.

**விருச்சிகம்:** சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். நண்பர்கள் சிலருக்காக மற்றொருவரிடம் பரிந்து பேசுவீர்கள். தாய் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். எதிர்பாராத பணவரவு உண்டு.

**தனுசு:** உறவினர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எண்ணிய காரி யங்கள் எண்ணம் போல நிறைவேறும் நாள். இரண்டு, மூன்று நாள்களாக நீடித்த மனக் குழப்பங்கள் முடிவுக்கு வரலாம். நினைத்த பொருளை வாங்க தாராளமாகச் செலவிடுவீர்கள்.

**மகரம்:** உங்களை குறை காணும் நபர் ஒருவரிடம் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். ஓய் வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில் தொந்தரவு ஏற்படலாம். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** தடை, தாமதங்களால் கோபம் அடையலாம். சபலங்கள், பேராசைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சில வேலைகளை அவசரப்பட்டுச் செய்து விட்டுப் பின்னர் கவலை கொள்வீர்கள். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம்.

**மீனம்:** எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும் நாள். உடன்பிறப்புக்கள் மீதான பாசம் கூடும். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசி உங்களின் சொந்த விடயங்களை சொல்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் பேசலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | | | 8 | | | | |
| 5 | 3 | | 1 | | 2 | | | 8 |
| | | | | 4 | 3 | | 1 | |
| | | | | | 9 | 2 | 3 | 6 |
| | 8 | 6 | | 5 | | 9 | 7 | |
| 1 | 9 | 2 | 7 | | | | | |
| | 5 | | 3 | 6 | | | | |
| 6 | | | 9 | | 5 | | 2 | 3 |
| | | | | 2 | | | 5 | 9 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 8 | 7 | 5 | 1 | 9 | 3 |
| 3 | 7 | 5 | 9 | 1 | 4 | 2 | 8 | 6 |
| 8 | 1 | 9 | 2 | 6 | 3 | 4 | 7 | 5 |
| 9 | 2 | 3 | 6 | 4 | 1 | 7 | 5 | 8 |
| 7 | 4 | 8 | 5 | 3 | 2 | 6 | 1 | 9 |
| 6 | 5 | 1 | 7 | 9 | 8 | 3 | 4 | 2 |
| 5 | 3 | 7 | 4 | 2 | 9 | 8 | 6 | 1 |
| 2 | 9 | 6 | 1 | 8 | 7 | 5 | 3 | 4 |
| 1 | 8 | 4 | 3 | 5 | 6 | 9 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






இலங்கைக்கான நோர்வே தூதர் ஹில்டா ஹரல்டஸ்டட் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி திலக் கேந்திரகம, மில்கோ நிறுவனத்தின் தலைவர் சுனில் விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# தரமற்ற டீசல் விநியோகம்; அமைச்சரவைக்கும் பொறுப்பு

**பதவி விலகிய முன்னாள் பணிப்பாளர்கள் தெரிவிப்பு**

கொழும்பு,ஓக.13

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பதவி விலகல்களுக்கு ஆளான முன்னாள் பணிப்பாளர்கள், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபை மற்றும் அமைச்சரவை தொழில்நுட்ப குழு ஆகியவற்றின் மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

தரமற்ற டீசலை விநியோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபை கடந்த வியாழக்கிழமை பதவி விலகியது. எனினும் உடனடியாகவே புதிய சபை அமைக்கப்பட்டது.

இந்தநிலையில் பெற்றோலியத்துறை அமைச்சரும் ஏனையவர்களும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை தவிர்க்கும் வகையிலேயே பழைய பணிப்பாளர் சபையின் மீது குற்றச்சாட்டை முன்வைத்ததாக பதவி விலகியவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையில் தரமற்ற டீசல் விநியோகத்தினால் பல அரச வாகனங்கள் செயலிழந்துப் போனமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு 100 மில்லியன்

கொழும்பு,ஓக.13

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் திணைக்களத்துக்கு 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சையடுத்து குறித்த நிதியை வழங்க நடவடிக்கை எடுத்ததாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

போஸ்டர் உள்ளிட்ட தேர்தல் பதாகைகளை அகற்ற என 7.3 மில்லியன் ரூபா பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை இடம்பெறும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

(ச)

### கஹவத்தை இரட்டைக் கொலை:

## தகவல் வழங்கினால் ரூ.10 லட்சம் சன்மானம்

கொழும்பு,ஓக.13

இரத்தினபுரி, கஹவத்தை, கொட்டகெத்தேன பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்ய பொலிஸார் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

இந்த இரட்டை கொலை மர்மம் குறித்து தகவல் வழங்குவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்தால், 0773350556, 0777425 960, 0112422176, 0112320141 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவலை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

தகவல் வழங்குபவரின் இரகசியம் பேணப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி கொட்டகெத்தேன பகுதியில் 63 மற்றும் 33 வயதுடைய தாய், மகள் கொல்லப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பல் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தம்

**இதன்மூலம் சட்டவிரோத ஆள்கடத்தலை தடுக்கமுடியும் என்கிறார் சூளானந்த பெரேரா**

கொழும்பு,ஓக.13

குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. சட்டவிரோத ஆள்கடத்தல் மற்றும் குடியேற்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படுவோர் மற்றும் அதற்கான ஆதரவுகளை வழங்குவோருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல முயற்சிப்போரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இந்த ஆண்டில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமான முறையில் படகு மூலம் சென்றுள்ளனர். சட்டவிரோதமாக நாட்டைவிட்டு வெளியேற முயற்சிப்போருக்கு தற்போது கடுமையான தண்டனை விதிக்கப்படுவதில்லை.- என்றார்.

(ச)

**நாட்டின் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.**



## தேயிலைத்தூள் களஞ்சியசாலை முற்றுகை

மருதானை - மாளிகாவத்தைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த தேயிலைத் தூள் களஞ்சியசாலை ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட இந்த முற்றுகையின்போது இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ச)

## சிகரெட்டுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கொழும்பு,ஓக.13

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 6 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட் தொகையை கைப்பற்றியுள்ளதாக கட்டுநாயக்க சுங்க அதிகாரி ஜி.ஜி.பிரேமசிறி தெரிவித்தார்.

சார்ஜாவில் இருந்து வந்த விமானத்தில் பயணித்த நபர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு சிகரெட் தொகையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

# 6 மாத பயிற்சியின் பின் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமா?

**தெளிவுபடுத்துங்கள் என்கிறார் பட்டதாரிகள் சங்கத் தலைவர்**

கொழும்பு,ஓக.13

ஆறு மாத கால பயிற்சியின் பின் பட்டதாரிகளின் நிலையானது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. ஆறு மாதகால பயிற்சி பெற்ற அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பது பற்றி இதுவரை எந்த உறுதிப்பாடும் வழங்கப்படவில்லை. இந்த நிரந்தர நியமனம் தொடர்பாக மிக விரைவில் அரசு பட்டதாரி பயிலுநர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தம்மிக்க முனசிங்க தெரிவித்தார்.

பட்டதாரி பயிலுநர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அது எவ்வித முறைகேடோ, அரசியல்தலையீடோ இன்றி ஆண்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

தற்பொழுது இலங்கை முழுவதும் பட்டதாரிகளுக்கு ஆறுமாத காலம் பயிலுநர் பட்டதாரியாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சில மாவட்டங்களில் ஆறு மாத காலப் பயிற்சி முடிவடையும் நிலையில் உள்ளன. சில மாவட்டங்களில் ஆறு மாத காலப்பயிற்சி முடிவடைந்துள்ளன.

பயிலுநர் பட்டதாரிகளுக்குப் பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் 10,000 ரூபா அடிப்படைத் தேவைகள், போக்குவரத்துக்குப் போதுமானதாக இல்லை. இதனால் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அது மட்டுமன்றி குறிப்பாக சில மாவட்டங்களில் குறித்த கொடுப்பனவுகள் உரிய நேரத்துக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

பயிலுநர் பட்டதாரிகள் சில அலுவலகங்களில் பயிற்சிநெறிக்கு சம்பந்தம் இல்லாத விடயங்களில் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால் அவர்களது கௌரவம் பாதிக்கப்படுகின்றது.

சில அரசியல்வாதிகள் தங்களது அரசியல் தேவைக்காக பட்டதாரிகளைப் பயன்படுத்த முற்படுகின்றனர்.

ஆறு மாத கால பயிற்சியின் பின் பட்டதாரிகளின் நிலையானது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## நுரைச்சோலை அனல் மின்சார உற்பத்தியில் சந்தேகம்

கொழும்பு,ஓக.13

நுரைச்சோலை அனல் மின்சார நிலையப் பணிகளை தொடர்ந்தும் பிரச்சினையின்றி முன்னெடுக்க முடியும் என்பதில் தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலை அனல் மின்சார நிலையம் 45 பில்லியன்ரூபா செலவில் அமைக்கப்பட்டது. தற்போது இந்த நிலையத்தின் மின் பிறப்பாக்கியில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாக மேலும் 4 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். தொழில் நுட்பப் பிரச்சினை சீர் செய்யப்பட்டு மின்பிறப்பாக்கி இயக்கப்படவுள்ளது. இதன்போது உரியவகையில் அது செயற்படாது போனால், அதனைச் சீர் செய்ய மேலும் பல வாரங்கள் செல்லும் என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.(ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் ஜேசுதாஸ் அமலன்



தோற்றம்
15.09.1962


மறைவு
14.07.2012

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா?
வாழ்க்கை என்னும் பாதையிலே
நீங்கள் காட்டிய பாசமெல்லாம்
எம்மை விட்டுப் பிரிந்து போகுமா என்ன?
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

979/13, வளன்புரம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

(21443)(45-6-7)




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# உலகத் தமிழ் கல்வி மாநாடு சென்னையில் நடத்தத் திட்டம்

சென்னை,ஒக.13

உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஏற்பாடு செய்துள்ள உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டை எதிர்வரும் 25ம், 26ம் திகதிகளில் சென்னையில் நடத்துவதற்கு மேற்படி இயக்கத்தின் தலைமைப் பீடம் நேற்றுமுன்தினம் முடிவெடுத்துள்ளது.

ஏற்கனவே புதுச்சேரியில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் திருப்திகரமாக செய்யப்பட்டிருந்த வேளையில், மாநாட்டை புதுச்சேரியில் நடத்துவதிலும் பார்க்க, சென்னையில் நடத்துவதே சிறந்தது என்று பல நாட்டுக் கிளைகள் கேட்டுக் கொண்டமைக்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உலகத் தமிழ் கல்வி மாநாட்டின் பொறுப்பாளரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கல்வித் துறை பொறுப்பாளருமான கனடா வாழ் வி. எஸ். துரைராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள சில அவசியமான பணிகளை கவனிப்பதற்காக வி.எஸ். துரைராசா சென்னை சென்றுள்ளார்.

அங்கு அவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சென்னைக் கிளையின் முக்கியஸ்தர்களோடு சேர்ந்து மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்குத் தேவையான பணிகளைக் கவனிப்பார் என்று கூறப்படுகின்றது.

மேலும் சென்னையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்க் கல்வி மாநாடு தொடர்பாக இலங்கையில் செய்ய வேண்டிய சில பணிகளை ஆற்றுவதற்காக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் ஏற்கனவே இலங்கை சென்றுள்ளார்.

அவர் அங்கு தமிழ் அறிஞர்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து மாநாட்டுக்கான, அவர்களின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என வி.எஸ்.துரைராசா தெரிவித்துள்ளார். (3)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் இருபத்தோராம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு வாஸ்பதி ரஜீந்திரனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. வயலின்- செல்வி. பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம்- எஸ்.மகேந்திரன், கெஞ்சிரா -ஆர்.சிவராமன். (3-14-86)

* * *

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'பானுகோபன்வதம்' இடம்பெறவுள்ளது. (3)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு மு. திருநாவுக்கரசு "அட்சது பொடி செய்த அதிதீரா'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் சண்முகதாஸ் 'ஒரு திருமுருகன்' என்னும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அம்மன், நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக செல்வி கதிரவேலு சிவயோகராணியின் பக்திப் பாமாலை இடம்பெறும். (3-7-86)

* * *

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் மாலை 7மணிக்கு ஜாக்கிரத சைதன்யாவின் ''வெற்றிக்கு வழிகள் வேலவனது திருவடிகள்'' என்னும் கருப்பொருளில் ஆன்மிக அருளுரை இடம்பெறும்.தொடர்ந்து சிவகுமார் கஜவதனனின் தமிழ் இசைக் கச்சேரி நடைபெறும். பக்கவாத்தியங்களாக தமிழ் நாட்டைச் சேர்ந்த எஸ். சத்தியநாராயணன் மிருதங்கம் , கடம்- ஹரிகர சுப்ரமணியன். (3-14)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.13

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ''ஆசிய நாடுகளில்- குறிப்பாக தொழில்நுட்பத் துறையின் அபிவிருத்திப் போக்கு'' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சிங்கப்பூரின் பிரபல கம்பனி ஒன்றின் பிராந்திய முகாமையாளர் தில்லைநாதன் அரவிந்தன் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொள்வார். (ஒ-14)

# வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி , ஒக. 13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நான்காம், ஐந்தாம் வட்டார எல்லை வீதியை தார் வீதியாக புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுணாவில்- பருத்தித்துறை வீதியில் நுணாவில் மேற்குப் பிரிவில் உள்ள 4-5 எல்லை வீதி மட்டுவில் கிழக்கு, மட்டுவில் தெற்கு ஆகிய பிரிவு மக்கள் சாவகச்சேரிக்குச் செல்வதற்கு குறுகிய வீதி என்பதாலும், இந்த வீதியருகில் விளைவேலி ஆதன மருதடிப்-பிள்ளையார் ஆலயம் மற்றும் விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலயம் ஆகியவை உள்ளதால் அடியார்கள் சென்று வருகின்றனர். இந்த வீதி நீண்டகாலம் புனரமைக்கப்படாமல் உள்ளதால் மழைகாலங்களில் இந்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் சிரமங்களின் மத்தியில் பயணிப்பதாகவும் 400 மீற்றர் நீளமான இந்த வீதியை தார் வீதியாக புனரமைத்து தருமாறு மக்கள் நகரசபைத் தவிசாளரைக் கோரியுள்ளனர். (3-9)

## ஆசிரியர் கலாசாலை பழைய பாடத்திட்டப் பரீட்சை

பலாலி ஆசிரியர் கலாசாலையின் பழைய பாடத்திட்டப் பரீட்சை கடைசி முறையாக இம்முறை நடைபெறவுள்ளது என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. எனவே ஆசிரியர் கலாசாலைப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களும், நூனசித்தி பெற்றவர்களும் 15.08.2012 இற்கு முன்னர் விண்ணப்படிவங்களைப் பூர்த்தி செய்து தருமாறு பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் ம. இக்னேசியஸ் அறிவித்துள்ளார். இனிவரும் காலங்களில் பழைய பாடத்திட்ட பரீட்சை நடைபெறமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது. (3)

அம்மாவின் அருள் வாக்கு

ஞான வைரவர்ஆலயம் துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்மா

26/ 13 A, பெர்னாண்டோ றோட், வெள்ளவத்தை.

அம்மாவின் அருள் வாக்கு கூறப்படும் நேரம்
காலை : 8.00 - 10.30 மணி வரை
மாலை : 4.00 - 6.00 மணி வரை

திருநெல்வேலி யாழ்ப்பாணத்தில்
14.08.2012 ம்
15.08.2012 ம்
அருள் வாக்கு கூறப்படும்
தொடர்புகளுக்கு:
2 ஆவது ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P : 077 8012226
(21627)(6.7.8)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரகுமார் பிறேமறதி



அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரகுமார் பிறேமறதி நேற்றுமுன்தினம் (11.08.2012) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் சந்திரகுமாரின் அன்பு மனைவியும், சுப்பையா - இராசாத்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் சந்திரா தம்பதியரின் மருமகளும், டக்ஷன் (ராசன்), சுஜிபன் (சின்மயபாரதி வித்தியாலயம்), அபிராம் (பெரிய புலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், பிறேமதாஸ், பிரபாகரன், பிரதீபன், பிறேமகாந், பிறேமநிஜன், தர்ஷனி, பிரசாத் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தேவகுமார் மற்றும் சதீஸ், ஆசை, கண்ணன், புத்தன் (பிரான்ஸ்), உதயன், காயத்திரி, றொஷான் (யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை, தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(21715) (45.6.7)

டிஜிற்றல் பனர் பிரிண்டிங்
1 சதுர அடி 30/=
மூர்த்தி டிஜிற்றல்
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1358
(சி/2303)(2-54-7)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
NP WF xxxx என்னும் இலக்க GLAMOUR, HERO HONDA வகை
தொடர்பு : 077 4115323
(18146)(6-7-8)

வீடு விற்பனைக்கு
சோமசுந்தரம் அவெனியுவில் அமைந்துள்ள 1½ (ஒன்றரை) பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 6146434
(21713)(6-7-8)

காணி விற்பனைக்கு
கைதடி, நாவற்குழியில் ஏ-9 பாதைக்கும் ரயில் நிலையத்துக்கும் சமீபமாக 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 321 1220, 021 7900909
(216175)(6-7-8)

தார்
- 80/100, 60/70
- இமல்ஷன் CRSI, CRSII, CSS1
- கட்பெக் MC 30

பெரல், தாங்கி (பவுசர்) ஆகிய வாகனங்களில் பெற்றுக்கொள்ளலாம்
அழையுங்கள்: 072-2235460
பிடுமிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
BITUMIX (PRIVATE) LIMITED
மதவாச்சி சேமிப்பு நிலையம்
மன்னார் றோட், மதவாச்சி.
தொ.பேசி: 025-5621880, பெக்ஸ்: 025-2245278
வெப்: www.bitumix.lk
(சி/2248)

கனவு இல்லங்களை நனவாக்க...


உங்கள் கனவு இல்லங்களை நனவாக்கிக் கொள்ள உங்கள் காணியில் உங்கள் தேவைக்கேற்ப அழகிய அதிநவீன இல்லங்களை கட்டிக் கொள்ள வீடமைப்புத்துறையில் மிகத் தேர்ச்சி பெற்ற எம்மை நாடுங்கள். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட திகதியில் உங்கள் கனவு இல்லத்தில் நீங்கள் குடியேறலாம். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்டி வாடிக்கையாளர்கள் அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளதுமான ஒரே நம்பகரமான நிறுவனம்.
கே.வி. சுபா இஞ்சினியரிங்
T.P : 077 4473752, 077 8801126, கைதடி

(18144)(6-7-8)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு நயினையில்
18.01.1920

உதிர்வு சிட்னியில்
14.07.2012



### அமரர் பராசக்தி இரத்தினம்
(நயினாதீவு)


அன்பின் இலக்கணமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் குல விளக்காய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
எம்மையெல்லாம் பெற்றெடுத்து
வாழ வழி அமைத்துத் தந்த
அன்னை பராசக்தி தாயே!
அம்மா பராசக்தியே உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல நயினை நாகபூசணி
அம்பாளையும், நயினை
இரட்டாங்காலி முருகனையும்
மனதார வணங்கி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

43, கலாசாலை வீதி, திருநெல்வேலி.
077 8849 638

குடும்பத்தினர்.

[21691][45.6.7]

# பெண்களே; உங்களுக்கு சில ஆலோசனைகள்



★ ஆண்கள், உங்களிடம் பேசும் போது தனது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.

★ தேவையே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சத்தமாகச் சிரிக்காதீர்கள். இது ஆண்கள் உங்களைப் பற்றி தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்த தூண்டும்.

★ உங்கள் வீட்டில் விழா, விசேஷம் தவிர வேறு எந்த விடயத்திற்காகவும் உடன் வேலைப் பார்க்கும் ஆணை தேவையில்லாமல் வீட்டுக்கு அழைக்காதீர்கள். நீங்களும் எந்த காரணமும் இல்லாமல் துணையில்லாமல் அவர்கள் வீட்டிற்குச் செல்லாதீர்கள்.

★ எதற்காகவும், எந்த பிரச்சினைகளுக்காகவும் ஆண்கள் முன்னால் அழாதீர்கள். அழும் பெண்களை சுலபமாக ஆண்கள் திசை திருப்பிவிடுகிறார்கள்.

★ ஆண் எந்த நோக்கத்திற்காக உங்களிடம் பேசுகிறான் என்று அவன் நோக்கத்தை அவன் வார்த்தைகளிலும், கண்களிலும் இருந்து பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப்பொறுத்தே ஒரு பெண் ஆணிடம் பழகும்போது அந்த உறவை எவ்வளவு தூரத்தில் வைக்கலாம் என்று வரைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ அலுவலகத்தில் உடன் வேலை செய்யும் ஆண்களைத் தொட்டு பேசாதீர்கள். அதே போல் உங்களையும் தொட்டு பேச அனுமதிக்காதீர்கள். இதை பயன்படுத்தி ஆண்கள் உங்களிடம் தவறாக நடக்கவும் வழியுள்ளது.

# ஒரு தாயின் தாகம்



என் உயிர்மகன்
திரை கடலோடி திரவியம் தேடி
நீ எனக்கு தந்த போதும்
திரவியமான உன் திருமுக
தரிசனத்தில் தான் என்
உயிர் துடிப்பு

உனை பிரசவித்த ஜீவன்
மனப் பூரிப்படைந்த நான்
மாணவக் கோலத்தில் நீ
கம்பீரமாய்க் காட்சி தந்த நாளே
மகனே!

எத்தனை வேடங்கள்
நீ போட்டாலும்
என் இறுதிக்கிரியையின் போது
கிளப் பருவம் நீ அடைந்தாலும்
பள்ளிப் பருவச் சீருடை அணிந்து
நீ எனக்கு கொள்ளியிட வேண்டும்
அப்போது தான்
அந்தரிக்கும் அன்னையின்
தாகம் தீரும்

சு.சி.தமிழினி



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
**"திலகம்",**
**உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .**

# விழிப்பாயிரு

பிள்ளைகளுடன் தனித்து வாழும் விதவைகள் மறுமணம் செய்ய நினைக்கும் போது பிள்ளைகளின் வாழ்வை முதலில் கவனத்தில் எடுக்க வேண்டும், ஏனெனில் ஆரம்பத்தில் பிள்ளைகளுடன் "உன்னை ஏற்கிறேன்" என்று கூறும் ஆண்கள், நாளடைவில் அதனையே காரணம் காட்டி பிரச்சினையை ஏற்படுத்துகின்றனர். நாளடைவில் பிரிந்தும் விடுகின்றனர். அதன் பிறகு அப்பெண்ணை சமுதாயம் நல்ல கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. இன்னும் சில பெண்கள் மறுமணம் செய்து கொண்ட நபருக்கும் சேர்த்து உழைக்கின்றனர்.

இவை எல்லாவற்றையும் விட கொடுமையான விடயம் என்னவெனில் மறுமணம் கொண்ட நபர் மனைவிக்கும் அவள் மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் தவறாக நடந்து கொள்வது தான்.

பெண்கள் தனித்து வாழ்வது என்பது மிகவும் கடினமான விடயம் என்பார்கள். ஆனால் தனித்து வாழ முடியாமல் துணை தேடும் இவ்வாறான பெண்களுக்கு மீண்டும் அமைந்த வாழ்க்கையால் பிரச்சினை ஏற்பட்டால் அப்போது என்ன செய்ய முடியும். ஊரவர்களின் கேலிக்கும் குத்தல் பேச்சுக்களுக்கும் ஆளாக நேரிடும். பிள்ளைகள் உள்ள விதவைகள் பிள்ளைகளுக்காகவே தங்களின் தனிப்பட்ட ஆசாபாசங்களை அடக்கி வைத்து வாழவேண்டும்.

இன்னொருபுறம் கணவன் இருந்தும் அவர்களுடன் வாழமுடியாமல் தவிக்கும் பெண்கள் அனேகர். அவர்களும் ஏதோ ஒரு சூழ்நிலையில் இன்னொரு ஆணை நம்பி மோசம் போய் விடுகின்றனர். அவற்றினை நிரூபிப்பது போல் அண்மைக்காலங்களாக அதிகரித்து வரும் சட்ட விரோத கருக்கலைப்புக்களும், சிசுக்கொலைகளும், கைவிடப்படும் பச்சிளம் பாலகர்களும் உணர்த்துகின்றன.



எனவே பெண்களே எப்போதும் விழிப்போடு செயற்படுங்கள் உங்கள் எதிர்காலம் மட்டுமல்ல உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

வந்தனா
கரவெட்டி

# தாய் மனசு தங்கம்

இன்றைய காலத்து குடும்பங்களில் குறிப்பாக கணவன் வருமானம் குறைவாக எடுக்கின்ற குடும்பங்களில் அங்கே மனைவியும் சேர்ந்து உழைக்க வேண்டிய தேவை வலுக்கட்டாயமாகின்றது. கணவன் தந்தையென்ற பொறுப்பு இழக்கின்ற போதும் அங்கே இருக்கின்ற மனைவியானவள் தாயின் பொறுப்புக்களிருந்து தவறமாட்டாள் தன் பிள்ளைகளின் தேவைகளை ஈடுசெய்வதற்காக கட்டாயம் தொழில் புரியவேண்டிய நிலை அங்கே உருவாகின்றது. இருப்பினும் அந்த தாயானவள் தன்னிடம் இருக்கின்ற ஏதோ ஒரு வகையான திறமைகளை வைத்து தன் நம்பிக்கையோடு தொழிலுக்குச் செல்கின்றாள். அவள் பணிக்கு அமர்த்தப்பட்ட இடத்தில் எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும், அதனையும் தாங்கி தன் மனதை கல்லாக்கி தன் பிள்ளைகளுக்காக உழைக்க வேண்டிய கட்டாயத்தின் பெயரில் அங்கே பணிபுரிகின்றாள்.

தன் குடும்பம் வறுமையெனும் கொடுமையை அனுபவிக்கக்கூடாது என்பதற்காக தன் வயிற்றைக் கவனியாமல் தன்னை உருக்கி உழைக்கும் தாய்மையை மதிப்பதாக இருந்தால் அவள் ஆயுட்காலமும் தன் நெஞ்சிலே சுமக்கும் பிள்ளைகள், நல்ல பண்புள்ளவர்களாகவும், சமுதாயத்தில் நற்பிரஜைகளாகவும் இருப்பது தான் தாயின் உள்ளக் குளிர்மைக்கு ஊற்றாகின்றது.

எத்தனை இரவுகள் தன் தூக்கம் மறந்து கண்கள் குருடாகின்ற நிலையிலும் தன் செல்வங்களின் வாழ்வின் நிரந்தரமான பிரகாச ஒளிக்காக தன்னையே இழக்கின்றாள். இன்று எத்தனையோ குடும்பங்களில் வாழ்கின்ற தாய்மாருக்கு இயந்திரத்தை விட வேகமான வேலைப்பளு இருக்கின்றது. அந்த நிலையிலும் அவளின் ஓட்டம் தடைப்படவில்லை. ஏனெனில் பாசத்தின் உயிரோட்டத்தின் சக்தி மிகவும் வலிமை கொண்டது .

இவ்வளவு செய்யும் உத்தமிக்கு அவள் உதிரத்தில் பூத்த உயிர்பூக்கள் செய்யும் கைமாறு தான் என்ன?



உண்மையில் தன் பிள்ளை பொன் பொருளை அள்ளித் தரவேண்டும் என்று எந்தத் தாயும் நினைக்க மாட்டாள் மாறாக பார் போற்றும் படியாக நல்ல மனிதனாக வாழ்வதையே அவள் நெஞ்சம் விரும்பும் . கோடி கோடியாக பணம் இருந்தாலும் தன் பிள்ளையை சமுதாயம் போற்றிக்கூறும் போது அந்த வார்த்தையில் இருக்கின்ற நிறைவு, நின்மதி, கோடிச்சொத்துக்களில் கிடைக்காது .

வாழ்கையில் வருகின்ற அனைத்து கொடுமைகளையும் ஒரு தாயால் தாங்கமுடியும். ஆனால் தன் பிள்ளைகள் சமூகம் தூற்றும் படியாக வாழ்வதை தாங்கும் சக்தி அவளுக்கு கிடைப்பதில்லை. அந்த நிமிடமே அவள் இறந்துவிடுகின்றாள். பிற்பாடு அவளின் வெறும் கூடுதான் நடைப்பிணமாய் அலைந்து திரிகின்றது.

சு. சிவாஜினி

# ஒப்பந்ததாரர்கள் இழுத்தடிப்பு ஆமை வேகத்தில் வீதி வேலைகள்

## துணுக்காய்ப் பிரதேச செயலர் விசனம்

*அக்கராயன், ஒக.13*

*ஒப்பந்ததாரர்களின் இழுத்தடிப்புக்கள் காரணமாகவே வீதிப் புனரமைப்புக்களில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவிக்கின்றார் துணுக்காய்ப் பிரதேச செயலரும், மாந்தை கிழக்குப் பதில் பிரதேச செயலருமான சி.குணபாலன்.*

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தற்போதைய நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினாலும், உள்ளக வீதிகள் பிரதேச சபைகளினாலும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. பிரதேச சபைகளுக்குரிய வீதிகள் நெல்சிப் திட்டத்தின் கீழும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதிப் புனரமைப்புக்களின் போது பல இடையூறுகளும் காணப்படுகின்றன. சில வீதிகளில் பல மாதங்களாகக் குவித்து வைக்கப்பட்டுள்ள கிரவல் மண் மக்களின் நடமாட்டத்துக்கு இடையூறாக மாறியுள்ளது.

அத்துடன் துணுக்காய் யோகபுரம் வீதியில் குவிக்கப்பட்டுள்ள கருங்கற்கள் போக்குவரத்துக்குப் பெரிய தடையாக உள்ளன.

ஒப்பந்ததாரர்களின் இழுத்தடிப்புக்களே இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணமாக மாறியுள்ளன.

மேலும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் கட்டடப் பணிகள் இம்மாத இறுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக எமக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் வேலைகள் முடிவுற்றால் மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

## 1600 முதியவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

சமூக சேவைகள் திணைக்களத்தால் வவுனியா மாவட்டத்திலுள்ள ஆயிரத்து 600 முதியவர்களுக்கு முதியோர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிவாரண உதவி பெறும் மற்றும் பொது சன மாதாந்த உதவித் தொகை பெறும் 70 வயதுக்கு மேற்பட்டவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதேச செயலரின் ஊடாக முதியோர் தேசிய செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட பல முதியோர்கள் இதற்கு விண்ணப்பித்த போதிலும் முதற்கட்டமாக ஆயிரத்து 590 பேரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 315பேரும் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் இருந்து 254 பேரும் வவுனியா பிரதேசசெயலகத்திலிருந்து 850 பேரும் நெடுங்கேணி பிரதேச செயலகத்திலிருந்து 171 பேரும் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இதற்கு விண்ணப்பிக்காத முதியவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவைகள் அலுவலர்களிடம் விண்ணப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-400)

## வீட்டு மானியம் வவுனியாவில் நடவடிக்கை

நெளுக்குளம், ஒக.13

வவுனியாவிலுள்ள 100 குடும்பங்களுக்கு வீட்டு மானியத்தை வழங்குவதற்கான நடவடிக்கையில் புனர்வாழ்வு அதிகார சபையின் வடமாகாணக் கிளையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் உடைந்த வீடுகளை புனரமைப்பதற்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 100 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

தமது பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து ஒரு தொகுதி குடும்பங்கள் இரண்டு கட்டங்களாக இந்த நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை வவுனியா மாவட்ட புனர்வாழ்வு அதிகார சபையின் பொறுப்பதிகாரியான எஸ்.பி. செல்வராசாவுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-402)



*வறிய குடும்பங்களிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாகக் கல்விசார் உதவி நிறுவனமொன்று வவுனியா மகாறம்பைக் குளத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போது அதில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (க-402)*

## மாணவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு

வடமராட்சி, ஒக.13

பளை மகாவித்தியாலயத்தில் 5 ஆம் தரத்தில் கற்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் இரு மாணவிகளின் கல்வி ஊக்குவிப்புக்காக இரு சைக்கிள்கள் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

தாய், தந்தையரை இழந்த ஆர்.ஸ்ரீ அபிலாசினி, தந்தையார் காணாமல் போன ஆர்.துசி ஆகிய இரு மாணவிகளுக்கு, வித்தியாலய அதிபர் கே.குணபாலசிங்கம் முன்னிலையில் இந்த சைக்கிள்கள் கையளிக்கப்பட்டன.

ஐக்கிய இராச்சியம், கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் இருவர் இந்தச் சைக்கிள்களை வழங்குவதற்குத் தேவையான நிதி உதவியை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு வழங்கியிருந்தனர். (3)

## மழை வேண்டி பொங்கல் விழா

### அக்கராயன் குளத்தின் நடுவே

அக்கராயன், ஒக.13

கிளிநொச்சி அக்கராயனில் வறட்சி நீங்கி மழை பொழிய வேண்டுமென வேண்டுதல் வைத்துப் பொங்கல் விழா ஒன்று அக்கராயன் குளத்தின் நடுவே விவசாய அமைப்புக்களினால் நிகழ்த்தப்பட்டுள்ளன. அக்கராயன் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை நடத்திய விவசாயிகள் ஆலயத்திலிருந்து பொங்கல் பொருள்களை அக்கராயன் குளத்திற்கு எடுத்துச்சென்று பொங்கலை நிறைவு செய்தனர். மழை பொழிய வேண்டும். பயிர்கள் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். வறட்சி நீங்கி அக்கராயன் குளத்தில் நீர் நிரம்ப வேண்டும் என இங்கு கூடியிருந்த மக்கள் மழைக் கடவுளை வேண்டிக்கொண்டனர்.

தொடர்ச்சியாக வறட்சி ஏற்படுமானால் நெற்பயிர்கள் அழிந்து விடுவதற்

அக்கராயனில் தொடர்ச்சியாக வறட்சி ஏற்படுமானால் பிந்திய நெல் விதைப்புகளில் ஈடுபட்டவர்களின் நெற்பயிர்கள் முற்று முழுதாக அழிந்து விடுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மீள்குடியமர்வின் பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் பெருமளவு மரங்கள் வகை தொகை இன்றி அழிக்கப்பட்டதும் மழை பொழியாமைக்கான முக்கிய காரணியாக உள்ளதாகச் சூழலியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(க-18)

## மூன்றாமிடம்



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் யாழ்.சென்.ஜோன்ஸ்பொஸ்கோ வித்தியாலய மாணவன் உதயகுமாரன் சுபிதன் பேச்சுப் போட்டி பிரிவு -1 மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்த மாணவன் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Congratulation

We, the staff of the THISAIKADDI (PVT) LTD wel come the newly appointed JOINT MANA GING DIRECTOR

Ms. A. PRAVEENAH



We believe that her coming to this post will promote the dealing with us. We wish her well.

STAFF SOCIETY
THISAKADDI (PVT) LTD
37, Sivakurunathar Lane , Brown road Jaffna.
021 221 9016

(21730)(8.14)

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்தோப்பர் எட்வேட் பங்கிறாஸ்



(பண்டத்தரிப்பு பரீஸ் ப.நோ.கூ.ச முன்னாள் லிகிதரும் சமாதான நீதவானும்)

சில்லாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ் தோப்பர்எட்வேட் பங்கிறாஸ் நேற்று (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்ஜேம்ஸ் வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு. (21731)(9.14)

தகவல்:
மனைவி

### திருமதி. வைதேகி சிவசெந்தில்நாதன்



*(முகாமைத்துவ உதவியாளர், நில அளவைத் திணைக்களம், திருகோணமலை)*

அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும் இல.69 ஏ, கஸ்கிஸன் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.வைதேகி சிவசெந்தில்நாதன் நேற்று (12.08.2012) அகால மரணமடைந்துவிட்டார். அன்னார் சிவசெந்தில்நாதனின் (கணக்காளர், பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம், திருகோணமலை) அன்பு மனைவியும் அபராயுதன் (மாணவன் தரம்-4, திருகோணமலை இராமகிருஸ்ண கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) அபர்ணிகா(மாணவி-தரம்2, ஸ்ரீ சண்முகானந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் திரு.திருமதி சின்னப்பு ஐயர் விசுவலிங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், வைகுந்தனின் (அமெரிக்கா) அருமைச் சகோதரியும் தம்பிப்பிள்ளையின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு,
வரணி.

(c2348)(9.14)

தகவல்
சிவசெந்தில்நாதன்(கணவன்)

# ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்; ஆவரங்கால் இந்து 'ஹட்ரிக்'

பண்டத்தரிப்பு, ஓக.13

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது.

குறித்த சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த வியாழக்கிழமை அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. யாழ். மாவட்டத்தில் கரப்பந்தாட்டத்தில் முன்னணியில் உள்ள இந்த இரு கழகங்களுமே அண்மைக்காலத்தில் குடாநாட்டின் பல கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்களில் இறுதிப்போட்டியில் தொடர்ச்சியாக மோதி வருகின்றன. எனினும் இறுதியாக நடைபெற்ற மூன்று தொடர்களிலும் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுவந்த ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இந்தத் தொடரிலும் வென்று ஹட்ரிக் சாதனை படைத்தது.

எனவே இறுதிப் போட்டியின் முதலாவது சுற்று கடும் போராட்டத்துக்கு மத்தியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொண்டது. ஆனால் இரண்டாவது சுற்றை கடும் போராட்டத்திற்கு மத்தியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொண்டது. இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்ற உற்சாகத்துடன் மூன்றாம் சுற்றில் களமிறங்கிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் அதிரடியாக ஆடி மூன்றாம் சுற்றையும் 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொண்டது.

எனவே நான்காம் சுற்றில் கட்டாயம் வெற்றி பெறவேண்டும் என்ற நிலைக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் தள்ளப்பட்டது. இதனால் இரு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த போட்டி மிகவும் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

முதலில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமே வெற்றி பெறும் நிலை இருந்தது. எனினும் இறுதியாக சிறப்பாக செயற்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 26:24 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் நான்காம் சுற்றை தமதாக்கிக் கொண்டனர்.

முன்னைய சுற்றுக்களில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு ஐந்தாம் சுற்றில் விளையாடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால் ஐந்தாம் சுற்று 15:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் வசமானது. இதனால் 5 சுற்றுக்கள் கொண்ட இறுதிப்போட்டியில் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தனர். (ங-130)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஓக.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட் கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 4 மணி**

நவஜீவன் விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட் கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 3.30 மணி**

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்

**பி.ப. 4.30 மணி**

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப. 3.30 மணி**

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் விளையாட்டுக்கழகம்

**பி.ப. 4.30 மணி**

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் நெடியகாடு விளையாட்டுக்கழகம். (ங-23)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.13

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் பாஷையூர் மக்கள் படை அணி நடத்தும் உள்ளூர் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யுப்பிற்ரர்ஸ் அணியை எதிர்த்து கப்பினர்ஸ் அணி மோதவுள்ளது. (ங-23)

# வலைப்பந்தாட்ட ஊர்தி சுன்னாகத்தில் பவனி





வலி. வடக்கு,ஓக.13

எட்டாவது ஆசியக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டிகள் கொழும்பில் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான விழப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக இலங்கை மக்கள் வங்கியின் ஆதரவுடன் இலங்கை வலைப்பந்தாட்ட சங்கம், வலைப்பந்தாட்டப் போட்டிக்கான பிரமாண்டமான பந்தினை ஊர்தியாக்கி அதில் கையொப்பம் இடும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை இலங்கை முழுவதும் மேற்கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு குறிப்பிட்ட பந்தை தாங்கிய ஊர்தி வருகை தந்தது. பின்னர் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஊடாக சுன்னாகம் இலங்கை வங்கிக்கு ஊர்தி சென்றது.

இந்த நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், வலி. வடக்குப் பிரதேச சபைத்தலைவர் சோ.சுகிர்தன் மற்றும் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். பார்த்தீபன் மற்றும் பாடசாலை வலைப்பந்தாட்ட அணிகளின் தலைவிகள் கல்லூரி அதிபர்கள் எனப் பலரும் கையொப்பம் இட்டனர்.

இந்த ஊர்தி பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் பங்களிப்புடன் சுன்னாகம் நகரப் பகுதியில் வலம் வந்தது. (ங-86-23-9)

# தென்மாகாண அணியிடம் வீழ்ந்தது வடமாகாணம்

யாழ்ப்பாணம், ஓக.13

38ஆவது தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் ஆண்களுக்கான போட்டியில் வடமாகாணத்தை வீழ்த்தி தென்மாகாண அணி வெற்றிபெற்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தென்மாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து வடமாகாண உதைபந்தாட்ட அணி மோதிக்கொண்டது. ஆட்டம் முடிவடையும் வரை இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. சமநிலை தவிர்ப்பு உதைகளும் சமநிலையில் முடிவடைந்தததால், இரு அணியினருக்கும் மேலதிகமாக ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன்போது தென்மாகாண அணி ஒரு கோல் அடித்து வெற்றியையும், சம்பியன் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டது. (ங-23)

# ஊரெழு றோயல் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.13

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடரின் ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

# தரவரிசைப் பட்டியலில் கே.ஸி.ஸி.ஸி. முதலிடம்



யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்படும் சுற்றுப் போட்டிகளின் முடிவுகளின் அடிப்படையில் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுவருகிறது. இந்தப் பட்டியலில் 07.08.2012 வரை நடைபெற்ற 86 போட்டிகளின் முடிவுகளின் படி கே.ஸி.ஸி.ஸி. அணி 105.5 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

இதுவரைகாலமும் முதலிடத்தில் இருந்த யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 97.9 புள்ளிகளைப் பெற்று 2 ஆவது இடத்திலும், யாழ்.பல்கலைக்கழக அணி 89.1 புள்ளிகளைப் பெற்று 3 ஆவது இடத்திலும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 79.5 புள்ளிகளைப் பெற்று 4 அவது இடத்திலும், சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி 54 புள்ளிகளைப் பெற்று 5 ஆவது இடத்திலும், பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி 52.7 புள்ளிகளைப் பெற்று 6 ஆவது இடத்திலும், யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 49.5 புள்ளிகளைப் பெற்று 7 ஆவது இடத்திலும், ஸ்ராண்லி விளையாட்டுக் கழக அணி 31.7 புள்ளிகளைப் பெற்று 8 ஆவது இடத்திலும் யூனியன் விளையாட்டுக் கழக அணி 26.1 புள்ளிகளைப் பெற்று 9 ஆவது இடத்திலும், கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக 'பி' அணி 23.9 புள்ளிகளைப் பெற்று 10 ஆவது இடத்திலும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி 22.9 புள்ளிகளைப் பெற்று 11 ஆவது இடத்திலும், திருநெல்வேலி கிரிக்கெட் அணி 21.4 புள்ளிகளைப் பெற்று 12 ஆவது இடத்திலும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணி 20 புள்ளிகளைப் பெற்று 13 ஆவது இடத்திலும், கிறாஸ் கொப்பர்ஸ் அணி 16.3 புள்ளிகளைப் பெற்று 14 ஆவது இடத்திலும், ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி 14.1 புள்ளிகளைப் பெற்று 15 ஆவது இடத்திலும், ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 12.5 புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்திலும், நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 5.4 புள்ளிகளைப் பெற்று 17 ஆவது இடத்திலும், ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி 3.6 புள்ளிகளைப் பெற்று 18 ஆவது இடத்திலும், சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணி 3.5 புள்ளிகளைப் பெற்று 19 ஆவது இடத்திலும், ஈகிள் விளையாட்டுக் கழக அணி 2.6 புள்ளிகளைப் பெற்று 20 ஆவது இடத்திலும் உள்ளன.

மேற்படி பட்டியலில் ஆண்டு இறுதியில் முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு "ஜோர்ஜ் வெப்ஸ்ரார்" வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களையும் பெறும் அணிகள் 2013 ஆண்டு நடைபெற இருக்கும் முக்கோண வெற்றிக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறவுள்ளன. (ங-23)



# ஓய்ந்தது ஒலிம்பிக்

**16 தினங்களாக லண்டனில் கோலாகலமாக நடைபெற்று வந்த ஒலிம்பிக் திருவிழா நேற்றுடன் முடிவுக்கு வந்தது. லண்டன் ஒலிம்பிக்கில் ஆரம்பத்தில் பின்தங்கியிருந்த அமெரிக்கா இறுதித் தருணத்தில் மீண்டும் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்து ஒலிம்பிக்கில் அசைக்கப்பட முடியாத நாடாக மீண்டும் முடிசூடிக் கொண்டது.**

ஏனைய ஒலிம்பிக் போட்டிகளை விடவும் லண்டன் ஒலிம்பிக்கில் அமெரிக்கா பெரும்போட்டியை எதிர்கொள்ள நேரிட்டது. சொந்த நாட்டில் கடந்த முறை ஒலிம்பிக் போட்டியை நடத்தியபோது கூட காட்டாத திறமையை லண்டன் ஒலிம்பிக்கில் சீன வீரர்கள் வெளிப்படுத்தினர். இதனால் ஒலிம்பிக்கின் ஆரம்பத் தினங்களில் பதக்கப்பட்டியலில் தொடர்ந்தும் சீனாவே முன்னிலை பெற்றிருந்தது. ஆயினும் சீனாவை விடாப்பிடியாகத் துரத்திய அமெரிக்கா கடைசி நாள்களில் சீனாவை முந்தியது. எனினும் மீண்டும் சீனா அமெரிக்காவைப் பின்தள்ளியது. இருப்பினும் இறுதி நாள் அன்று மீண்டும் அமெரிக்காவின் கை ஓங்கியது.

இதில் உலகின் மிகப் பெரிய நாடுகளில் ஒன்றான இந்தியா 2 வெள்ளி 4 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 55ஆவது இடத்தையே பெறமுடிந்தது. லண்டன் ஒலிம்பிக்கில் 79 நாடுகள் ஆகக் குறைந்தது ஒரு பதக்கத்தையாவது வென்றெடுத்திருந்தன. ஆனால் 7 வீரர்களுடன் 27 அதிகாரிகளுடனும் சென்ற இலங்கை அணி எந்தவொரு பதக்கத்தையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா முதலிடத்தில்

நேற்றிரவு வரையான பதக்கப்பட்டியலின் படி 46 தங்கம், 29 வெள்ளி, 29 வெண்கலம் என மொத்தமாக 104 பதக்கங்களை அள்ளி லண்டன் ஒலிம்பிக்கில் அமெரிக்கா முதலிடம் பிடித்தது. 38 தங்கம், 27 வெள்ளி, 22 வெண்கலம் ஆகிய பதக்கங்களுடன் மொத்தமாக 87 பதக்கங்களைப் பெற்று சீனா இரண்டாம் இடத்தையும், ஒலிம்பிக் போட்டி நடத்திய பிரிட்டன் 29 தங்கம், 17 வெள்ளி, 19 வெண்கலம் என மொத்தமாக 65 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் தமதாக்கிக் கொண்டன.

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

12.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 46 | 29 | 29 | 104 |
| சீனா | 38 | 27 | 22 | 87 |
| பிரிட்டன் | 29 | 17 | 19 | 65 |
| ரஷ்யா | 24 | 25 | 33 | 82 |
| தென்.கொரியா | 13 | 8 | 7 | 28 |
| ஜேர்மனி | 11 | 19 | 14 | 44 |
| பிரான்ஸ் | 11 | 11 | 12 | 34 |
| இத்தாலி | 8 | 9 | 11 | 28 |
| ஹங்கேரி | 8 | 4 | 5 | 17 |
| ஆஸ்திரேலியா | 7 | 16 | 12 | 35 |

## 5 ஆவது முறையும் அமெரிக்கா

லண்டன் ஒலிம்பிக்கில் மகளிருக்கான கூடைப்பந்து போட்டியில் அமெரிக்க அணி தொடர்ச்சியாக 5வது முறையாக தங்கம் வென்றது. லண்டனில் நடைபெற்றுவந்த ஒலிம்பிக்கின் கூடைப் பந்து போட்டியில் மகளிருக்கான பிரிவில் அமெரிக்கா, ரஷ்யா அணிகள் மோதின.

இதில் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய அமெரிக்க வீராங்கனைகள் 86:50 என்ற புள்ளி கணக்கில் முன்னிலை பெற்று பிரான்ஸை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றனர். இது ஒலிம்பிக் கூடைப் பந்து போட்டியின் மகளிர் பிரிவில் அமெரிக்கா பெறும் 5வது தங்கப்பதக்கமாகும்.

# இந்தியாவுக்கு இன்னொரு வெள்ளி



லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவர் மல்யுத்தப் போட்டியின் 66 கிலோ உடல் எடைப்பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய இந்திய வீரர் சுஷில் குமார் வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

லண்டனில் நடைபெற்று வந்த ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவருக்கான 66 கிலோ உடல் எடைப்பிரிவின் மல்யுத்த போட்டியின் இறுதிச்சுற்று நேற்று நடைபெற்றது.

இதில் இந்திய வீரர் சுஷில் குமார், ஜப்பான் வீரர் யோனிமிட்சுவுடன் மோதினார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற துருக்கி வீரரிடம் 0:2 என்று பின் தங்கியிருந்த நிலையில் மீண்டு வந்து வென்ற சுஷில் குமார், காலிறுதியில் உஸ்பெகிஸ்தான் வீரரை அபாரமாக வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

இறுதியில் ஜப்பான் வீரர் யோனிமிட்சுவிடம் மோதினார். முதல் சுற்றில் குமாரை புரட்டிப் போட்டு ஒரு புள்ளி பெற்று வென்ற ஜப்பான் வீரர் இரண்டாவது சுற்றில் சுஷில் குமாரை அப்படியே தூக்கி தலைகீழாக்கி 3 புள்ளிகள் பெற்றார். பிறகு சுஷில் ஒரு புள்ளி எடுத்தார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது போதவில்லை. இறுதியில் 4:1 என்ற கணக்கில் ஜப்பான் வீரர் தங்கம் வென்றார். சுஷில் இந்தியாவுக்காக வெள்ளி வென்றார்.

இதன் மூலம் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 6ஆக அதிகரித்துள்ளது. ஒலிம்பிக்கில் இந்தியா அதிக பதக்கங்கள் வென்றது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

(ந)




# பிரேசிலின் கனவைத் தகர்த்தது மெக்சிக்கோ

லண்டன் ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டியில் பிரேசிலை வீழ்த்தி மெக்சிகோ அணி தங்கப்பதக்கத்தை வென்றது.

லண்டனில் நடைபெற்று வந்த ஒலிம்பிக்கில் ஆடவருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேசில்-மெக்சிகோ அணிகள் நேற்றுமுன்தினம் மோதின.

5 முறை உலகக் கிண்ணத்தை வென்றுள்ள பிரேசில் அணி ஒலிம்பிக்கில் மட்டுமே இதுவரை சாம்பியன் ஆனதேயில்லை. இந்த முறையாவது ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல வேண்டும் என்ற பிரேசிலின் கனவு இந்த முறையும் பொய்த்து போய்விட்டது.

மெக்சிகோ அணியின் ஒரிபே பெரல்தா முதலாவது நிமிடத்தில் ஒரு கோலும், பிற்பாதியில் 75வது நிமிடத்தில் மற்றொரு கோலும் அடித்து அசத்தினார். பிரேசில் அணியால் கடைசி நிமிடத்தில் மட்டும் ஒரு கோல் அடிக்க முடிந்தது.

முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ அணி வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றது. தோல்வியடை[illegible] அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர்க்கான உதைபந்தாட்டப் போட்[illegible] 2:1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை[illegible]



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**Web Application Development**
**PHP + MySQL**
Call Us: 0776577359
By R.Kumaran-B.Sc.
சிறந்த வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காக.....
100% Practical oriented
புதிய பிரிவு ஆரம்பம் MIS
Open Source College
கொக்குவில் பூநாறி மரத்தடி
74, சபாபதி வீதி, KKS வீதியிலிருந்து 200 m

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஊடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் B.A.தமிழ் சிறப்புப்பட்டம்

- க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி
- இம் மாதம் 25 ஆம் திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்பவர்கள் எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறும் பரீட்சையில் தோற்றமுடியும்
- பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது

தொடர்புகளுக்கு:-
தென்மராட்சியில் பாரதி இன்ஸ்ரிரியூட், மீசாலை மேற்கு, மீசாலை 077 805 1173
யாழ். நகரில் சிந்து அக்கடமி, ஞானக்குழந்தை இல்லம், யாழ். வீதி, யாழ்ப்பாணம் 077 583 5372
(21673)(6.9.14)

**மணல் விற்பனைக்குண்டு**
கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
**4 டிரக்டர் - 19500/=**
தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462
(21718)

**மக்கி விற்பனைக்குண்டு (White Gravel)**
அத்திபார உட்புறம் நிரவுவதற்கு, உள்ளூர் வீதிகள் புனரமைப்பதற்கு, தாழ்ந்த நிலங்கள் சீர்செய்வதற்கு உகந்த மக்கி விற்பனைக்குண்டு.
**விற்பனை விலை**
யாழ். மாவட்டம் எங்கும் (தீவகம் தவிர்ந்த) கியூப் 3000/= இற்கு உரிய இடத்தில் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
S.N.S. Matereal Supplier
Sankaththanai,
Chavakachchery.
T.P:- 0776491027,
0779400963
(18145)(3.6.7)

ஒரு நாள் தரப்படுத்தல்கள்
இங்கிலாந்து
தென்னாபிரிக்கா
இந்தியா
அவுஸ்திரேலியா
இலங்கை
பாகிஸ்தான்
மேற்கிந்தியத் தீவுகள்
நியூசிலாந்து
பங்களாதேஷ்
சிம்பாவே
அயர்லாந்து
நெதர்லாந்து
கென்யா

'ரி-20' தரப்படுத்தல்கள்
தென்னாபிரிக்கா
இங்கிலாந்து
இலங்கை
இந்தியா
மேற்கிந்தியத் தீவுகள்
பாகிஸ்தான
நியூசிலாந்து
பங்களாதேஷ்
ஆஸ்திரேலியா
அயர்லாந்து
சிம்பாப்வே (5)

# ஆஸியை வீழ்த்தியது இங்கிலாந்து

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வருடாந்த மாற்றங்களின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள புதிய தரப்படுத்தல்களின் அடிப்படையில் இங்கிலாந்து அணி டெஸ்ட் மற்றும், ஒரு நாள் சர்வதேசப் போட்டியின் தரப்படுத்தலில் முதலிடத்திலும், 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான தரப்படுத்தலில் இரண்டாவது இடத்திலும் காணப்படுகிறது.

டெஸ்ட் போட்டிக்கான வருடாந்த மாற்றம் இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடருக்கு முன்னேரே இடம்பெற்றிருந்த நிலையில் ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான தரப்படுத்தலே புதிதாக வெளியிடப்பட்டுள்ளன.

புதிதாக வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல்களின் அடிப்படையில் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து முதலிடத்திலும், தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, இதுவரை காலமும் முதலிடத்தில் காணப்பட்ட ஆஸ்திரேலிய அணி நான்காவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் வீரர்கள் ஒழுக்கமில்லாதவர்கள்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் ஒழுக்கமின்மை ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் இஜாஸ் பட் தெரிவித்துள்ளார். தனது பதவிக்காலத்தின் போது ஒழிக்கப்பட்ட இவை மீண்டும் பரந்தளவில் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அணியில் ஒழுக்கமின்மைச் செயற்பாடுகள் மீண்டும் எழுந்துள்ளதாகத் தான் அறிந்ததாகத் தெரிவித்த இஜாஸ் பட், தனது பதவிக்காலத்தில் இவற்றுக்கெதிராகத் தான் கடுமையான நடவடிக்கை எடுத்ததாகவும், தற்போது அந்த வீரர்கள் அணியில் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதால் ஒழுக்கமின்மைச் செயற்பாடுகள் மீண்டும் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உதாரணத்திற்காக தனது காலத்தில் ஒழுக்கமின்மைக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட கம்ரான் அக்மல் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக இஜாஸ் பட் தெரிவித்தார். தனது காலத்தில் ஒழுக்க மின்மைக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட அவர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளமை வித்தியாசமானது எனத் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டத்தின் போது மோசமான திறமை வெளிப்பாடுகள் காரணமாக கம்ரன் அக்மல் நீக்கப்பட்டதாகவும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அவரது சகோதரர் உமர் அக்மல் உபாதையென பொய் கூறியதாகத் தெரிவித்த இஜாஸ் பட், அதற்கெதிராக இருவருக்கும் அதிகபட்சத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட குழப்பத்தை ஏற்படுத்துபவர்களின் திறமையைக் கருத்திற் கொண்டு சிலரை அணியில் வைத்திருந்தாலும் அவர்கள் மீது தீவிரக் கண்காணிப்புக் காணப்பட்டதாகத் தெரிவித்த இஜாஸ் பட், ஆனால் தற்போது மீண்டும் குறித்த நபர்கள் ஒன்று சேர்வது அணிக்குப் பாதகமாக அமையும் எனத் தெரிவித்தார். (5)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 18-08-2012 | Batch II:19-08-2012 | Batch III 20-08-2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

(சி/2323)
2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

இதயத்துடிப்பு
நவீன தொழில் நுட்பத்துடன்
கலோரி இழப்பு
OrbiTrac
ரூபா 13,000/= இல் இருந்து 8 வகையான OrbiTrac தற்போது விற்பனையாகின்றது.
மற்றும் Trade mill (Electronic), Home Gym, Bench, AB Circle, AB Pro, AB Glider போன்றவற்றிக்கு
உற்சவ கால சலுகை
OrbiTrac ற்கு Scale ஒன்று இலவசம்







ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல. 06, ஜிம்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 3490 , 077 8060267
18.09.2012 வரை மட்டுமே
(சி/2342)(6.7.8)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.